# TNPSC தேர்வுப் பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் செப்டம்பர் - 2017

www.tnpscthervupettagam.com




SHANKAR IAS ACADEMY™

Plot No.1742, Ist Floor, 18th Main Road, Anna Nagar, Chennai – 600 040.

Phone : 044-26216435, 64597222, 4353 3445, Mobile : 94441 66435

www.shankariasacademy.com

SHANKAR IAS ACADEMY
THE BEST IAS ACADEMY IN SOUTH INDIA SINCE 2004

TNPSC Thervu Pettagam
Information is a Blessing
A Shankar IAS Academy Initiative

# பொருளடக்கம்


1. TNPSC துளிகள் ........ 3

2. தமிழ்நாடு செய்திகள் ........ 3

3. தேசியச் செய்திகள் ........ 6

4. சர்வதேசச் செய்திகள் ........ 25

5. பொருளாதாரச் செய்திகள் ........ 34

6. அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் ........ 35

7. சுற்றுப்புறச்சூழல் ........ 41

8. மாநிலம் ........ 45

9. விளையாட்டுச்செய்திகள் ........ 55

10. இதரச் செய்திகள் ........ 58

# TNPSC துளிகள்

- தமிழக வனத்துறை பழங்குடியின மாணவர்களுக்கு "புலிக்குட்டிகள்" என்ற திட்டத்தின் கீழ் பயிற்சி வகுப்புகளை ஆரம்பித்துள்ளது. சத்தியமங்கலம் புலிகள் சரணாலயத்திற்கு உட்பட்ட கிராமப் பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்பயிற்சி வகுப்புகளுக்காக உள்ளூர் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

### ஆபரேஷன் சாகர் கவாச்

- தீவிரவாத ஊடுருவுதலை தடுப்பதற்கான ஆபரேஷன் சாகர் கவாச் எனும் கடலோர பாதுகாப்பு ஒத்திகை தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டுள்ளது.
- தமிழக கடலோர பகுதிகளின் கடலோர பாதுகாப்பிற்காக 6 மாதங்களுக்கு ஒருமுறை இந்த ஒத்திகை மேற்கொள்ளப்படுகின்றது.
- 2008 ஆம் ஆண்டின் மும்பை தாக்குதலை தொடர்ந்த இந்த பாதுகாப்பு ஒத்திகை நாட்டின் கடலோர மாநிலங்கள் அனைத்திலும் மேற்கொள்ளப்படுகின்றது.
- தொழிலாளர் மற்றும் வேலை வாய்புத் துறையின் கீழ் செயல்படும் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் இயக்குநராக கு.காளியப்பன் நியமிக்கப்பட்டுள்ளார்.

# தமிழ்நாடு செய்திகள்

### 128 பேருக்கு அண்ணா பதக்கம்: முதல்வர் உத்தரவு

- முன்னாள் முதல்வர் அண்ணா பிறந்தநாளை முன்னிட்டு, தமிழக காவல் துறை -சீருடை அதிகாரிகள் -பணியாளர்கள் 128 பேருக்கு அண்ணா பதக்கம் வழங்கப்படவுள்ளது.
- தமிழக காவல் துறை, தீயணைப்பு - மீட்புப் பணித் துறை, சிறைத் துறை, ஊர்க்காவல் படை மற்றும் தமிழ்நாடு விரல் ரேகைப் பிரிவு அலுவலர்கள் சிறப்பாகப் பணியாற்றியதை அங்கீகரிக்கும் வகையிலும், அர்ப்பணிப்புடன் அவர்கள் பணிபுரிந்ததை பாராட்டும் வகையிலும், ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 15 -ஆம் நாள் அண்ணாவின் பிறந்த நாளன்று, தமிழக முதல்வரின் பதக்கங்கள் அறிவிக்கப்பட்டு, வழங்கப்பட்டு வருகின்றன.

### உட்செலுத்தப்படும் கருத்தடை மருந்துகள் தமிழ்நாட்டில் அறிமுகம்

- தமிழ்நாடு சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை துறை 'அந்தரா' (Antara) என்ற திட்டத்தின் கீழ் உட்செலுத்தக் கூடிய கருத்தடை மருந்துகளை அறிமுகப்படுத்தியுள்ளது .
- குழந்தைகள் பிறப்புக்கு இடையே போதிய இடைவெளி இல்லாததால் உடல் ரீதியாக சிக்கல்கள் ஏற்பட்டு பிரசவத்தின்போது தாய்மார்கள் மற்றும் பச்சிளங்குழந்தைகள் குழந்தைகள் உயிரிழக்கின்றனர்.
- இதனைத் தடுக்கும் விதத்திலும், மக்கள் தொகைப் பெருக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்கிலும் டி.எம்.பி.ஏ / டிப்போ மெட்ராக்சி ப்ரோஜெஸ்டெரோன் அசிடேட் (Depot Medroxy Progesterone Acetate - DMPA) எனும் ஊசி மூலம் உட்செலுத்தக்கூடிய கருத்தடை மருந்துகள் 'அன்டரா' திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றன.
- மாநிலத்தின் அனைத்து அரசு மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ கல்லூரிகளில் கிடைக்கும்

என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- 18 முதல் 45 வயதிற்கு உட்பட்ட பெண்களால் இந்த மருந்தினைப் பயன்படுத்த முடியும். மேலும் இந்தக் கருத்தடை மருந்தின் விளைவுகள் மீளக்கூடியவை ஆகும், அதாவது இந்த மருந்தின் பயன்பாட்டை நிறுத்திய மூன்று மாதங்களில் பெண்கள் மீண்டும் கருவுற முடியும்.

## தமிழ்நாட்டில் அவசர சிகிச்சை மற்றும் மீட்பு மையங்கள்

- தேசிய சுகாதாரக் கொள்கையின் கீழ் தமிழ்நாடு முழுவதும் வீடற்ற மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஐந்து அவசர சிகிச்சை மற்றும் மீட்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன .
- இம்மையங்கள் அமைந்துள்ள இடங்கள் வருமாறு ,
    - வேலூர்
    - திருப்பூர்
    - திருவண்ணாமலை
    - தேனி
    - விழுப்புரம்
- மனநல ஆரோக்கியம் மற்றும் வறுமை ஒழிப்பு பணிகளில் ஈடுபடும் தி பான்யன் (The banyan) எனும் அரசு சாரா தொண்டு நிறுவன உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.
- அரசு நடத்தும் மற்றும் அரசின் நிதியுதவி பெரும் மருத்துவமனைகளில் , வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள வீடற்ற மனநலம் பாதிப்பு உடையவர்கள் முறையான சிகிச்சையும் , கட்டணமற்ற மருத்துவ சேவையும் பெற உரிமை உடையவர்கள் எனும் மனநல சுகாதார சட்டம் , 2017 (Mental healthcare Act, 2017) இன் படி இத்திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது

## கால்நடைகளுக்கு தடுப்பூசி முகாம்

- கால்நடை வளர்ப்புத் துறை வனத்துறையுடன் இணைந்து , கோவை மாவட்ட பழங்குடியின கிராமங்களில் ஆந்த்ராக்ஸ் (Anthrax) தடுப்பூசி முகாம்களை நடத்தியது.
- இத்தகைய முகாம்கள் செப்டம்பர் 21 வரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## 18 ஆளுங்கட்சி அதிருப்தி எம்.எல்.ஏ-க்கள் தகுதி நீக்கம்

- தமிழ்நாடு சட்டசபை பேரவைத் தலைவர்/சபாநாயகர் 18 ஆளுங்கட்சி அதிருப்தி எம்.எல்.ஏக்களை தகுதி நீக்கம் செய்துள்ளார்.
- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 10வது அட்டவணையின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள 1986 ஆம் ஆண்டின் 'தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினர்களின் (கட்சி மாறுதல் காரணம் கொண்டு தகுதியின்மையாக்குதல்) விதியின்' கீழ் 18 எம்.எல்.ஏக்களையும் சபாநாயகர் தகுதி நீக்கம் செய்துள்ளார்.
- இந்திய அரசியலமைப்பின் பத்தாவது அட்டவணையின் விதி 191(2)ன் படி இந்த எம்.எல்.ஏக்கள் தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

### விதி 191(2)

- ஒருவர் பத்தாவது அட்டவணையின்படி தகுதி நீக்கம் செய்யப்பட்டால் அவர் மாநில சட்ட மன்றம் அல்லது மாநில சட்டமேலவையின் உறுப்பினர் பதவியிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்படுகிறார் என விதி 191(2) மொழிகிறது.

## புலிகாட் உவர்நீர் ஏரி – தடுப்பு சுவர்கள் கட்டுமானம்

- இந்தத் தடுப்பு சுவர்கள் ஏரியில் உள்ள நீர் தூர்ந்து போய் விடுவதை தடுப்பதற்கு உதவும். மேலும் இது உயிரிப் பன்மையை பாதுகாக்க உதவுகிறது.
- இந்த திட்டம் சென்னை ஐ.ஐ.டி-யில் உள்ள பெருங்கடல் பொறியியல் துறையினால் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வின் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- ஏரியில் வண்டல் படிவுகள் படிவது மிகுந்த கவலையளிக்கும் விஷயமாகும். ஒருவேளை ஏரியின் முகத்துவாரம் மூடிக் கொண்டால் ஏரியில் உள்ள கடல் உணவு மற்றும் உயிரினங்கள் கடுமையாக பாதிக்கப்படும். அதன் எண்ணிக்கை பெருமளவு குறைந்துவிடும் இந்த தடுப்புச் சுவர்கள் அதன் முகத்துவாரத்தை வண்டல் படிவுகளில்லாமல் பாதுகாக்கும்.
- புலிகாட் ஏரி இந்தியாவின் இரண்டாவது மிகப்பெரிய உவர்நீர் ஏரி ஆகும்.

## இஸ்லாமியக் கல்வியல் கழகத்தின் தலைவராக ஆற்காடு நவாப்

- ஆற்காட்டு இளவரசரான நவாப் முஹம்மது அப்துல் அலி தென்னிந்திய இஸ்லாமியக் கல்வியல் கழகத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இவரது பதவிக்காலம் 3 ஆண்டுகள் ஆகும்

## புதிய தண்ணீர் சேமிப்பு தொழில்நுட்பம்

- வருவாய் நிர்வாக ஆணையராக உள்ள K. சத்யகோபால், “வேர் மண்டல நீர்ப்பாசன தண்ணீர் சேமிப்புத் தொழில்நுட்பத்தை” (Water Conserving root zone irrigation technique) கண்டுபிடித்துள்ளார்.
- மண்ணின் ஆழமான அடுக்குகளில் தண்ணீர் தேக்கம் மற்றும் ஈரப்பத அளவை அதிகரித்து பயிர்களின் வளர்ச்சியை ஊக்குவிப்பதாக உள்ள இத்தொழில்நுட்பம் மிகவும் குறைவான செலவுடையது (Cost Effective).
- இத்தொழில்நுட்பம் சொட்டு நீர்ப் பாசன வசதியுடன் இணைத்து உபயோகப்படுத்த வல்லது.
- பிற வழக்கமான நீர்ப்பாசன முறைகள் மற்றும் மேற்பரப்பு சொட்டுநீர்ப் பாசன முறைகளைப் போல் அல்லாமல், இவை குறைந்த அளவு நீர்த் தேவையை கொண்டு மண்ணின் இரண்டடி ஆழத்திற்கும் நீரை கொண்டு செல்ல வல்லது.
- மேற்பரப்பு சொட்டு நீர்ப் பாசன முறைகளில் ஆவியாதல் இழப்புகளும், போதிய அளவில் வேர் மண்டலம் ஈரப்பதம் அடையாத நிலையும் உண்டாவதால் இந்த புதிய தொழில்நுட்பமானது பாசனநீர் மணற்படுகைகள் வழியே மண்ணின் ஆழ அடுக்குகளுக்கு ஊடுருவி வேர் மண்டலத்தில் ஈரப்பத இருப்பை உறுதிசெய்கிறது.

## உலக கருத்தரிப்பு தினம் – செப்டம்பர் 26

- கருத்தரித்தலில் பெண்களின் தன்னதிகாரம் மற்றும் நல்வாழ்வை உறுதி செய்ய, பெண்கள் மற்றும் தம்பதிகள் விரும்பும் கருத்தடை சாதன அணுகல்களை உறுதிசெய்தல் மற்றும் குடும்பக்கட்டுப்பாட்டை ஊக்குவித்தலே இத்தினத்தின் அனுசரிப்பு நோக்கமாகும்.
- பெண்களை அவர்கள் எப்போது, எத்தனை குழந்தைகள் மற்றும் கருத்தரிப்பு தேவையா என அனுமதிப்பது உலக சுகாதார நல இலக்குகளுக்கான முன்னேற்றத்தை உறுதி செய்யும்.

### தமிழ்நாட்டில் தற்போதைய நிலை

- சமீபத்திய தேசிய குடும்ப நல சுகாதார கணக்கெடுப்பின்படி, (National Family Health Survey) தமிழகத்தில் அனைத்து வித கருத்தடை சாதன பயன்பாடு கடந்த பத்தாண்டுகளில் 8 சதவீதம்

எனும் அளவிற்கு குறைந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது.

- தற்போது, 5.5 சதவீதத்திலிருந்த பெண்களுக்கான கருத்தடை விகிதம் 49.4% ஆக குறைந்துள்ளது.
- 0.4% சதவீதத்திலிருந்த ஆண்களுக்கான கருத்தடை விகிதம்
- 0.0% ஆக குறைந்துள்ளது.
- 2005-06ல் 61.4% என்ற அளவிலிருந்த அனைத்துவித குடும்பக் கட்டுப்பாட்டு முறையின் உபயோகிப்பு 2015-16ல் 53.2% ஆக குறைந்துள்ளது. (Use of any Family Planning method)
- 18 முதல் 45 வயதுடைய பெண்களுக்கு வருடத்திற்கு 3 முறை உட்செலுத்தத்தக்க கருத்தடை சாதனங்களை இலவசமாக அளிக்கும் 'அந்தாரா திட்டத்தை' தமிழக அரசு அண்மையில் தொடங்கியுள்ளது.
- குறிப்பாக, கருவுறுதல் தன்மையை நிரந்தரமாக இழக்காமல் கருவுறுதலை தள்ளிப்போட விரும்பும் பெண்களுக்கு உதவும் வகையில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.

# தேசியச் செய்திகள்

## ஜீபூ கால்நடை மரபணுத்தொகுதி மற்றும் இனப்பெருக்க உடன்படிக்கை

- பிரதமர் தலைமையிலான மத்திய அமைச்சரவைக் குழு , இந்தியா மற்றும் பிரேசில் இடையேயான ஜீபூ கால்நடை மரபணுத்தொகுதி (Zebu Cattle Genomics) மற்றும் இனப்பெருக்க ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையினை உறுதி செய்துள்ளது.
- அக்டோபர் மாதம் 2016 ஆம் ஆண்டு ஒப்பந்தம் கையெழுத்தானது.

### ஜீபூ மாடுகள்

- ஜீபூ (Bos primigenius indicus or Bos indicus or Bos taurus indicus) என்பவை இந்தியத் துணைக் கண்டத்தைப் பூர்வீகமாகக் கொண்ட உள்நாட்டு மாடு இனங்கள் ஆகும்.



- சிந்து சமவெளி நாகரிகத்தின் போது , சிந்து நதிப் படுகையில் இவ்வகை மாடுகள் உருவாகின

என்று வரலாறு குறிக்கின்றது.

- மாடுகள் கொழுத்த திமில்களையும், பெரிய அசைத் தாடைகளையும் (dewlap) கொண்டிருக்கும் . காதுகள் தொங்கிய நிலையில் தோற்றமளிக்கும் இந்த ஜீபூ மாடுகள் அதிக வெப்ப நிலைகளை தாங்ககூடியவை ஆகும். இவை பெருமளவில் வெப்பமண்டல நாடுகளில் வளர்க்கப்படுகின்றன.
- ஜீபூ மாடுகள் உழவு மாடுகளாகவும், பால் மாடுகளாகவும், மாட்டு இறைச்சிக்காகவும் வளர்க்கப்படுகின்றன.
- டெக்சாஸ் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த ஆராய்ச்சியாளர்கள் , 1999 ஆம் ஆண்டு ஜீபூ மாடு ஒன்றினை குளோனிங் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மத்திய அமைச்சரவை மாற்றம், புதிய அமைச்சர்கள் பதவியேற்பு

- பிரதமர் தலைமையிலான மத்திய அமைச்சரவை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.
- 9 புதிய அமைச்சர்கள் உள்பட 13 பேர், அமைச்சர்களாகப் பதவியேற்றனர். 4 இணையமைச்சர்கள், கேபினட் அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டுள்ளனர். முக்கிய பொறுப்புகளை ஏற்றுள்ள அமைச்சர்களின் விவரம் பின் வருமாறு:

| அமைச்சர் | புதிய பொறுப்பு |
|---|---|
| நிர்மலா சீதாராமன் | பாதுகாப்புத் துறை |
| பியூஷ் கோயல் | ரயில்வே துறை மற்றும் நிலக்கரித் துறை |
| சுரேஷ் பிரபு | தொழில் மற்றும் வர்த்தகத் துறை |
| தர்மேந்திர பிரதான் | பெட்ரோலியத் துறை மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை |
| நிதின் கட்கரி | மத்திய நீர்வளம் மற்றும் கங்கை நதி தூய்மையாக்கல் துறை |
| ராஜ்யவர்த்தன் சிங் ராத்தோர் | விளையாட்டுத்துறை (தனிப்பொறுப்பு) |

- இந்திரா காந்திக்குப் பிறகு, பாதுகாப்புத் துறைக்குப் பொறுப்பேற்கும் இரண்டாவது பெண் அமைச்சர் இவர் ஆவார். மேலும், பாதுகாப்புத் துறைக்குப் பொறுப்பேற்கும் முதலாவது முழு நேர பெண் அமைச்சரும் இவரே ஆவார்.
- பிரதமர், உள்துறை அமைச்சர், வெளியுறவுத் துறை அமைச்சர், நிதியமைச்சர் ஆகியோரைக் கொண்ட பாதுகாப்பு விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவில் இனி நிர்மலா சீதாராமனும் இடம்பெறுவார்.

## சவுனி திட்ட இணைப்புக் கால்வாய் கட்டும் பணி - குடியரசுத் தலைவர் துவங்கிவைத்தார்

- சவுராஷ்டிரா நர்மதா அவ்தாரன் பாசனத் (சவுனி) திட்டத்தின் இரண்டாம் கட்டமாக நான்காவது இணைப்புக் கால்வாய் (link-4 pipeline canal) கட்டும் பணிகளை குடியரசுத் தலைவர் ராம் நாத் கோவிந்த் அடிக்கல் நாட்டி துவங்கி வைத்தார்.

### சவுனி திட்டம்

- குஜராத் மாநிலத்தில் வறட்சியான சவுராஷ்டிர பகுதி, நர்மதா நதி நீர் மூலம் பாசன வசதி பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
- சர்தார் சரோவர் அணையிலிருந்து உபரியாக வெளியேறும் நீரை 115 அணைகளில் நிரப்பி, சவுராஷ்டிராவின் 11 வறண்ட மாவட்டங்களுக்கு கால்வாய்கள் மற்றும் குழாய்கள் மூலம் கொண்டு செல்வதுதான் சவுனி திட்டம்.

## 'அறிவுசார் சொதுரிமைகளைப் பற்றி பேசுவோம்' - சமூக ஊடகப் பிரச்சாரம்

- அறிவுசார் சொத்துரிமைகளின் (Intellectual Property Rights) முக்கியத்துவத்தைப் பற்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், இந்திய புவிசார் குறியீடுகளை மேம்படுத்தவும் 'அறிவுசார் சொத்துரிமைகளைப் பற்றி பேசுவோம் ' (#LetsTalkIP) என்ற பெயரில் சமூக ஊடக பிரச்சாரம் தொடங்கப்பட்டுள்ளது .
- பிரச்சாரத்தினை செயல்படுத்துபவர்கள் :
    - ✓ அறிவுசார் சொத்துரிமைகள் ஊக்குவிப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு (Cell for IPR Promotions & Management - CIPAM), தொழில் கொள்கை மற்றும் ஊக்குவிப்பு துறை.
    - ✓ இந்த அமைப்பு வணிகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்குகிறது .
- புவிசார் குறியீடு (Geographical Indication or a GI) என்பது ஒரு குறிப்பிட்ட புவிசார்ந்த இடத்தையோ அல்லது தோற்றத்தையோ ( எ.கா. நகரம், வட்டாரம், நாடு ) குறிக்கும்படி ஒரு பொருளின் மீது பயன்படுத்தப்படும் பெயர் அல்லது சின்னம் ஆகும்.
- இந்த குறியீடு, அந்த பொருள் புவிசார்ந்து பெறும் தரத்தையோ, நன்மதிப்பையோ சாற்றும் சான்றாக விளங்கும். இவ்வாறு புவிசார் குறியீடு பெற்றிருக்கும் பொருளை சம்பந்தப்பட்ட ஊரைத் தவிர மற்ற இடங்களில் தயாரித்து சந்தைப்படுத்த முயல்வோர் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க முடியும்.
- இந்தியாவின் செழிப்பான கலாச்சாரம் மற்றும் அறிவார்ந்த பாரம்பரியத்தை உலகிற்கு எடுத்துரைப்பதால் புவிசார் குறியீடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன.
- இந்திய மாநிலங்கள் ஒவ்வொன்றிலும் அதன் நிலப் பகுதிக்கேற்ப தனித்தனி பண்புகள், அடையாளங்கள் கொண்ட புவிசார் குறியீடு பெற்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. பகுதிசார் பொருள்களின் விளைச்சல், அப்பகுதி மக்களின் தொழில்கள் மூலம் அப்பகுதி இந்தியாவில் மட்டுமல்ல சர்வதேச அளவில் பிரபலமாகத் திகழ்கின்றன.
- புவிசார் குறியீடுகள் , 'இந்தியாவில் உருவாக்குவோம்' திட்டத்தின் ஒரு பகுதியாக ஊக்குவிக்கப்படுகின்றன.
- புவிசார் குறியீடுகள் அங்கீகாரத்தைப் பெறும் பொருட்கள் உலக அளவில் பிரபலம் அடைவதால் அவற்றை உருவாக்கும் கைவினைஞர்கள், விவசாயிகள், மற்றும் நெசவாளர்கள் இதன் மூலம் அதிக பயன் அடைவார்கள்.
- பொருட்களை உருவாக்குவதில் கிராமப்புற கைவினைஞர்கள் பிரத்யேகமான பாரம்பரியத் திறன்களையும் சிறந்த வழிமுறைகளைப் பற்றிய அறிவினையும் பெற்றுள்ளனர். பல தலைமுறைகளின் வழி கற்றுவந்த இத்தகையத் திறன்களைப் பாதுகாக்கவும் ஊக்குவிக்கவும் 'புவிசார் குறியீடுகள்' வழிவகை செய்கின்றன.

## தேசிய ஊட்டச்சத்து திட்டம்

- ❖ நிதி ஆயோக் தேசிய ஊட்டச்சத்து திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்கீழ் ஊட்டச்சத்து குறைவு நாட்டில் படிப்படியாக முழுமையாக நீக்கப்படும்.
- ❖ இத்திட்டம் மருத்துவசேவை உள்வாங்குதல், உணவு, குடிநீர், துப்புரவு, வருவாய் மற்றும் வாழ்வாதாரம் போன்ற ஊட்டச்சத்தை நிர்ணயிக்கும் காரணிகள் மீது கவனம் செலுத்துகிறது.
- ❖ மேலும் இத்திட்டம் மாநிலங்களின் திட்டங்கள் மாநில/மாவட்ட அளவில் உள்ளூர் பிரச்சினைகளையும் சவால்களையும் தீர்க்கும் அளவில் திருத்தியமைக்கப்பட்டுள்ளனவா என்பதையும் உறுதி செய்யும்.

## இந்தியாவின் கிழக்கு கப்பற்படை கப்பல்கள் கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு நல்லுறவுப்பயணம்

- ❖ இந்திய அரசாங்கத்தின் 'கிழக்கத்திய நாட்டினுடன் செயல்படுதல்' திட்டத்தின் கீழ் இந்திய கடற்படைக்குச் சொந்தமான இரண்டு போர்க் கப்பல்கள் கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு நல்லுறவுப்பயணம் மேற்கொண்டுள்ளன. கிழக்கு கப்பற்படையைச் சேர்ந்த ஐஎன்எஸ் சாத்புரா மற்றம் ஐஎன்எஸ் கட்மாத் கப்பல்கள் விசாகப்பட்டினத்திலிருந்து செப்டம்பர் 8 அன்று புறப்பட்டு பனிரெண்டு நாடுகளின் துறைமுகங்களை சென்று அடைய உள்ளது. அவை, சிங்கப்பூர், இந்தோனேசியா, மலேசியா, தாய்லாந்து, வியட்நாம், கம்போடியா, பிலிப்பைன்ஸ், தென்கொரியா, ஜப்பான், புருனே மற்றும் ரஷ்யா ஆகும்.
- ❖ பல்வேறு நிகழ்வுகளுடன் இக்கப்பல்கள் பங்கேற்கின்றன. தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சங்கம் (ASEAN) நடத்தும் சர்வதேச கடற்படை ஆய்வு நிகழ்விலும், சிங்கப்பூர், வியட்நாம், கம்போடியா, மற்றும் புருனேவில் நடைபெறவுள்ள தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சங்கத்தின் (ASEAN) இந்தியாவுடனான நட்புறவின் 25வது ஆண்டு நிகழ்விலும் பங்கேற்கிறது.
- ❖ மலேசியாவில் நடைபெறும் மனிதாபிமான உதவி மற்றும் பேரழிவு நிவாரண பயிற்சியிலும் பங்கேற்கிறது.
- ❖ மேலும், ரஷ்யாவில் நடைபெறவுள்ள இந்திய ரஷ்ய கடற்படை கூட்டுப்பயிற்சியான இந்திராவிலும் (INDRA) பங்கேற்கவுள்ளது. முதன்முறையாக INDRA பயிற்சியில் இந்தியா மற்றும் ரஷ்யாவின் முப்படைகளும் பங்கேற்கவுள்ளன. இது இந்திய – ரஷ்ய உறவின் முக்கிய நிகழ்வாக கருதப்படுகிறது.

## யுத் அபியாஸ் – 2017

- ❖ யுத் அபியாஸ் பயிற்சியானது இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையேயான மிகப்பெரிய ஒரு கூட்டு ராணுவப் பயிற்சி மற்றும் பாதுகாப்பிற்கான ஒத்துழைப்பு நிகழ்ச்சி ஆகும்.
- ❖ இது இரு நாடுகளாலும் நடத்தப்படும் கூட்டுப் பயிற்சியாகும். தற்பொழுது நடைபெறவிருப்பது இதன் 13வது பதிப்பாகும்.
- ❖ இது அமெரிக்காவில் உள்ள லீவிஸ் – மெக்சார்ட் என்ற இடத்தில் செப்டம்பர் 14 முதல் 27 வரை நடைபெற உள்ளது.
- ❖ கோர்க்கா துப்பாக்கிப் படைப்பிரிவைச் சேர்ந்த 200 இந்திய வீரர்கள் இதில் பங்கு பெற உள்ளனர்.

## பாலி தீர்மானம் – 2017: இந்தியா கையெழுத்திட மறுப்பு

- ❖ உலக பாராளுமன்ற கூட்டத்தின் நீடித்த மேம்பாட்டிற்கான கூட்டம் இந்தோனேஷியாவின்

நுஸாடுவாவில் செப்டம்பர் 6 மற்றும் 7 தேதிகளில் நடத்தப்பட்டது. இது 2030ல் அடையவிருக்கும் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான இலக்குகளைப் பற்றி விவாதித்தது. இறுதியாக இதில் எட்டப்பட்ட முடிவுகள் பாலி தீர்மானம் – 2017 என ஏற்றுக் கொள்ளப்பட்டன. மக்களவை சபாநாயகர் சுமித்ரா மகாஜன் தலைமையிலான இந்திய பாராளுமன்ற பிரதிநிதிகள் குழு இக்கூட்டத்தில் பங்கேற்றது.

- இதன் இறுதியில் எட்டப்பட்ட பாலி தீர்மானத்தில், மியான்மரின் ரகைன் மாநிலத்திலிருந்து வங்கதேசத்திற்கு துரத்தப்பட்ட 1,25,000 ரோஹிங்யாக்களைப் பற்றிய சம்பவம் வன்முறை நிகழ்வாக குறிப்பிடப்பட்டது. இதனால் இந்தியா இப்பாலி தீர்மானத்தில் கையெழுத்திடாமல் ஒதுங்கிக் கொண்டது.
- தனிப்பட்ட ஒரு நாட்டை இக்கூட்டத்தில் குறிப்பிடுவது நியாயமற்றது என்றும், இக்கூட்டமானது நீடித்த வளர்ச்சி இலக்குகள் மற்றும் ஒருங்கிணைந்த அல்லது உள்ளடங்கிய வளர்ச்சிக்கானது என்றும் இதற்காக அனைத்து நாடுகளின் ஒத்துழைப்பும் கூட்டுமுயற்சியும் 2030ம் ஆண்டிற்கான இலக்கை அடைய தேவை என்றும் இந்தியா வாதிட்டது.

## பாரத் பெட்ரோலியம் – 8வது மஹாரத்னா நிறுவனமாக தரம் உயர்வு

- அரசால் நடத்தப்படும் பாரத் பெட்ரோலிய நிறுவனம் மஹாரத்னா நிறுவனமாக மாற உள்ளது. இது தற்பொழுது நவரத்னா நிறுவனமாக உள்ளது.
- இதனை மஹாரத்னா நிறுவனம் என்ற தரத்திற்கு உயர்த்தும் முடிவு அமைச்சரவை செயலாளர் தலைமையில் உள்ள குழுவால் எடுக்கப்பட்டது.

### மஹாரத்னா நிலை பெறுவதற்கான அடிப்படைத் தகுதிகள்

- ✓ இது நவரத்னா நிறுவனமாக இருக்க வேண்டும்.
- ✓ இது பங்குச் சந்தையில் பட்டியலிப்பட்டிருத்தல் வேண்டும்.
- ✓ கடந்த மூன்று ஆண்டுகளில் இதன் சராசரி ஆண்டு விற்றுமுதல் 25000 கோடிகளாக இருத்தல் வேண்டும்.
- ✓ கடந்த மூன்று ஆண்டுகளில் இதன் சராசரி ஆண்டு நிகர மதிப்பு 15000 கோடிகளாக இருத்தல் வேண்டும்.
- ✓ கடந்த மூன்று ஆண்டுகளில் வரிக்குப் பிந்தைய இலாபம் சராசரியாக ஆண்டிற்கு 5000 கோடிகளுக்கு மேற்பட்டு இருத்தல் அவசியமாகும்.
- ✓ இது உலகஅளவில் முன்னிலையில் இருக்க வேண்டும்.

- தற்சமயம் ஏழு மஹாரத்னா நிறுவனங்கள் உள்ளன.

1. பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ்
2. கோல் இந்தியா
3. கெயில் இந்தியா (GAIL India)
4. இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன்
5. என்டிபிசி – NTPC
6. ஒன்ஜிசி – ONGC
7. செயில் – SAIL




- மஹாரத்னா நிறுவனமாக மாறிய பிறகு இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் தனது நடவடிக்கைகளை விரிவாக்கம் செய்ய வசதியாக பாரத் பெட்ரோலியத்தின் உயர்மட்டக் குழு மேம்படுத்தப்பட்ட அதிகாரங்களை அடையும்.

## மத்திய நிலத்தடி நீர் ஆணையம் – இந்திய அறிவியல் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

- மத்திய நீர்வளத்துறை, நதிமேம்பாடு மற்றும் கங்கைநதி புரைமைப்பு அமைச்சகத்தின் கீழுள்ள மத்திய நிலத்தடி நீர் ஆணையம் கர்நாடகாவில் நிலத்தடி நீரோட்ட மாதிரிகள் மேம்பாட்டிற்காகவும், நீர்த்தேக்க மேலாண்மைத் திட்டங்களை தயாரிப்பதற்காகவும் பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் நிறுவனத்துடன் (IFSC) ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கையை ஏற்படுத்தியுள்ளது.
- நீர்த்தேக்க வரைபடமிடல் மற்றும் மேலாண்மைத் திட்டத்தை மேம்படுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியான இந்த மாதிரியானது ஏற்கெனவே உள்ள நிலத்தடிநீர் வள சூழ்நிலைகளைப் பற்றிய ஒரு நல்ல புரிதலை ஏற்படுத்தும்.
- மேலும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பல்வேறு சிக்கலான சூழ்நிலைகளுக்கு நிலத்தடிநீர் முறையின் எதிர்ச் செயலை கணிக்கும் முறையையும், பயனுள்ள மேலாண்மைத் திட்டங்களை உருவாக்குவதையும் இத்திட்டம் தனது நோக்கமாக கொண்டுள்ளது.

## ஒழுக்கமற்ற பிரயாணிகளுக்கான பயணத்தடை விதிமுறைகளின் பட்டியல் – அரசு வெளியீடு

- மத்திய விமானப் போக்குவரத்து அமைச்சகம் மூன்றடுக்கு விதிகளைக் கொண்ட இந்தியாவின் முதல் தேசிய பயணத்தடைகள் பட்டியலை வெளியிட்டது. இது கண்காணிப்புப் பட்டியல் அல்லது தடுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்ட நபர்களை விமானப் பயணங்களை மேற்கொள்வதை தடுப்பதற்காகவும், அவர்களின் நடத்தை விதிமீறல்களை தடுப்பதற்காகவும் மேற்கொள்ளப்பட்ட ஒரு முயற்சியாகும்,
- இம்மாதிரியான நன்னடத்தையற்ற பயணிகளுக்கு பயணத் தடைகளின் கண்ணோட்டத்தில் மூன்று பிரிவுகள் உள்ளன.
- நிலை 1 – ஒழுக்கமற்ற உடல் அசைவுகள், குடிபோதையில் உளறுதல், வாய்மொழியில் தொல்லை கொடுத்தல் – தடை மூன்று மாதம் வரையில்.

- நிலை 2 – உடல்ரீதியாக தவறான நடத்தை (தள்ளுதல், உதைத்தல், அடித்தல், பொருத்தமற்ற தொடுதல்) – தடை ஆறுமாதம் வரையில்.
- நிலை 3 – உயிரை மிரட்டும் நடத்தை (தாக்குதல், விமானத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் செயல்கள்) – தடை குறைந்தபட்சம் இரண்டு வருடங்கள் வரையில்.

## பேம் – இந்தியா (FAME – India) திட்டம் – மீண்டும் ஆறுமாத காலத்திற்கு தள்ளிவைப்பு

- வேகமாகவும் மின்சக்தியிலும் ஓடும் கலப்பு வாகனங்களை தயாரிக்கும் திட்டமான பேம் இந்தியா திட்டம் மேலும் ஆறுமாத கால ஒத்திவைப்பைப் பெற உள்ளது. இத்திட்டம் கனரக இயந்திரங்கள் மற்றும் பொது நிறுவனங்கள் அமைச்சகத்தின் கீழ் உள்ளது.
- இதன் முதல் கட்டம் ஏப்ரல் 2015 முதல் மார்ச் 2017 வரை இருந்தது. ஆனால் செப்டம்பர் 2017 மாதம் வரை ஆறுமாதம் நீட்டிப்பு பெற்றிருந்தது. தற்பொழுது மீண்டும் ஆறுமாத காலத்திற்கு மார்ச் 31,2018 வரை கால நீட்டிப்பு பெற்றுள்ளது.

### பேம் – இந்தியா திட்டம் பற்றி

- பேம் – இந்தியா திட்டமானது 2020ம் ஆண்டிற்குள் ஆறு வருட கால அளவில் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இது கலப்பு / மின்சக்தி வாகனங்களுக்கான சந்தைகளை மேம்படுத்த உதவுவதற்கு திட்டமிடப்பட்டது.
- நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் இத்திட்டம் உற்பத்திச் சூழ்நிலையில் ஒரு சுயச்சார்பை அடைவதற்கு நோக்கம் கொண்டிருக்கிறது. இத்திட்டம் நான்கு முக்கிய பகுதிகளை கொண்டது. தொழில்நுட்ப வளர்ச்சி, தேவையை உருவாக்குதல், மாதிரி திட்டங்கள், ஆற்றலுட்டும் உள்கட்டமைப்புகள்.

## இந்திய தரைப்படை பெண்களை இராணுவக் காவல் படையில் சேர்க்க முடிவு

- அரசானது பெண் போர்வீரர்களை இராணுவத்தின் தரைப்படையில் உள்ள பட்டாளப் பிரிவில் பணியமர்த்த முடிவு எடுத்துள்ளது. இது பாலினம் சார்ந்த குறிப்பிட்ட குற்றங்களை விசாரிப்பதற்காக எடுக்கப்பட்ட முடிவாகும். தோராயமாக 800 பெண்களை ஆண்டுதோறும் 52 நபர்கள் என்ற அளவில் பணியமர்த்தத் திட்டம் இறுதி செய்யப்பட்டுள்ளது.
- ஆனாலும் பெண்களை இராணுவத்தின் ஆயுதச் சண்டைப் பிரிவில் சேர்ப்பது நீண்ட நாள் பாதையாகும். ஏனெனில் இந்திய தரைப்படைப் பட்டாளப் பிரிவின் இராணுவக் காவல் படை மட்டுமே இந்த முடிவிற்கு ஆதரவாக உள்ளது. இந்திய தரைப்படை நான்கு ஆயுதப்பிரிவுகளை கொண்டது. அவை

1. காலாட் படை
2. இயந்திரக் காலாட் படை
3. கவசப் படை
4. பீரங்கிப் படை

## இந்தியா - இலங்கை கூட்டு கடற்படைப் பயிற்சி - SLINEX 2017

- இந்திய இலங்கை கடற்படை கூட்டுப் பயிற்சியின் 7வது பதிப்பு சிலிநெக்ஸ் (SLINEX) வங்காள விரிகுடாவில் விசாகப்பட்டினத்திற்கு அருகே நடந்தது.
- இந்த கூட்டுப் பயிற்சி இரு கடற்படைகளுக்கிடையே நெருங்கிய ஒத்துழைப்பையையும் இணைந்து செயலாற்றும் தன்மையையும் மேம்படுத்துகிறது.

- SLINEX என்பது 2005ல் ஆரம்பிக்கப்பட்ட இருதரப்பு கூட்டு கடற்படைப் பயிற்சி ஆகும். 2005ல் இருந்து இந்தியாவில் மூன்று முறை வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது. 2011ல் இலங்கையின் உள்நாட்டுப் பாதுகாப்பின் காரணமாக இந்தப் பயிற்சி நிறுத்தப்பட்டது. இதன் மூன்றாவது பதிப்பு, SLINEX-13 கோவாவில் 2013ம் ஆண்டு நவம்பர் மாதம் நடத்தப்பட்டது.

## DIKSHA இணைய வாயில் - ஆசிரியர்களுக்கான தேசிய எண்ம (டிஜிட்டல்) உள்கட்டமைப்பு

- மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகம் ஆசிரியர்களுக்கு டிஜிட்டல் அமைப்பை ஏற்படுத்த தீக்ஷா (DIKSHA) என்ற இணைய வாயிலை ஆரம்பித்துள்ளது.
- இது ஆசிரியர்களுக்கான தேசிய டிஜிட்டல் கட்டமைப்பாக செயல்படும். இந்த இணையவாயில் மூலம் நாடு முழுவதுமுள்ள அனைத்து ஆசிரியர்களும் மேம்பட்ட டிஜிட்டல் தொழில் நுட்பத்துடன் தங்களை வளர்த்துக் கொள்ள முடியும்.
- இது ஆசிரியர்களுக்கு கற்றுக் கொள்ளவும் பயிற்சி எடுத்துக் கொள்ளவும் மதிப்பீட்டுத் தகவல்களுடன் கிடைக்கும். இது ஆசிரியர்களுக்கு பயிற்சி உபகரணங்கள், வகுப்புகளுக்கான தகவல் மூலங்களில், மதிப்பீட்டு உதவிகள், சுயவிவரங்கள் செய்திகள், அறிவிப்புகள் மற்றும் பிற ஆசிரியர்களுடனான தொடர்புகள் ஆகியவற்றில் உதவும்.

## வேலைவாய்ப்பு மற்றும் ஏற்றுமதி - நிதி ஆயோக்கின் சிறப்பு நிபுணர் குழு

- நிதி ஆயோக் அமைப்பு நாட்டில் ஏற்றுமதியை அதிகப்படுத்தி வேலைவாய்ப்பிற்கு பெரிய ஊக்கத்தை ஏற்படுத்த வேலைவாய்ப்பு மற்றும் ஏற்றுமதிக்கான சிறப்பு நிபுணர் குழுவை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிபுணர் குழுவின் தலைவராக நிதி ஆயோக்கின் துணைத் தலைவராக உள்ள டாக்டர் ராஜீவ் குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்தியத் தொழிலாளர்கள் உயர்ந்த திறமைகளைக் கொண்டிருந்த போதிலும் பெரும்பான்மையான தொழிலாளர்கள் இன்னமும் குறைந்த உற்பத்தித் திறனில், குறைந்த சம்பளத்தில் சிறு மற்றும் குறு தொழிற்சாலைகளிலும் சுய தொழில் அமைப்புகளிலும் ஈடுபட்டுள்ளனர்.
- ஒரு அவசரகால மற்றும் நீடித்து நிலைக்கக்கூடிய முறையான அமைப்பு இந்தியாவின் வேலைவாய்ப்பின்மை மற்றும் குறைந்த வேலைவாய்ப்பு பிரச்சினைகளுக்கு தேவையான முக்கியமானத் தீர்வாகும்.
- இந்த நிபுணர் குழு நிதி ஆயோக்கின் தலைமை நிர்வாக அதிகாரி, இந்திய வர்த்தகத் துறையின் செயலாளர், இந்திய தொழிற்துறை கொள்கை மற்றும் மேம்பாட்டுத் துறையின் செயலாளர், இந்திய பொருளாதார விவகாரங்களுக்கான செயலாளர், இந்திய ஜவுளித்துறையின் செயலாளர் ஆகியோரை உள்ளடக்கியதாகும்.

## விவேகானந்தரின் சிகாகோ உரை – 125வது வருடம்

- இந்த வருடம் விவேகானந்தர் நிகழ்த்திய சிகாகோ உரையின் 125வது வருடத்தை குறிப்பிடுகிறது. சுவாமி விவேகானந்தர் 1893ம் ஆண்டு நடந்த உலகச் சமய மாநாட்டில் இந்தியாவையும் இந்துமதத்தையும் பிரதிநிதித்துவப் படுத்தினார். இது உலகச் சமய மாநாட்டின் முதல் கூட்டமாகும். இது செப்டம்பர் 11 முதல் 27 வரை 1893ம் வருடம் நடத்தப்பட்டது. உலகின் பலபகுதிகளிலிருந்தும் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.



Swami Vivekananda at the World Parliament of Religions, Chicago, 1893

- அவர் தனது உரையை "அமெரிக்காவின் சகோதரிகளே மற்றும் சகோதரர்களே" என்று மரியாதையுடன் ஆரம்பித்தார். இந்த வார்த்தைகளுக்காக அரங்கில் கூடியிருந்த 7000 பிரதிநிதிகள் இரண்டு நிமிடங்கள் எழுந்து நின்று பாராட்டியதை அவர் கிடைக்கப் பெற்றார். அமைதி திரும்பியப் பின்பு அவர் தனது உரையைத் தொடங்கினார். அவர் தனது உரையைச் "சண்டைவேண்டாம் உதவி செய்யுங்கள்", "அழிவுவேண்டாம் ஒன்றாய் இருங்கள்", "வேற்றுமை வேண்டாம் ஒற்றுமையும் அமைதியும் தேவை" என்ற வேண்டுகோள்களோடு முடித்தார்.

## ஆறு மத்திய அமைச்சரவைக் குழுக்கள் – மத்திய அரசு மறுசீரமைப்பு

- மத்திய அமைச்சரவை சமீபத்தில் மாற்றியமைக்கப்பட்டபின் மத்திய அரசு ஆறு அமைச்சரவைக் குழுக்களை மறுசீரமைத்துள்ளது.
- 1961 ஆம் ஆண்டு இந்திய அரசிற்கான அலுவல் விதிமுறைகள் நடவடிக்கைகளின் கீழ் ஆறு குழுக்கள் அமைக்கப்பட்டன. இவை அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. அரசின் வேலைப்பளுவைக் குறைப்பதற்காக இக்குழுக்கள் அமைக்கப்பட்டன.
- பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவில் இரயில்துறை மந்திரி பியூஸ் கோயல் மற்றும் தர்மேந்திர பிரதான் ஆகியோர் நிரந்தர உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.
- தற்பொழுது 6 அமைச்சரவை குழுக்கள் உள்ளன.

*நியமனங்களுக்கான அமைச்சரவைக்குழு (Appointments Committee of the Cabinet - ACC)*

- இது மத்திய செயலகம், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கான அனைத்து தலைமைப் பதவிகளையும் நியமிப்பதற்கான அமைப்பாகும்.

*பணியமர்த்தலுக்கான அமைச்சரவைக் குழு (Cabinet Committee on Accommodation - CCA)*

- இது இந்திய அரசின் முக்கியமான தலைமைப் பதவிகளுக்கான பணியமர்த்தலை செய்யும் குழுவாகும்.

*பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு (Cabinet Committee on Economic Affairs - CCEA)*

- இது நாட்டின் பொருளாதாரம் சம்பந்தமான அனைத்து நடவடிக்கைகளையும் முடிவு செய்யும்.

*பாராளுமன்ற விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு(Cabinet Committee on Parliamentary Affairs - CCPA)*

- இது இந்திய பாராளுமன்றத்தில் அரசின் நடவடிக்கைகள் குறித்து முடிவு செய்யும்.

*பாதுகாப்பிற்கான அமைச்சரவைக் குழு(Cabinet Committee on Security - CCS)*

- இது இந்தியாவில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த குழுவாகும். பாதுகாப்புத் துறை செலவினங்கள் மற்றும் தேசிய பாதுகாப்புக் குறித்த முடிவுகளை இக்குழு எடுக்கிறது.

*அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு*

- இந்தியாவின் மிகவும் சக்தி வாய்ந்த அமைச்சரவைக் குழு இது. இது நாட்டின் முக்கிய முடிவுகளை

எடுக்கிறது.

- பாராளுமன்ற விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவைத் தவிர மற்ற அனைத்து அமைச்சரவைக் குழுக்களும் பிரதம மந்திரியால் தலைமை தாங்கப்படுபவையாகும். பாராளுமன்ற விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவின் தலைவர் மத்திய உள்துறை அமைச்சர் ஆவர்.

## உணவுப் பாதுகாப்பு மற்றும் தரப்படுத்தல் ஆணையத்தின் ஆன்லைன் உணவு சோதனை மற்றும் மாதிரி எடுத்தல் திட்டம்


- உணவுப் பாதுகாப்பு மற்றும் தரப்படுத்தல் ஆணையம் - Food Safety and Standards Authority of India (FSSAI)
- உணவு சோதனை மற்றும் மாதிரி எடுத்தலில் வெளிப்படைத் தன்மையைக் கொண்டுவர உணவுக் கட்டுப்பாட்டாளரான FSSAI இந்தியா முழுவதுமான FoSCoRIS (Food Safety Compliance Through Regular Inspections and Sampling) என்ற இணையதளத்தை ஆரம்பித்துள்ளது.
- இந்த புதியமுறை உணவு வியாபாரிகள், உணவு பாதுகாப்பு அலுவலர்கள், நிர்ணயிக்கப்பட்ட அதிகாரிகள், மாநில உணவு பாதுகாப்பு ஆணையர்கள் ஆகிய முக்கிய பங்குதாரர்கள் அனைவரையும் மேலும் அதற்கு சம்பந்தமான ஆய்வுகள் தொடர்பான தகவல்கள், மாதிரி எடுத்தல் மற்றும் சோதனை முடிவுத் தகவல்கள் நாடு முழுவதுமுள்ள அனைத்து அலுவலர்களும் தடையின்றி அதனைப் பகிர்ந்துக் கொள்ள முடியும். இது தேசம் முழுவதுமான ஒருங்கிணைந்தத் தகவல் தொடர்பு தரவு தளத்தினைக் கொண்டுவரும்.
- இந்த திட்டம் மாதிரிகள் சேகரித்தலை எளிமைப்படுத்தி அதனை வெளிப்படையாகவும் அதனை எளிதில் கண்டுபிடிக்கவும் உதவும். மேலும் அதன் தரம் தொடர்பானக் கட்டுப்பாடுகளையும் கட்டுப்படுத்த உதவும்.
- இந்த திட்டம் FSSAI பற்றி மெய்நிகர் அடிப்படையில் ஒரு தெளிவான நிலையைக் கொடுக்கும். மேலும் ஆய்வுகளைப் பொறுப்பான முறையில் ஏற்படுத்திக் குறைகளை நிவர்த்தி செய்ய உதவும்.
- இத்திட்டத்திற்காக , ஒவ்வொரு மாநிலத்திலும் FSSAI உடன் ஒருங்கிணைந்த மாநில உணவு அதிகாரக் குழுவிற்கு ஒரு பொறுப்பு அதிகாரி நியமிக்கப்படுவார்.

## பால் பதனிடுதல் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியம்

- மத்திய அரசு பால் பதனிடுதல் (ம) உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது.
- குளிரூட்டும் உள்கட்டமைப்புகள், பால் கலப்பட சோதனையிடும் உபகரணங்களை நிறுவுதல், பதனிடும் உள்கட்டமைப்புகளை நவீனப்படுத்துதல், பால் உற்பத்தி நிறுவனங்களுக்கு மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களின் கொள்முதல் குழுக்களை அமைத்தல் மூலம் திறன்மிகுந்த பால் கொள்முதல் அமைப்பை கட்டமைப்பதே இதன் நோக்கம் ஆகும்.
- தேசிய பால் மேம்பாட்டு நிறுவனம் ( National Dairy Development Board - NDDB), தேசிய பால் மேம்பாட்டு வாரியம் ( National Dairy Development Cooperation - NCDC) ஆகிய நிறுவனங்கள் இத்திட்டத்தினை செயல்படுத்துகின்றன.

## சக்மா, ஹஜோங் அகதிகளுக்கு விரைவில் இந்தியக் குடியுரிமை

- இந்தியாவில் சுமார் 50 ஆண்டுகளுக்கு மேல் தங்கியுள்ள சக்மா, ஹஜோங் அகதிகள் ஒரு லட்சம் பேருக்கு விரைவில் இந்தியக் குடியுரிமை வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.





- கிழக்கு பாகிஸ்தானில் (வங்கதேசம்) இருந்து இந்தியாவில் தஞ்சமடைந்த இந்த அகதிகள் வடகிழக்கு மாநிலங்களில் வசித்து வருகின்றனர்.
- முன்னதாக, கடந்த 2015-ஆம் ஆண்டு இந்த அகதிகள் தொடர்பாக உச்ச நீதிமன்றம் ஓர் உத்தரவைப் பிறப்பித்தது. அதில், சக்மா, ஹஜோங் அகதிகளுக்கு விரைவில் இந்தியக் குடியுரிமை அளிப்பது குறித்து மத்திய அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கூறியது.
- சக்மா, ஹஜோங் அகதிகள் அதிகம் வசித்து வரும் அருணாசலப் பிரதேச மாநிலத்தில் உள்ள சில சமூக அமைப்புகள் அகதிகளுக்கு குடியுரிமை அளிக்க எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. இதனால் மாநிலத்தின் ஜனநாயகக் கட்டமைப்பில் மாற்றம் ஏற்படும் என்று அவர்கள் கூறி வருகின்றனர். எனவே, அவர்களுக்கு இந்தியக் குடியுரிமை அளிக்கப்பட்டாலும் அருணாசலப் பிரதேசத்தில் உள்ள பழங்குடியினருக்கு வழங்கப்பட்டுள்ள நிலச் சொத்துரிமை அவர்களுக்கு வழங்கப்படமாட்டாது என்று தெரிகிறது.
- வங்கதேசத்தின் சிட்டகாங் மலைப்பகுதியில் வசித்து வந்த சக்மா, ஹஜோங் இனத்தைச் சேர்ந்தவர்கள், 1960-ஆம் ஆண்டுகளில் அங்கு அணை கட்டப்பட்டபோது சுமார் 5000 பேர் இந்தியாவுக்கு அகதிகளாக இடம் பெயர்ந்து இப்போது 1 லட்சம் பேராக அதிகரித்துள்ளனர். இதில் சக்மா அகதிகள் புத்த மதத்தைச் சேர்ந்தவர்கள், ஹஜோங் அகதிகள் ஹிந்து மதத்தினராவர்.

### ஜப்பான் பிரதமரின் இந்திய வருகை

- ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே அரசுமுறைப் பயணமாக இந்திய வந்துள்ளார்.
- ஜப்பான் கடனுதவியுடன் இந்தியாவில் தொடங்கப்படும் ஆமாதாபாத்-மும்பை இடையேயான புல்லட் ரயில் திட்டத்துக்கான அடிக்கல் நாட்டு விழாவில் பிரதமர் மோடியுடன் அடிக்கல் நாட்டினார்.
- புல்லட் ரயில் திட்டத்துக்கு 1.10 லட்சம் கோடி ரூபாய் செலவாகும் என்று திட்டமிடப்பட்டுள்ளது. இந்த புல்லட் ரயில் சேவைக்கு ஜப்பான் அரசு 88 ஆயிரம் கோடி கடனுதவி அளிக்கிறது.
- மொத்த வழித்தடத்தில் 92 சதவீத வழித்தடம் உயர்மட்ட மேம்பாலத்தில் புல்லட் ரயில் பயணிக்கும். இதில் 7 கி.மீ. தூரம் கடலுக்கு கீழே சுரங்கப் பாதை அமைக்கப்பட்டு அதன் வழியாக புல்லட் ரயில் இயக்கப்பட உள்ளது .
- இந்த புல்லட் ரயில் திட்டம் வரும் 2022-ஆம் ஆண்டு நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்த புல்லட் ரயில் திட்டம் நிறைவேற்றப்பட்டால், ஆமதாபாத் நகரில் இருந்து 500 கி.மீ. தொலைவில் உள்ள மும்பை நகரை 2 மணி நேரத்தில் சென்றடைய முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்திய - ஜப்பான் உச்சி மாநாடு

- இந்தியா - ஜப்பான் இடையேயான 12-ஆவது உச்சி மாநாடு, குஜராத் மாநிலம் ஆமதாபாதில் செப்டம்பர் 14 அன்று நடைபெற்றது.
- அகமதாபாத் - மும்பை புல்லட் ரயில் திட்டத்துக்கு பிரதமர் நரேந்திர மோடியும் ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபேயும் அகமதாபாத்தில் அடிக்கல் நாட்டினர்.
- இந்தியாவில் தொழில் முதலீடு செய்ய ஜப்பானிய நிறுவனங்கள் அதிக அளவில் முன்வர வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார்.
- தமிழ்நாடு, ஆந்திரா, குஜராத் மற்றும் ராஜஸ்தானில் ஜப்பான் உதவியுடன் தொழில்நகரங்கள் அமைக்கப்படும் என்று பிரதமர் அறிவித்துள்ளார்.



New horizons: A view of the Shinkansen bullet trains in Japan that India will opt for.

## மேம்பட்ட இழுவை பீரங்கித் துப்பாக்கி அமைப்பு (ATAGS)

- உள்நாட்டு தொழில்நுட்பத்தினால் தயாரிக்கப்பட்ட ஏ.டி.ஏ.ஜி.எஸ் எனும் மேம்பட்ட இழுவை பீரங்கித் துப்பாக்கிகள் (Advanced towed Artillery Gun System - ATAGS) 48 கி.மீ தூரமுடைய இலக்குகளை தாக்கி புதிய சாதனையைப் படைத்துள்ளது.



- தனியார் துறை மற்றும் டி.ஆர்.டி.ஓ எனும் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் கூட்டிணைவால் இந்த பீரங்கித் துப்பாக்கி மேம்படுத்தப்பட்டுள்ளது.
- பினாகா எனும் பலகுழல் ஏவுகணை செலுத்திக்கு (Multi Barrel rocket launching System) பின்பற்றப்பட்டது போல் இதன் மேம்பாட்டிற்கும் கூட்டமைப்பு அடிப்படை மாதிரி பின்பற்றப்பட்டுள்ளது (Consortium Based model)
- 1980'களில் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்ட போபர்ஸ் பீரங்கிக்குப் பிறகு, இதுவரை எந்த வித புது துப்பாக்கிகளுடன் கூடிய பீரங்கிகளும் இராணுவத்தில் உட்புகுத்தப்படவில்லை.
- கடந்த ஆண்டு, 145 M-777 எனும் அதிநவீன – இலகு ஹோவிடைசர் துப்பாக்கிகளை (Ultra-Light Howitzers) வாங்க இந்தியா அமெரிக்காவோடு ஒப்பந்தம் கையெழுத்திட்டுள்ளது.

## நாட்டின் மிகப்பெரிய அணை - சர்தார் சரோவர் அணை

- நாட்டின் மிகப்பெரிய அணையான, சர்தார் சரோவர் அணையை பிரதமர் நரேந்திர மோடி செப்டம்பர் 17 அன்று நாட்டிற்கு அர்ப்பணித்து வைத்தார். இந்த அணை நர்மதா நதியில் அமைந்துள்ளது
- அமெரிக்காவின் கிரான்ட் கூலீ (Grand Coulee) அணை உலகிலேயே மிகப்பெரிய அணையாகும். அதற்கு அடுத்த இடத்தை சர்தார் சரோவர் அணை பிடித்துள்ளது.




- நாட்டின் மிகப்பெரிய இந்த அணை மொத்தம் 88 ஆயிரம் சதுர கி.மீ. பரப்பளவு கொண்டதாகும். மத்தியபிரதேசம், குஜராத்தில் சுமார் 214 கி.மீ. தொலைவுக்கு நீண்டுள்ளது.
- அணையின் மூலம் குஜராத், மத்திய பிரதேசம், ராஜஸ்தான், மகாராஷ்டிராவில் 18 லட்சம் ஹெக்டேர் நிலம் பாசன வசதி பெறுகிறது. மேலும் குஜராத்தில் உள்ள இந்தியா பாகிஸ்தான் சர்வதேச எல்லையில் பணியாற்றும் பி.எஸ்.எப். வீரர்களுக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.
- நர்மதா நதியில் சாது பெட் தீவில் 182 அடி உயர சர்தார் வல்லபாய் படேல் சிலை அமைக்கப்பட்டு வருகிறது . இது இந்தியாவிலேயே மிகவும் உயரமான சிலையாக விளங்கவுள்ளது.

## இஸ்ரேல் நாட்டின் உயரிய விருது

- இஸ்ரேல் நாட்டில் வழங்கப்படும் மிக உயரிய விருதினை இந்தியாவைச் சேர்ந்த ஹேய்ட்டி (Kheyti) தொடக்கநிலை (Start-up) நிறுவனம் வென்றுள்ளது
- இஸ்ரேல் நாட்டில் விவசாயிகளுக்கு தொழில்நுட்பத் திட்டங்களை உருவாக்குவதற்காக மிகப் பெரிய அளவில் `மாஸ் சேலஞ்ச்' என்கிற மாபெரும் போட்டி இந்த ஆண்டு அறிவிக்கப்பட்டது.
- குறைந்த தண்ணீரில் அதிக மகசூலை ஈட்டுவது மற்றும் விவசாயிகளுக்கு நிலையான வருமானம் ஆகியவற்றை அளிப்பது போன்ற திட்ட மாதிரிகளை இந்த ஸ்டார்ட்அப் நிறுவனம் உருவாக்கியது.

## புதிய தொழில்நுட்பத்துடன் மின்னணு பரிவர்த்தனை

- முன்னணி இணையதள நிறுவனமான கூகுள், மின்னணு பணப் பரிவர்த்தனைக்காக, 'தேஜ்' என்ற புதிய செயலியை உருவாக்கியுள்ளது.

### 'தேஜ் செயலி'- ஓர் அறிமுகம்

- கூகுள் நிறுவனம், இந்திய மக்களின் மின்னணு பணப் பரிவர்த்தனைக்காக, 'தேஜ்' என்ற புதிய செயலியை உருவாக்கியுள்ளது.
- 'தேஜ்' என்ற ஹிந்தி வார்த்தைக்கு 'வேகம்' என்று பொருளாகும்.

- தேசிய கொடுக்கல்கள் நிறுவனத்தின் (National Payment Corporation Of India - NPCI) கீழ் இயங்கும் நிதிச் சேவைக் கழகத்தின்(Unified Payments Interface - UPI) ஒத்துழைப்புடன் இந்த செயலி உருவாக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவில் உள்ள பெரும்பாலான அறிதிறன் பேசிகளில் (Smart phones) இந்தச் செயலியை பயன்படுத்த முடியும்.
- பயனாளிகள் தங்களது வங்கிக் கணக்கில் இருந்து நேரடியாகப் பணம் அனுப்பலாம். இந்தச் சேவைக்கு கட்டணம் கிடையாது.

## திருத்தியமைக்கப்பட்ட கேலோ இந்தியா திட்டம்

- பிரதமர் தலைமையிலான அமைச்சரவைக் குழு திருத்தியமைக்கப்பட்ட கேலோ இந்தியா திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த திட்டம், தனிமனித, சமூக, பொருளாதார மற்றும் தேசிய வளர்ச்சிக்காக விளையாட்டை ஒரு முக்கிய கருவியாக உபயோகிக்க நோக்கம் கொண்டுள்ளது.

### சிறப்பு அம்சங்கள்

- இது இந்திய அளவிலான விளையாட்டிற்காக உதவித்தொகை வழங்கும் திட்டமாகும். இது ஒவ்வொரு வருடமும் குறிப்பிட்ட விளையாட்டுத் துறைகளில் சிறந்து விளங்கும் 1000 தடகள வீரர்களுக்கு வழங்கப்படும்.
- இத்திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு தடகள வீரரும் ஆண்டு ஊக்கத்தொகையாக ரூபாய் ஐந்து லட்சத்தை தொடர்ச்சியாக 8 ஆண்டுகளுக்கு பெறுவர்.
- இத்திட்டம் நாடு முழுவதும் 20 பல்கலைக் கழகங்களை விளையாட்டுத் துறையின் சிறப்பு மையங்களாக மாற்ற எண்ணுகிறது. இதன் மூலம் சிறந்த விளையாட்டு வீரர்கள் இரட்டை வழியான கல்வி மற்றும் விளையாட்டுத்துறைகளில் தங்கள் நோக்கத்தை தொடர முடியும்.
- இந்த திட்டம் ஒரு ஆரோக்கியமான வாழ்க்கை முறையை கொண்ட துடிப்பான மக்களை உருவாக்க எண்ணுகிறது.
- இந்த திட்டம் 10 முதல் 18 வயதுகளில் சுமார் 200 மில்லியன் குழந்தைகளை ஒரு தேசிய உடற்பயிற்சி இயக்கத்தில் கொண்டு வர நோக்கம் கொண்டிருக்கிறது.

## சாத்பாவனா ஆபரேஷன் – ஜனாதிபதியுடன் சந்திப்பு

- காஷ்மீரின் குரூஸ் பள்ளத்தாக்கில் உள்ள இளைஞர்கள் ஆபரேஷன் சாத்பாவனாவில் பங்கேற்றுள்ளனர்.
- சாத்பாவனா என்பது இந்திய ராணுவத்தின் 109 படைப்பிரிவுகள் நடத்தும் ஒரு சுற்றுலாவாகும். இதன் நோக்கம் இளைஞர்களிடையே நம்பிக்கையையும் எழுச்சியையும் தேச ஒற்றுமைக்காக மேம்படுத்தும் திட்டமாகும்.
- இதன் ஒருபகுதியாக இளைஞர்கள் ஸ்ரீநகர், டெல்லி, லேண்ட்ஸ்டவுன், ரிஷிகேஷ் மற்றும் டெக்ராடூன் ஆகிய இடங்களை பார்வையிட்டனர்.

## ஹுனார் ஹாத்

- மத்திய சிறுபான்மையினர் நலன் அமைச்சகம் ஹுனார் ஹாத் எனும் புகழ்பெற்ற கலை மற்றும் கலாசார மையங்களை செப்டம்பர் 24 முதல் செப்டம்பர் 30 வரை புதுச்சேரியில் அமைக்கவுள்ளது.
- சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்த கைவினைக் கலைஞர்களுக்கு வியாபாரம் மற்றும் சந்தை

வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதே இதன் நோக்கமாகும்.

- 16 மாநிலங்களைச் சேர்ந்த சிறுபான்மையின கைவினைக் கலைஞர்களின் மரபார்ந்த திறமைகளை காட்சிப்படுத்த இது இடமளிக்கும்.
- கைவினைக் கலைஞர்களின் பண்பாட்டு , அரியவகைக் கைவினை மற்றும் கைத்தறிப் பொருட்கள் காட்சிக்கும் விற்பனைக்கும் வைக்கப்படவுள்ளன.

## ஸ்கார்பியன் நீர்மூழ்கிக் கப்பல்

- மும்பையிலுள்ள அரசு கப்பல் கட்டுமான நிறுவனமான மசாகான் கப்பல் கட்டுமான நிறுவனத்தால் உள்நாட்டுத் தொழிற்நுட்பத்திலே தயாரிக்கப்பட்ட ஸ்கார்பியன் நீர்மூழ்கிக்கப்பல் வகையைச் சேர்ந்த முதல் நீர்மூழ்கிகேகப்பலான "கல்வாரி" ( Kalvari) கடற்படையில் இணைக்கப்பட்டுள்ளது.
- ஸ்கார்பியனின் சிறப்பு அம்சங்கள்
    - ✓ குறைந்த கதிர்வீச்சுயுடைய இரைச்சல் அளவு(low radiated nois levels)
    - ✓ துல்லியமான வழிகாட்டு ஆயுதங்களை (Precision Guided Weapon) பயன்படுத்தி எதிரிகளின் மேல் முடக்கத் தாக்குதல் (crippling attack) நடத்தும் திறன்
    - ✓ மேம்பட்ட அதிநவீன ஒலியியல் ஒடுத்தல் தொழிற்நுட்பம் (Advanced Acoustic silencing techniques)
    - ✓ எதிரிகளின் கண்காணிப்பிலிருந்து அகப்படா நிலை (Stealth Features)
    - ✓ நீருக்கடியிலான இயக்கத்திற்கு ஏதுவான வடிவம். (Hydro-dynamically optimised shape)

## பிரதான் மந்திரி LPG பஞ்சாயத்து

- மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் "LPG பஞ்சாயத்து" எனும் திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது.
- ஒரு லட்சம் LPG பஞ்சாயத்துகளை இந்தியா முழுவதும் உண்டாக்குவதே இதன் நோக்கமாகும்.
- இதன்படி நாட்டின் முதல் LPG பஞ்சாயத்தினை குஜராத்தில் இந்த அமைச்சகம் தொடங்கியுள்ளது.
- LPG பஞ்சாயத்து- ஓர் எரிபொருள் நிறுவன அலுவலர்கள் மற்றும் கிராமத்தவர்களுக்கிடையேயான LPG பயன்பாடு மற்றும் அவை சார் விழிப்புணர்வுகள் பற்றிய தொடர்பு மேடையாகும்.
- இவற்றில்,
    - ✓ LPG பயன்படுத்துதலின் போது மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்
    - ✓ LPG பயன்பாட்டால் உண்டாகும் சுற்றுச்சூழல் நன்மைகள்
    - ✓ சுகாதாரம் மற்றும் பெண்களின் முன்னேற்றத்தில் LPG ன் விளைவுகள்

ஆகியவைப் பற்றி கிராமப்புற LPG பயன்பாட்டாளர்களுக்கு அறிவுறுத்தப்படும்.

## சார் தாம் நெடுஞ்சாலைத் திட்டம்

- தேசிய பசுமைத் தீர்ப்பாயம் (National Green Tribunal – NGT) சார் தம் நெடுஞ்சாலைத் திட்டத்திற்கான முன்மொழிவுக்கு இசைவு தெரிவித்து உள்ளது.
- கங்கோத்ரி, யமுனோத்ரி, கேதர்நாத் மற்றும் பத்ரிநாத் எனும் புனித யாத்திரை நகரங்களுக்கு

இடையேயான சாலைவழித் தொடர்பை மேம்படுத்துவதற்காக உண்டாக்கப்பட்ட நெடுஞ்சாலை மேம்பாட்டு திட்டமே சார் தாம்.

- யாத்ரிகர்கள் மற்றும் இராணுவ பாதுகாப்பு படைகளுக்கு அனைத்து காலநிலைகளுக்கு ஏற்ற சாலைத் தொடர்பு வசதிகளை தரக்கூடிய நிலச்சரிவு தணிப்பு வசதிகள் மற்றும் பிற சாலை பாதுகாப்பு வசதிகள் தரும் கூறுகளோடு, நடைபாதைகளோடு கூடிய சாலைகள் அமைத்தலே இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

### குறிப்பு

- பொதுவாக உத்ரகாண்டிலுள்ள இந்த நான்கு பண்டைய யாத்திரை மையங்களும் சோட்டா சார் தாம் (Chota Char Dham) என அழைக்கப்படும்.
- புரி, இராமேஸ்வரம், துவார்கா, பத்ரிநாத் ஆகிய நவீனகால யாத்திரை மையங்களின் சாலை சுற்றமைப்பே சார் தாம் என்றழைக்கபடும்.

## வஸ்த்ரா 2017

- மத்திய ஜவுளித்துறை அமைச்சகத்தால் நடத்தப்படும் வஸ்த்ரா எனும் சர்வதேச ஜவுளிகள் மற்றும் ஆயத்த ஆடைகள் கண்காட்சி இந்த ஆண்டு ஜெய்ப்பூரில் நடத்தப்படுகிறது.
- இந்த சர்வதேச கண்காட்சி 2012-ல் தொடங்கப்பட்டது.
- ஜவுளித் துறையில் உள்ள புதிய தொழில்நுட்பங்களை பரப்புவதே இக்கண்காட்சியின் நோக்கம் ஆகும்.

## V-409 இடைமறிப்பு படகு

- இந்திய கடலோரக் காவற்படையின் V-409 எனும் புதிய இடைமறிப்பு படகை மங்களூருவில் பாரதி பாதுகாப்பு மற்றும் உள்கட்டமைப்பு நிறுவனத்தால் அறிமுகம் செய்துள்ளது.
- இந்திய பாதுகாப்பு அமைச்சகம் மற்றும் பாரதி பாதுகாப்பு மற்றும் உள்கட்டமைப்பு நிறுவனத்திற்கு (BDIL) இடையிலான ஒப்பந்தப்படி தயாரிக்கப்பட்டுள்ள இப்படகு கடலோர பாதுகாப்பு மற்றும் தேசப் பாதுகாப்பிற்கு வலுசேர்க்க வல்லது.
- இந்திய கடலோர காவற்படை மத்திய பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றது.

## பிரதம மந்திரி சஹஜ் பிஞ்லி ஹர் கர் யோஜனா (சௌபாக்யா)

- நாட்டின் கடைக்கோடி வரை அனைத்து நகர்ப்புற மற்றம் கிராமப்புற வீடுகளுக்கு மின் இணைப்பை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- இத்திட்டத்தின் கீழ் மின் இணைப்பு சாதனங்களான மின்மாற்றிகள் (transformers), மீட்டர் கருவிகள், மின் கம்பிகள் (Wire) போன்றவற்றிற்கு மானியம் வழங்கப்படும்.
- இதன் மூலம் அரசு 2019க்குள் அனைவருக்கும் 24×7 மின் சேவையை வழங்க இலக்கிட்டுள்ளது.

### சௌபாக்கியா திட்டத்தில் உள்ளடங்கியவன

- வெளிச்சத்திற்கு மண்ணெண்ணெய்க்கு மாற்றாக மின் இணைப்பை அளித்து சுற்றுச்சூழலை மேம்படுத்துதல்.
- கல்விச் சேவையில் மேம்பாடு அளித்தல்
- சிறந்த சுகாதார சேவையை அளித்தல்

- ரேடியோ (வானொலி), தொலைக்காட்சி, அலைபேசி வழியே மேம்பட்ட இணைப்பு
- மேம்பட்ட வாழ்க்கைத் தரத்தை அளித்தல் குறிப்பாக பெண்களுக்கு மேம்பட்ட வாழ்க்கைத்தரத்தை அளித்தல்
- பொருளாதார செயல்பாடுகள் மற்றும் வேலைவாய்ப்புகளை அதிகரித்தல்.

## பொருளாதார ஆலோசனைக் குழு சீரமைப்பு

- நிதி ஆயோக்கின் உறுப்பினர் பிபேக் தேப்ராய் பொருளாதார ஆலோசனை குழுவின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- நிதி ஆயோக்கின் முதன்மை ஆலோசகர் மற்றும் முன்னாள் நிதித்துறை செயலாளரான ரத்தன் வட்டல் இதன் உறுப்பினர் மற்றும் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

**மேலும் இதில் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்**

- பொருளாதார அறிஞர் சுர்ஜித் பல்லா
- தேசிய பொது நிதி மற்றும் நிர்வாக கொள்கை நிறுவன இயக்குநர் ரத்தின் ராய் (National Institute for Public Finance & Policy)
- இந்திரா காந்தி ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனத்தின் பேராசிரியர் ஆஷிமா கோயல்.
- பிரதம மந்திரிக்கான பொருளாதார ஆலோசனைக் குழு அரசிற்கும் பிரதமருக்கும் பொருளாதாரம் சார்ந்த விஷயங்களில் ஆலோசனை அளிக்கும் ஒரு சுதந்திரமான அமைப்பாகும்.

## பிரம்மபுத்திராவின் மிதக்கும் ஆய்வுக்கூடம்

- மத்திய உயிர்த்தொழில்நுட்பத் துறை ஆற்றில் பல்லுயிர் பெருக்கத்தையும் சூழலமைப்பையும் ஆய்வுசெய்ய B-4 (Brahmaputra Biodiversity and Biology Boat) எனும் மிதக்கும் ஆய்வுகூடத்தை அமைக்க உள்ளது.
- பிரம்மபுத்திரா ஆற்றில் அமைந்திருக்கும் மஜீலி தீவைப் பாதுகாக்கும் நோக்கத்தில் இந்த மிதக்கும் ஆய்வுக்கூடம் அமைக்கப்பட உள்ளது.
- பருவநிலை மாற்றம், அணைகள், மனிதத் தலையீடுகள் எவ்வாறு ஆற்றின் சூழலமைப்பை பாதிக்கின்றன என இந்த ஆய்வுக்கூடத்தில் ஆராய்ச்சி செய்யப்படும்.

## INC தராஸா

- ஐ.என்.எஸ் தராஸா எனும் அதிவிரைவுத் தாக்குதல் (Water Jet Fast Attack Craft) கப்பல் மும்பையிலுள்ள அரசு கப்பல் கட்டும் தளமான மஸாகான் கப்பற்கட்டும் தளத்தில் இந்திய கடற்படையில் இணைக்கப்பட்டுள்ளது.
- அதிவிரைவுத் தாக்குதல் வகுப்பு கப்பல்களின் வரிசையில் (Water Jet FAC's) ஐ.என்.எஸ் தராஸா நான்காவது மற்றும் கடைசி கப்பலாகும்.
- இதற்கு முந்தைய மூன்று கப்பல்களாவன
  - ✓ INS தர்முகி,
  - ✓ INS தியாகு
  - ✓ INS திலான்சங்
- இந்தக் கப்பல் இந்திய கடற்படையிடம் உள்ள மேம்படுத்தப்பட்ட கார் நிகோபர் வகுப்பு

அதிவிரைவுத் தாக்குதல் கப்பல் வகையிலானது.

- இது கடல் மற்றும் கடற்கரை கண்காணிப்பு, பொருளாதார தனியுரிமை பகுதிகள் ரோந்து (EEZ Patrol), மற்றும் கடற் சட்ட அமலாக்கங்களுக்கும் பயன்படும்.
- மேலும் தேடுதல் மற்றும் மீட்பு, பேரிடர் மீட்பு, மற்றும் மனிதாபிமான உதவிகள் போன்ற இராணுவம் அல்லாத நடவடிக்கைகளிலும் பயன்படுத்தப்படும்.
- வங்கக்கடலில் உள்ள அந்தமான் மற்றும் நிகோபார் தீவுக்கூட்டங்களின் அழகினை முழங்கும் வகையில் தராஸா என இக்கப்பலுக்குப் பெயரிடப்பட்டு உள்ளது.

## திவ்யாங் சாரதி – அலைபேசிச் செயலி

- சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் மேம்படுத்தும் பதிப்பிலான (Beta version) "திவ்யாங் சாரதி" எனும் மாற்றுத்திறனாளிகள் எளிதில் அணுகிடத்தக்க மற்றும் எளிதில் தகவல்களை பெறக்கூடிய செயலியை அறிமுகப்படுத்தி உள்ளது.
- மாற்றுத் திறனாளிகள் சார்ந்த திட்டங்கள், ஊக்கத்தொகை, நிறுவன ஆதரவுகள், வேலைவாய்ப்புகள் மற்றும் பிற முக்கியத் தகவல்களை மாற்றுத்திறனாளிகளுக்கு அளித்து அவர்களை மேம்படுத்துவதே இதன் நோக்கம் ஆகும்.
- இந்தச் செயலி "சுகம்யா பாரத் அபியான்" எனும் அணுகிடத்தக்க இந்தியா எனும் பிரச்சாரத்தின் (Accessible India Campaign) தகவல் தொழில்நுட்பப் பிரிவின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.
- மாற்றுத்திறனாளிகளுக்கான அனைத்து தேவையான தகவல்களும் அணுகிடத்தக்க வகையில் கட்டாயம் இருக்க வேண்டுமென கூறும் மாற்றுத்திறனாளிக்கான உரிமைகள் சட்டம் 2016-ன் கூறுகளோடும் (Rights of person with disability Act -2016), உலகளாவிய அணுகலுக்கான ஐ.நாவின் ஊனமுற்றோர் உரிமைகள் சாசனத்தின் கொள்கைகளோடும் (United nation Convention on Right of Persons with disability) இந்தச் செயலி இணக்கமுடையது.
- குரல் பதிவை உரைப் பதிப்பாக (Audio note to text), மாற்றும் மென்பொருள் உள்ளடக்கமும், பயன்பாட்டளர்களின் தேவைக்கேற்ப எழுத்துரு அளவை மாற்றியமைக்கும் வசதிகளும் இருப்பது இச்செயலியில் உள்ள முக்கிய சிறப்பம்சங்களாகும்.

## பென்சில் (PENCIL)

- மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தால் உருவாக்கப்பட்ட பென்சில் எனும் (PENCIL- Platform For Effective Enforcement For No child Labour) மின்னணு தளத்தை மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.
- தேசிய குழந்தை தொழிலாளர் பாதுகாப்புத் திட்டம் (NCLP – National Child Labour Project) குழந்தை தொழிலாளர்களின் மறுவாழ்வுக்காக 1988ல் ஏற்படுத்தப்பட்ட ஓர் மத்தியத் துறை திட்டமாகும். (Central Sector Scheme).
- தேசிய குழந்தை தொழிலாளர் பாதுகாப்புத் திட்டத்தின் சட்டக் கூறுகளின் அமலாக்கத்திற்கு வலுவான செயல்படுத்துதல் மற்றும் கண்காணிப்பு அமைப்பினை உருவாக்க இம்மின்னணு தளம் தொடங்கப்பட்டு உள்ளது
- குழந்தை தொழிலாளர் இல்லா சமூகத்தை அடைய ஏற்படுத்தப்பட்ட NCLP-ன் திறனான விளைவுடைய செயல்பாட்டிற்கு மத்திய, மாநில அரசுகளையும் , மாவட்ட நிர்வாகங்களையும், பொது மக்கள் மற்றும் சிவில் சமூக இயக்கங்களையும் ஒன்றிணைத்து ஈடுபடுத்தும் தளமாக பென்சில் அமையும்.
- குழந்தை கண்காணிப்பு அமைப்பு, புகார்கள் தெரிவிக்குமிடம் போன்ற பல கூறுகள் இத்தளத்தில் உள்ளன.

# சர்வதேசச் செய்திகள்

## 9-வது "பிரிக்ஸ்" மாநாடு – ஜியாமென், சீனா

- சீனாவின் ஜியாமென் நகரில் பிரிக்ஸ் அமைப்பின் 9-ஆவது மாநாடு செப்டம்பர் 3,4,5 தேதிகளில் நடைபெற்றது. 2011 ஆண்டிற்கு பிறகு சீனா இம்மாநாட்டை இரண்டாவது முறையாக நடத்தியுள்ளது.
- இந்த மாநாட்டில், பிரேசில் அதிபர் மிச்செல் திமர், ரஷிய அதிபர் விளாதிமிர் புதின், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, சீன அதிபர் ஜீ ஜின்பிங், தென்னாப்பிரிக்க அதிபர் ஜேக்கப் ஜூமா ஆகியோர் கலந்து கொண்டு பல்வேறு விவகாரங்கள் குறித்தும் ஆலோசனை நடத்தினர்.
- மாநாட்டின் நிறைவில், "ஜியாமென் பிரகடனம்" என்ற பெயரில் பிரகடனம் வெளியிடப்பட்டது.
- பிரிக்ஸ் மாநாட்டில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, பயங்கரவாதப் பிரச்னையை தீவிரமாக எழுப்பினார். இதற்கு பிற நாடுகளின் தலைவர்களும் ஆதரவு தெரிவித்தனர். பயங்கரவாத அச்சுறுத்தலுக்கு எதிரான நடவடிக்கையில் இணைந்து செயல்படத் தயாராக இருப்பதாகவும் அவர்கள் விருப்பம் தெரிவித்தனர். இதன் பயனாகவே, லஷ்கர்-ஏ-தொய்பா, ஜெய்ஷ்-இ-முகம்மது ஆகிய 2 பயங்கரவாத அமைப்புகளின் பெயர்களும் ஜியாமென் பிரகடனத்தில் சேர்க்கப்பட்டன.
- பிரிக்ஸ் அமைப்பின் முந்தைய மாநாடு, கோவாவில் நடைபெற்றபோது வெளியிடப்பட்ட பிரகடனத்தில், பாகிஸ்தானில் இருந்து செயல்படும் பயங்கரவாத அமைப்புகளின் பெயர்களைச் சேர்ப்பதற்கு இந்தியா தீவிர முயற்சிகள் எடுத்தது. ஆனால், அதற்கு சீனா முட்டுக்கட்டை போட்டதால், இந்தியாவின் முயற்சிக்கு பலன் கிடைக்கவில்லை. எனினும், இந்த முறை அந்த 2 பயங்கரவாத அமைப்புகளின் பெயர்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இது பாகிஸ்தானில் இருந்து செயல்படும் பயங்கரவாத அமைப்புகள் மீதான சீனாவின் கண்ணோட்டத்தில் ஏற்பட்டுள்ள மாற்றத்தின் அடையாளமாகவே பார்க்கப்படுகிறது.
- 2017 பிரிக்ஸ் மாநாட்டின் மையக்கரு: பிரகாசமான எதிர்காலத்திற்கான வலுவான கூட்டணி (Stronger Partnership for a Brighter Future)
- அடுத்த பிரிக்ஸ் மாநாடு தென் ஆப்பிரிக்காவில் 2018 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ளது.

### ஜியாமென் பிரகடனத்தின் முக்கிய அம்சங்கள்

- பிரிக்ஸ் அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளில் ஊழலுக்கு எதிராக தீவிர நடவடிக்கைகள் எடுக்க உறுதி.
- சர்வதேச சட்ட விதிகளுக்கு உட்பட்டு, உலக அமைதி மற்றும் பாதுகாப்பிற்குத் தேவையான பணிகளில் கூட்டாக ஈடுபடுதல்.
- குறிப்பிட்ட நாடுகளுக்கு எதிராக தன்னிச்சையான ராணுவ தலையீடு, பொருளாதாரத் தடை உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கு கண்டனம்.
- உலகின் பல்வேறு பகுதிகளில் நிகழ்த்தப்பட்டுள்ள பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு வேதனை தெரிவிப்பதுடன், அனைத்து வகையிலான பயங்கரவாதம், செயல்திட்டங்களுக்கு கண்டனம்.
- பயங்கரவாத அமைப்புகளுக்கு நிதி கிடைக்காமல் தடுப்பது, தங்களது மண்ணில் பயங்கரவாத அமைப்புகள் செயல்படாமல் தடுப்பது ஆகியவை அனைத்து நாடுகளின் பொறுப்பாகும்.
- பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைக்கு சர்வதேச அளவில் நேர்மையான கூட்டணியை ஏற்படுத்துவது மற்றும் இதுதொடர்பான ஐ.நா. சபையின் நடவடிக்கையை ஆதரித்தல்.

## பிரிக்ஸ் நாடுகளின் ஐந்து வங்கிகள் கடன்வசதிக்காக ஒப்பந்தம்

- பிரிக்ஸ் வங்கி ஒத்துழைப்பு நிறுவனத்தின் ஐந்து வங்கிகள் தங்கள் தேசிய நாணயத்தால் கடன்வசதிகளையும், கடன் தரமதிப்பீட்டில் ஒத்துழைப்பையும் ஏற்படுத்த சம்மதித்துள்ளன.

- இந்த ஒப்பந்தம் சீனாவின் ஷியாமென் நகரத்தில் நடைபெற்ற 2017ம் ஆண்டுக்கான பிரிக்ஸின் வருடாந்திர மாநாட்டில் அதன் ஐந்து (பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆப்பிரிக்கா) தலைவர்களால் கையெழுத்திடப்பட்டது.
- இதில் கையெழுத்திட்ட ஐந்து வங்கிகள் பின்வருமாறு
    - ✓ பிரேசில் வளர்ச்சி வங்கி (BNDSS)
    - ✓ ரஷ்யாவின் நெஷ்கோனம் வங்கி (Vnesheconom Bank)
    - ✓ இந்தியாவின் ஏற்றுமதி - இறக்குமதி வங்கி (Export–Import Bank of India – EXIM Bank)
    - ✓ சீன வளர்ச்சி வங்கி (China Development Bank)
    - ✓ தென் ஆப்பிரிக்காவின் வளர்ச்சி வங்கி (DBSA)

### கடன் வசதி

- "Credit Line" என்று அழைக்கப்படும் வங்கியின் கடன் வசதி என்பது அதிகபட்சமான கடன் நிலுவைத் தொகையை கடன் பெறுபவருக்கு கடன் கொடுப்பவர் அளிக்கும் வகையில் ஒரு நிதி நிறுவனம் அல்லது வங்கிக்கும் ஒரு வாடிக்கையாளருக்கும் இடையில் ஏற்படும் ஒரு ஒப்பந்தமாகும்.
- கடன் பெற்றவர், ஒப்பந்தத்தில் கூறிய உச்சகட்ட கடன் அளவை பெறாத பட்சத்திலும் ஒழுங்காக தவணைகளை செலுத்திய விதத்திலும் மேற்கொண்டு கடன் பெற முடியும்.

## 3வது கிழக்கத்திய பொருளாதார மன்ற சந்திப்பு - விளாடிவாஸ்டாக், (ரஷ்யா)

- மூன்றாவது கிழக்கத்திய பொருளாதார மன்ற சந்திப்பு ரஷ்யாவின் விளாடிவாஸ்டாக் நகரத்தில் நடத்தப்பட்டது. இந்தியாவின் சார்பில் வெளியுறவு விவகாரங்கள் துறை சுஷ்மா சுவராஜ் இதில் கலந்து கொண்டார்.
- இந்த மன்றம் ரஷ்யா, ஆசிய-பசிபிக் மற்றும் ஆசியான் நாடுகளின் பகுதிகளில் உள்ள வியாபாரத் தலைவர்களையும், மூத்த அரசு பிரதிநிதிகளையும் ஒருங்கிணைக்கும் மிகப்பெரிய சர்வதேச தகவல்தொடர்பு அமைப்பாக கருதப்படுகிறது.

## FARC அமைப்பு கொலம்பியாவில் அரசியல் கட்சியாக மாற்றம்

- கொலம்பியாவின் முன்னாள் புரட்சிகர குழுவான FARC அமைப்பு மீண்டும் ஒருமுறை அரசியல் கட்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
- இது ஐம்பது ஆண்டுகால உள்நாட்டு குழப்பத்திற்கு முடிவு கட்டிய பிறகு நடந்துள்ளது. இந்தக் கட்சி "காமன் ஆல்டர்நேடிவ் ரெவால்யூசனரி போர்ஸ்" (Common Alternative Revolutionary Force) எனப் பெயரிடப்பட்டுள்ளது.

## இந்தியா - ஜப்பான் பாதுகாப்பு ஒத்துழைப்பு மேம்பாடு

- இந்தியாவும் ஜப்பானும் பாதுபாப்புத் துறையில் ஒத்துழைப்பை மேம்படுத்தியுள்ளன. இது 2018ல் நடைபெறும் இரு தரப்பு இராணுவத்திற்குமிடையேயான கூட்டு தீவிரவாத எதிர்ப்புப் பயிற்சிக்கும், இந்திய கப்பற்படை வீரர்களுக்கான நீர்மூழ்கிக் கப்பல்களை அழிக்கும் பயிற்சிக்கும் புதிய வாய்ப்புகளை உருவாக்கித் தரும்.
- மேலும் ஜப்பான் P1 என்ற கடற்பாதுகாப்பு விமானத்தை 2018ல் நடைபெற இருக்கும் மலபார் என்ற இந்திய, அமெரிக்க, ஜப்பானிய கடற்படைகள் பங்குபெறும் கூட்டு கடற்பயிற்சிக்கு அனுப்புவதாக தெரிவித்துள்ளது.

- மேலும் ஜப்பானிய தற்காப்புப் படையால் கண்ணிவெடி அழிப்புப் பயிற்சியினை அளிக்க இந்திய கடற்படைக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த முடிவுகள் அனைத்தும் ஜப்பானின் டோக்கியோவில் இரண்டுநாட்கள் நடைபெற்ற இந்திய ஜப்பான் வருடாந்திர பாதுகாப்பு அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது.
- இந்த கூட்டம் முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில் ஜப்பானியப் பிரதமர் ஷின்ஜோ அபே, சீனா முத்துச் சரங்கள் (String of Pearls) ஏற்பாட்டை இந்தியப் பெருங்கடலில் அமைப்பதைத் தடுக்க ஒரு ஜனநாயக வளைவை அல்லது அமைப்பை இதன் மூலம் உருவாக்குவதை வலியுறுத்துகிறார்.
- சீனாவானது இந்தியப் பெருங்கடலில் தனது ஆதிக்கத்தை உறுதி செய்வதால் இந்தியாவும் ஜப்பானும் கடந்த ஆண்டுகளில் இருந்த தங்கள் பாதுகாப்பு உறவுகளை இராணுவ கூட்டாளிகள் என்ற நிலைமைக்கு மெல்ல மெல்ல மாற்றிக் கொண்டுள்ளன.

## மலேசியாவில் இந்தியாவின் உஜாலாத் திட்டம்

- இந்திய மின்சக்தி அமைச்சகத்தின்கீழ் இயங்கும் ஆற்றல் சேமிப்பு சேவைகள் நிறுவனம் மலேசியாவின் மேலகா மாநிலத்தில் உஜாலா (UJALA - Unnat Jyoti by Affordable Lighting for All) என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தியாவின் இதன் வெற்றியையடுத்து உலகின் பல்வேறு நாடுகள் இதனை தங்கள் நாடுகளில் அமல்படுத்த கேட்கின்றன. இது தற்பொழுது மலேசியாவின் மேலகா மாநிலத்தின் உள்ள மக்களுக்கு பயன்தரக் கூடிய விதத்தில் செயல்படுத்தப்பட உள்ளது. உஜாலா திட்டம் அறிமுகமான நாள்: மே 1, 2015 "மின்சாரச் சிக்கனத்திற்கான மின் விளக்குகள் திட்டம்" என்ற பெயரில் இத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.
- வெண்சுடர் விளக்குகள், குழல் விளக்குகள் மற்றும் சி.எப்.எல் (CFL) விளக்குகளுக்கு பதிலாக எல்.ஈ.டி (LED) விளக்குகளின் பயன்பாட்டை ஊக்கப்படுத்துவதற்காக இத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. எல்.ஈ.டி விளக்குகள் இதர மின்சார விளக்குகளை விட நீடித்து உழைப்பதுடன், நீடித்து உழைப்பதும் விலை குறைவானதும் ஆகும்.

## 2017 – தெற்காசிய பெண்கள் மேம்பாட்டு மன்ற மாநாடு – காத்மண்டு, நேபாளம்


- தெற்காசிய பெண்கள் மேம்பாட்டு மன்றம் – " எல்லைகளுக்கு குறுக்கே – சர்வதேச வியாபார பெண்கள் மாநாடு" என்ற நிகழ்வை நேபாளத்தின் காத்மண்டுவில் செப்டம்பர் 11 மற்றும் 12 தேதிகளில் நடத்தவிருக்கிறது.
- இந்த நிகழ்வு சார்க் நாடுகளிலும், ஆசியான் நாடுகளிலும் உள்ள பெண் தொழில்முனைவோர்களிடையே ஒரு ஒத்துழைப்பை ஏற்படுத்த முயற்சி செய்யும்.

### SAWDF (South Asian Women Development Forum) பற்றி

- தெற்காசிய பெண்கள் மேம்பாட்டு மன்றம், நிறுவனங்கள் பதிவு (1977) சட்டத்தின் படி ஒரு சுயசார்புடைய இலாப நோக்கமற்ற, நேபாளத்தின் காத்மண்டுவை அடிப்படையாகக் கொண்ட நிறுவனமாகும்.
- 24ம் தேதி, நவம்பர் 2014ல் காத்மண்டுவில் நடைபெற்ற 18வது சார்க் மாநாட்டில் இதற்கு சார்க் அங்கீகரித்த அமைப்பு என்ற தகுதி வழங்கப்பட்டது. சார்க் அங்கீகரித்த அமைப்பு என்ற தகுதியை பெறும் முதல் மற்றும் ஒரே நிறுவனம் இதுவேயாகும். இது பாலின விவகாரங்களுக்காக போராடும் நிறுவனமாகும்.

## ஜோர்டனில் சஹாரா வனத் திட்டம் ஆரம்பம்

- பாலைவன நிலத்தைச் செழித்துக் குலுங்கும் சோலைவனமாக்கும் முயற்சியில் ஜோர்டன் சஹாரா வனத் திட்டம் என்ற திட்டத்தை ஆரம்பித்துள்ளது. இது உணவு உற்பத்திக்காக சூரிய ஒளியை மற்றும் கடல் நீரை உபயோகிப்பதில் புதுமையான தொழில்நுட்பத்தை பயன்படுத்தும். இத்திட்டம் ஏற்கெனவே கத்தார் நாட்டில் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டது.



## இந்தியா – ஆப்கானிஸ்தான் யுக்தி முறை நட்புக்குழு கூட்டம் – 2வது பதிப்பு – புது தில்லி

- இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தான் இடையேயான யுக்தி முறை நட்புக்குழுக் கூட்டத்தின் 2வது மாநாடு புதுதில்லியில் நடைபெற்றது. இது 2011ம் ஆண்டு இருதரப்பு யுக்தி முறை நட்பு ஒப்பந்தத்தின் படி ஏற்படுத்தப்பட்டது.



- இந்தியாவின் வெளியுறத்துறை மந்திரி திருமதி. சுஸ்மா சுவராஜீம் இஸ்லாமிய ஆப்கானிஸ்தான் குடியரசின் வெளியுறவுத் துறை மந்திரி சலாலுதீன் சப்பானியும் இந்தக் கூட்டத்திற்கு தலைமை தாங்கினர்.
- இந்த கூட்டம் இருதரப்பு, பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சினைகளை விவாதித்தது. இந்தக் கூட்டத்தின் முக்கிய முடிவுகளாக அரசியல் மற்றும் பாதுகாப்பு, வர்த்தகம், வியாபாரம் மற்றும் முதலீடு, வளர்ச்சி மேம்பாட்டு ஒத்துழைப்பு, மனித வளர்ச்சி மேம்பாடு, கல்வி மற்றும் கலாச்சாரம் ஆகிய நான்கு செயற்குழுக்களின் பணிகளை மறுபார்வையிடுவதலாகும்.

## சிங்கப்பூர்: முதல் பெண் அதிபர் தேர்வு


- அந்த நாட்டு நாடாளுமன்ற முன்னாள் அவைத் தலைவர் ஹலீமா யாகூப் போட்டியின்றி தேர்வு செய்ப்பட்டார்.



- சிங்கப்பூரின் அடுத்த அதிபராக ஹலிமா யாகோப் என்ற பெண் தேர்வு செய்யபட்டுள்ளார். சிங்கப்பூரின் முதல் பெண் அதிபர் என்ற பெருமையை இவர் பெற்றுள்ளார். அந்த நாட்டு நாடாளுமன்ற முன்னாள் அவைத் தலைவராக உள்ளார்.

## இந்தியா ரஷ்யா இடையேயான புதிய கடல்வழிப் பாதை

- இரஷ்யாவை இந்தியாவுடன் இணைக்கும் புது கடல் வழிப்பாதையை இந்தியா முன்மொழிந்துள்ளது.
- இந்த புதிய கடல்வழிப்பாதை இந்தியாவை வடகிழக்கு ஆசியா மற்றும் மேற்கு பசுபிக் பகுதிகளோடு இணைக்கவல்லது.




- இந்த முன்மொழியப்பட்டுள்ள புது நேரடி கடல் வழிப்பாதையானது இந்தியாவின் சென்னை துறைமுகத்திலிருந்து இரஷ்யாவின் விளாடிவோஸ்டாக் இடையில் அமையும்.
- நடப்பில், இந்தியாவிலிருந்து தூரத்திலுள்ள கிழக்கு இரஷ்யாவிற்கு சரக்கு போக்குவரத்தை ஐரோப்பாவின் வழியே மேற்கொள்ள வேண்டியுள்ளதால் 40 நாட்கள் ஆகின்றன. இதை ஒப்பிடுகையில் மொழியப்பட்டுள்ள புதிய பாதையில் சரக்கு போக்குவரத்து 24 நாட்களிலேயே மேற்கொள்ளப்படும்.

- சீனாவின் இலட்சிய திட்டமான கடல்வழி பட்டு பாதை தொடக்கத்திற்கு போட்டியாகவும் ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவை இணைக்கும் ஒரு பாலமாகவும் இத்தொடக்கம் கருதப்படுகின்றது.

## பிரபல நாவலாசிரியை ஜேன் ஆஸ்டென் நினைவாக பிரிட்டனில் பணம் வெளியீடு

- உலகப் புகழ் பெற்ற ஆங்கில நாவலாசிரியை ஜேன் ஆஸ்டென் உருவப்படம் கொண்ட 10 பவுண்டு பணத்தாள்கள் பிரிட்டனில் புழக்கத்திற்கு வந்தது.
- இங்கிலாந்து நாட்டின் அனைத்து பணத்திலும் அந்நாட்டின் ராணியின் உருவப்படம் இடம்பெற்றிருக்கும்.




- ராணியைத் தவிர இங்கிலாந்தின் பணத்தாள்களில் இடம்பெறும் மூன்றாவது பெண்மணி ஜேன் ஆஸ்டென் ஆவார்.
- இதற்குமுன் இங்கிலாந்தின் பணத்தாள்களில் இடம்பெற்றுள்ள பெண்கள் ,
    - ✓ ஃப்ளோரன்ஸ் நைட்டிங்கேல் - மருத்துவக் கண்டுபிடிப்பாளர்
    - ✓ எலிசபெத் ஃப்ரை - சமூக சீர்திருத்தவாதி.

## முடிவுக்கு வந்தது "கேசினி' விண்கலத்தின் ஆய்வுப் பயணம்

- சனி கிரகத்தை ஆய்வு செய்வதற்காக நாசா விண்வெளி ஆராய்ச்சி மையத்தால் கடந்த 1997-ஆம் ஆண்டு அனுப்பப்பட்ட “கேசினி’ விண்கலம், தனது செயல்பாட்டை செப்டம்பர் 15 உடன் நிறுத்திக் கொண்டது.
- ஏறத்தாழ 20 ஆண்டு கால ஆராய்ச்சியில் 4.5 லட்சம் புகைப்படங்களையும், பல லட்சக்கணக்கான தரவுகளையும் அந்த விண்கலம் பூமிக்கு அனுப்பியுள்ளது.
- ஐரோப்பிய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு (இஎஸ்ஏ), இத்தாலிய வான்வெளி ஆய்வு அமைப்பு ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் “கேசினி’ விண்கலத்தை நாசா வடிவமைத்தது. சனி கிரகத்தையும், அதன் வளையங்கள் மற்றும் துணைக் கோள்களையும் ஆராய்வதற்காக கடந்த 1997-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் விண்ணில் செலுத்தப்பட்டது.



- இந்நிலையில், சனி கிரகத்தின் உள்பரப்புக்குள் “கேசினி’ விண்கலத்தைச் செலுத்த நாசா விஞ்ஞானிகள் முடிவு செய்தனர். இதனால், அந்த விண்கலத்தின் தொடர்புகள் துண்டிக்கப்படும் என்று தெரிந்திருந்தும், அடுத்தக்கட்ட சோதனைக்காகவும் எதிர்கால ஆராய்ச்சிக்காக கிரகத்தின் நிலவுகளை சேதமின்றி பாதுகாப்பதற்காகவும் இத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## அமெரிக்காவில் மீண்டும் H-1 B விசா

- அமெரிக்க குடிமகன் மற்றும் குடியேற்ற சேவைப் பிரிவு மீண்டும் விசா விண்ணப்பங்களை பரிசீலிக்கும் முறையை தொடங்கியிருக்கிறது. இது 2018ம் வருட நிதி ஆண்டிற்கான அளவைப் பொருத்ததாகும்.
- கடந்த மார்ச் மாதம் 3ம் தேதி, அமெரிக்க அரசு தங்களது இணையதளத்தில் ஏப்ரல் 3ம் தேதியிலிருந்து அடுத்த அறிவிப்பு வெளியாகும் வரை H-1 B விசா பரிசீலனை செய்யப்படுவது தற்காலிகமாக நிறுத்தப்படுவதாக அறிவித்தது.

### ஹெச்-1 – பி விசா

- அமெரிக்காவில் ஹெச்-1-பி விசா என்பது குடியிருப்பு மற்றும் தேசியச் சட்டத்தின் படி அமெரிக்க நிறுவனங்கள் வெளிநாட்டு பணியாளர்களை சிறப்பு பணியிடங்களில் பணியமர்த்த அனுமதி அளிக்கும் திட்டமாகும்.
- இதில் அதிகபட்ச கால அளவு மூன்று வருடங்களாகும். இது ஆறு வருடங்களுக்கு நீட்டிக்கப்பட முடியும். அதிகபட்ச கால அளவு அமெரிக்காவின் பாதுகாப்பு சம்பந்தமான துறையில் பணியாற்றுவதற்காக பத்து வருடங்களுக்கு நீட்டிக்கப்படும்.

## முதல் BIMSTEC பேரிடர் மேலாண்மை பயிற்சி – இந்தியா

- 2017 அக்டோபர் 10 முதல் 13 வரை இந்தியா முதல் பிம்ஸ்டெக் தேசிய பேரிடர் மேலாண்மை பயிற்சியை நடத்த இருக்கிறது.
- இது தேசிய பேரிடர் மேலாண்மை தடுப்புப்படையால் நடத்தப்படும்.
- இதன் நோக்கம் பிம்ஸ்டெக் உறுப்பு நாடுகளிடையே பேரிடர் ஆபத்தைக் குறைத்தல் மற்றும் பேரிடர் மேலாண்மையில் பிராந்திய ஒத்துழைப்பை உறுதியாக்குதல் ஆகிய அம்சங்களில் சிறந்த விஷயங்களை பகிர்ந்து கொள்வதாகும்.
- இதன் 7 உறுப்பு நாடுகளான இந்தியா, வங்கதேசம், பூடான், மியான்மர், நேபாளம், இலங்கை

மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் இந்த பயிற்சிகளில் பங்கேற்பர்.

## வங்கதேசத்தின் முதல் அணு உலை

- வங்கதேசத்தின் ரோப்பூர் அணுசக்தி உலையை அமைக்க இந்தியாவும் ரஷ்யாவும் கூட்டிணைவை ஏற்படுத்தியுள்ளன.
- இது இந்தியா-ரஷ்யா அணுசக்தி ஒப்பந்தத்தின் கீழ் மூன்றாவது நாட்டில் மேற்கொள்ளப்படும் முதல் அணுசக்தி திட்டம் ஆகும்.
- மேலும் இது இந்தியாவின் முதல் வெளிநாட்டு அணுசக்தி கட்டமைப்பு முனைவாகும்.
- ரோப்பூர் அணு உலைத் திட்டமானது வங்கதேசத்தின் முதல் அணுசக்தி திட்டம் ஆகும்.
- இது ரஷ்யாவின் உதவியோடு வங்கதேசத் தலைநகர் டாக்காவிற்கு அருகே கட்டப்படவுள்ளது.
- ரோப்பூர் அணுசக்தி கூடத்தின் இரண்டு உலைகளும் பயன்பாட்டிற்கு வந்தால் இந்தியா மற்றும் பாகிஸ்தானை அடுத்து தென் ஆசிய நாடுகளில் அணுசக்தியை ஆற்றல் உற்பத்திக்காக பயன்படுத்தும் மூன்றாவது நாடாக வங்கதேசம் உருவாகும் .
- ரோப்பூர் அணுசக்தி கூடத்தின் திறன் – 2 x 1200 மெகா வாட்கள் (Mega Watt)

## அணு ஆயுத தடை ஒப்பந்தம் (Anti-nuclear treaty)

- வட கொரிய அணுஆயுதப் பயன்பாடு பூதாகரமாக வெடித்து வரும் வேளையில் தற்போது நடைபெற்று வரும் 72 வது ஐ.நா பொது அவை கூட்டத்தில் பலதரப்பு அணுஆயுதக் குறைப்பு ஒப்பந்தமான (multilateral disarmament treaty) அணுஆயுத தடை ஒப்பந்தத்தில் 51 உலக நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.
- இதுவரை மொத்தத்தில் 122 நாடுகள் இந்த ஒப்பந்தத்தை ஆதரித்துள்ளன. இவற்றில் எந்தவொரு நாட்டிடமும் அணுஆயுதங்கள் கிடையாது.
- 50 நாடுகள் இந்த ஒப்பந்தத்தை பின்னேற்பளித்தால் (Ratification) இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும்.
- அணுசக்தி வல்லமையுடைய 9 நாடுகள் எவையும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## கோர் ராம்ஷாஹ்ர் ஏவுகணை

- ஈரானிய புரட்சிகர காப்பாளர் (Iran’s Revolutionary Guard) அமைப்பானது கோர்ராம் ஷாஹ்ர் எனும் புதிய கண்டம் விட்டு கண்டம் பாயும் (Ballistic) ஏவுகணையை முதன்முறையாக பொதுவெளியில் காட்சிப்படுத்தியுள்ளது.
- இஸ்ரேல் உட்பட மத்திய கிழக்கு நாடுகளைத் தாக்கும் அளவில் 2000 கிலோமீட்டர் தூர வரம்புடையது இந்த ஏவுகணை.
- 1980களில் நடைபெற்ற ஈரான்-ஈராக்கிய போரின் நினைவு தின அனுசரிப்பின் போது இராணுவ அணிவகுப்பில் இந்த ஏவுகணை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

## பாகிஸ்தானின் புதிய ஏவுகணை

- ‘ஷாயின்’ என்பது பாகிஸ்தான் மற்றும் சீன விமானப்படைகளின் கூட்டு போர் பயிற்சி ஆகும்.

- ❖ இந்தக் கூட்டுப் பயிற்சி தற்போது முடிவுற்ற வேளையில் பாகிஸ்தான் கடற்படை வட அரபிக்கடல் பகுதியில் AM – 39 எக்ஸோசெட் எனும் கப்பல்களை தாக்கி அளிக்கும் ஏவுகணையை வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.
- ❖ வானிலிருந்து கடற்பரப்பிற்கு ஏவக்கூடிய (AIR to SURFACE) வகையைச் சேர்ந்தது இந்த ஏவுகணை ஆகும்.

## ஏஞ்சலா மெர்கல் – 4வது முறையாக ஜெர்மனியின் அதிபர்

- ❖ ஜெர்மனியின் தேர்தலில் அதன் தற்போதைய அதிபர் ஏஞ்சலா மெர்கல் 4-ஆவது முறையாக வெற்றி பெற்றுள்ளார்.
- ❖ மெர்கல்லின் கன்சர்வேடிவ் கட்சி 33.2% ஓட்டுகளுடன் பாராளுமன்றத்தின் பெரிய கட்சியாக உருவெடுத்துள்ளது.
- ❖ குடியேறுபவர்களுக்கு எதிரான கொள்கையுடைய கட்சியான ஆல்டர்நேடிவ் பார் ஜெர்மனி (Alternative for Germany – AFD) 13.1% ஓட்டுக்கள் பெற்றுள்ளது.
- ❖ இதன் மூலம் 50 ஆண்டுகால ஜெர்மனியின் பாராளுமன்ற வரலாற்றில் ஒரு வலதுசாரி தத்துவார்த்த கட்சி முதன்முறையாக பாராளுமன்றத்தில் இடம்பிடித்துள்ளது.

### ஜெர்மனியின் தேர்தல் முறை

- ❖ ஜெர்மனியின் அரசியல் சட்டம், ஜெர்மானிய பாராளுமன்றமான பண்டேஸ்டாகிற்கு ஒவ்வொரு நான்கு வருடங்களுக்கு ஒருமுறை தேர்தல் நடத்தப்படும் என நிர்ணயித்துள்ளது. இதில் 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் தேர்தலில் வாக்களிக்கவும், போட்டியிடவும் முடியும்.
- ❖ ஜெர்மனியர் பாராளுமன்ற உறுப்பினர்களை இரண்டு ஓட்டுகள் மூலம் தேர்ந்தெடுக்கின்றனர். அதில் ஒரு ஓட்டு நேரடி வேட்பாளருக்கு கிடைக்கும். அந்த நேரடி வேட்பாளர் தனது தேர்தல் மாவட்டத்தில் பெரும்பான்மை வாக்குகள் பெற வேண்டும்.
- ❖ மிக முக்கியமானதாக கருதப்படும் இரண்டாவது ஓட்டு ஒவ்வொரு மாகாணத்திலும் சம்பந்தப்பட்ட கட்சியின் பொதுக்குழு அளித்துள்ள கட்சிப்பட்டியலுக்கு இடப்பட வேண்டும்.

## துருஸ்பா [DRUZBA]

- ❖ துருஸ்பா [DRUZBA] என்பது இரஷ்யா மற்றும் பாகிஸ்தான் இராணுவங்களின் சிறப்பு படைகளுக்கு இடையேயான கூட்டுப்போர் பயிற்சியாகும்.
- ❖ இந்த ஆண்டிற்கான கூட்டுப் போர் பயிற்சி இரஷ்யாவின் மின்ரால்னோ வோடியில் தொடங்கியுள்ளது.
- ❖ பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள், பிணையக் கைதிகள் மீட்பு, சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல் வேட்டை போன்றவற்றை மையமாக கொண்டது இக்கூட்டுப் போர் பயிற்சி
- ❖ இரு நாட்டு இராணுவ உறவுகளை மேலும் வலுப்படுத்தும் விதமாக இக்கூட்டுப் போர் பயிற்சி மேற்கொள்ளப்படுகிறது.

# பொருளாதாரச் செய்திகள்

## சமூக வலைதளங்கள் மூலம் தகவல் திரட்ட வரித்துறை திட்டம் – “புராஜெக்ட் இன்சைட்”




- கறுப்புப் பணத்தை ஒழிப்பதற்காகவும் வரி ஏய்ப்பை தடுப்பதற்காகவும் சமூக வலைதளங்கள் மூலம் தகவல்களை திரட்ட வரு மான வரித் துறை திட்டமிட்டுள்ளது. இதற்காக `புராஜெக்ட் இன் சைட்’ என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது.
- `புராஜெக்ட் இன்சைட்’ எனும் திட்டம் மிகப் பெரிய தகவல்களை ஆராயும் திட்டமாகும். ஒருவருடைய வருமானத்தையும் சமூக வலைதளத்தில் அவர் குறிப்பிட்டுள்ள விவரங்களையும் சரிபார்க்கும் வகையில் இந்த திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ஒருவர் குறிப்பிட்டுள்ள வருமானத்துக்கு அதிகமாக செலவு செய்தததை சமூக வலைதளத்தில் குறிப்பிட்டிருந்தால் எளிதாக கண்டறிய முடியும்.
- மத்திய அரசு ஏற்கெனவே பான் எண்ணோடு ஆதார் எண்ணை இணைப்பதை கட்டாயமாக்கியுள்ளது. இதன் மூலம் அனைவருடைய வருமானம் மற்றும் சொத்து விவரங்களை எளிதாக கண்காணிக்க முடியும்.தற்போது `புராஜெக்ட் இன் சைட்’ மூலம் தனது கண்காணிப்பு நடவடிக்கையை விரிவுபடுத்தியுள்ளது.
- `புராஜெக்ட் இன்சைட்’ திட்டத்துக்காக கடந்த ஆண்டு எல் அண்ட் டி இன்போடெக் நிறுவனத்துடன் வருமான வரித்துறை ஒப்பந்தம் செய்து கொண்டது. எல் அண்ட் டி நிறுவனம் இதற்கான தொழில்நுட்ப வசதிகளை உருவாக்கியுள்ளது.

## ஸ்டேட் வங்கியின் புதிய பத்திரக் குறியீடு

- FTSE எஸ்.பி.ஐ குறியீடு எனும் புதிய குறியீட்டு தொடரை எஸ்.பி.ஐ ஆனது உலக குறியீடு வழங்குநர் (global index provider FTSE 100) என்ற அமைப்பின் கூட்டிணைவோடு அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தியா இங்கிலாந்து மற்றும் உலக நாடுகளில் உள்ள முதலீட்டாளர்களுக்கு இந்தக் குறியீடானது இந்திய பத்திரச் சந்தையை ஆராய உதவும் கருவிகளை அளிக்கவும் , இந்தியப் பத்திரச் சந்தையில் வளர்ச்சியை ஊக்குவிக்கவும் உதவும் என எஸ்.பி,ஐ நம்பிக்கை தெரிவித்துள்ளது.

### வர்த்தக எளிமையாக்களுக்கான உலக ஒப்பந்தம்

- தென்கொரியத் தலைநகர் சியோலில் நடைபெற்று வரும் ASEM எனும் ஆசிய – ஐரோப்பிய நாடுகளுக்கான பொருளாதார அமைச்சர்களின் சந்திப்பில் (Asia–Europe Meeting - ASEM) உலக பொருளாதார நிலையை ஊக்குவிக்க சேவைத்துறையிலுள்ள முழுத்திறனையும் பயன்படுத்துவதற்கான அழைப்பை இந்தியா விடுத்துள்ளது.
- இதற்காக சேவைத்துறையில் வர்த்தக எளிதாக்கலுக்கான (TFS – Trade Facilitation in Service) உலக ஒப்பந்தத்தை (Global pact on TFS) இந்தியா முன்மொழிந்துள்ளது.
- உலக சேவைத்துறையின் வர்த்தக வளர்ச்சிக்காக குறுகியகால பணிகளுக்கு திறனுடைய பணியாளர்களை எல்லை கடந்து பணியமர்த்துதல் உட்பட பல்வேறு வர்த்தக எளிதாக்குதல் கூறுகளை உடைய இந்த TFS முன்மொழிவை இந்தியா ஏற்கனவே உலக வர்த்தக அமைப்பில் (WTO) சமர்ப்பித்துள்ளது.

### அரசு சில சீன இரும்புப்பொருட்கள் மீது எதிர்த்தடுப்பு வரியை (Countervailing duty) விதித்துள்ளது

- அரசு சீனாவிலிருந்து இறக்குமதியாகும் சில பட்டையான இரும்புப் பொருட்கள் மீது ஐந்து வருட காலத்திற்கு எதிர்த்தடுப்பு வரியை விதித்துள்ளது. இம்மாதிரியான, ஏற்றுமதி செய்யும் நாடுகளால் அதிகம் மானியமளிக்கப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களிடமிருந்து உள்நாட்டு தயாரிப்பாளர்களை பாதுகாக்கும் நோக்கில் இம்முடிவு எடுக்கப்பட்டு உள்ளது.
- இந்த வரிவிதிக்கும் முடிவு நிதி அமைச்சகத்தால் எடுக்கப்பட்டது. எதிர்க்குவிப்பு வரிகள் மற்றும் துணை வரிகளின் தலைமை இயக்குனரகம் தேவையான அளவு உற்பத்தியும் தேவையும் இந்தியாவில் உள்ளபோதிலும், சீனாவால் மானியமளிக்கப்பட்ட பொருட்களின் இறக்குமதியின் விளைவாக பாதிப்புகள் நிகழ்வதை கண்டுபிடித்தது. அதற்குப் பின்னர் நிதி அமைச்சகம் இந்த முடிவை எடுத்துள்ளது.

#### எதிர்த்தடுப்பு வரி என்றால் என்ன?

- எதிர்த்தடுப்பு வரி என்பது இறக்குமதி செய்யும் நாடுகளால் இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீது விதிக்கப்படும் ஒரு கூடுதல் இறக்குமதி வரியாகும். இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் ஏற்றுமதி சலுகைகள் மற்றும் வரிச் சலுகைகளை உற்பத்தி செய்யுமிடத்திலோ அல்லது ஏற்றுமதி செய்யும் இடத்திலோ அடையும் பொழுது அதன்மீது இந்தவகை வரி விதிக்கப்படும்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

### ஐ.ஆர்.என்.எஸ்.எஸ். 1 எச் செயற்கைக்கோளை விண்ணில் நிலை நிறுத்தும் முயற்சி தோல்வி

- இந்தியாவின் பிரத்யேக வழிகாட்டி செயற்கைக்கோளான ஐ.ஆர்.என்.எஸ்.எஸ். 1எச்-ஐ, பி.எஸ்.எல்.வி. சி 39 ராக்கெட் மூலம் விண்ணில் நிலை நிறுத்தும் முயற்சி தோல்வியில் முடிந்தது.
- இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகம் (இஸ்ரோ) கடல்சார் ஆராய்ச்சிக்காக 7 செயற்கைக்கோள்களை விண்வெளிக்கு அனுப்ப முடிவு செய்தது. அதன்படி ஐ.ஆர்.என்.எஸ்.எஸ். 1எச் உடன் சேர்த்து இப்போது 7 செயற்கைக்கோள்கள் அனுப்பப்பட்டுவிட்டன. 2013-ஆம் ஆண்டு அனுப்பப்பட்ட ஐ.ஆர்.என்.எஸ்.எஸ். 1ஏ செயற்கைக்கோளின் ஆயுட்காலம் நிறைவடைந்ததையடுத்து அதற்கு மாற்றாக இந்தச் செயற்கைக்கோள் (ஐ.ஆர்.என்.எஸ்.எஸ். 1 எச்) அனுப்புவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

**ஐ.ஆர்.என்.எஸ்.எஸ். ஒரு பார்வை**

| செயற்கைக்கோள் | விண்ணில் செலுத்தப்பட்ட நாள் | செலுத்து வாகனம் |
|---|---|---|
| ஐ.ஆர்.என்.எஸ்.எஸ்-1A | 1 ஜூலை 2013 | பி.எஸ்.எல்.வி C22 |
| ஐ.ஆர்.என்.எஸ்.எஸ்-1B | 4 ஏப்ரல் 2014 | பி.எஸ்.எல்.வி C24 |
| ஐ.ஆர்.என்.எஸ்.எஸ்-1C | 15 அக்டோபர் 2014 | பி.எஸ்.எல்.வி C26 |
| ஐ.ஆர்.என்.எஸ்.எஸ்-1D | 28 மார்ச் 2015 | பி.எஸ்.எல்.வி C27 |
| ஐ.ஆர்.என்.எஸ்.எஸ்-1E | 20 ஜனவரி 2016 | பி.எஸ்.எல்.வி C31 |
| ஐ.ஆர்.என்.எஸ்.எஸ்-1F | 10 மார்ச் 2016 | பி.எஸ்.எல்.வி C32 |
| ஐ.ஆர்.என்.எஸ்.எஸ்-1G | 28 ஏப்ரல் 2016 | பி.எஸ்.எல்.வி C33 |
| ஐ.ஆர்.என்.எஸ்.எஸ்-1 ஹெர்ட்ஸ் | 31 ஆகஸ்ட் 2017 | பி.எஸ்.எல்.வி C39 |

**பயன்பாடு என்ன ?**

- ஐ.ஆர்.என்.எஸ்.எஸ். செயற்கைக்கோள்கள் கடல் வழி ஆராய்ச்சிக்காக அனுப்பப்படுகிறது. இயற்கை பேரிடர் காலங்களில் கடல் பயணத்திற்கும் இந்த செயற்கைக்கோள்கள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். மேலும் 1,500 கி. மீ. சுற்றளவு பரப்பளவுக்கு கடல் வழிகளையும், கடல் எல்லைகளையும் துல்லியமாகக் கண்காணிக்க முடியும். மேலும் தரையிலும், வான்வெளியிலும் செல்லும் அனைத்து வாகனங்களையும் கண்காணிக்க முடியும்.
- இந்த செயற்கைக்கோள் கார்கள், சரக்கு வாகனங்கள், விமானங்கள், கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள் இருப்பதை துல்லியமாக தெரிவிப்பதுடன், பயண நேரம் குறித்து சரியான தகவல்களையும் அளிக்கும். மேலும், பேரிடர் மேலாண்மை, செல்லிடப்பேசிகள் ஒருங்கிணைப்பு, புவியியல் வரைபடங்களை கண்காணித்தல், கார், கனரக வாகன (டிரக்ஸ்) ஓட்டுநர்களுக்கு குரல்வழி மூலம் முறையாக ஓட்டச்சொல்லி வாகனங்களை இயக்க வழிகாட்டும். இது இந்தியாவுக்கான பிரத்யேக வழிகாட்டி செயற்கைக்கோள். அமெரிக்காவின் ஜிபிஎஸ் போல இந்தியாவுக்கான எஸ்பிஎஸ் வழிகாட்டியாக இந்தச் செயற்கைக்கோள்கள் அமையும்.
- பிஎஸ்எல்வி ராக்கெட் 24 ஆண்டுகளாக செயற்கைக்கோள்களை விண்வெளிக்கு அனுப்பும் பணியில் ஈடுபட்டு வருகிறது.
- இத்தனை ஆண்டுகளில் 41 முறை பிஎஸ்எல்வி ராக்கெட்டை விண்ணில் செலுத்தியது இஸ்ரோ. அதில் முதல் முறையாக 1993 ஆம் ஆண்டு பி.எஸ்.எல்.வி ராக்கெட்டில் ஐ.ஆர்.எஸ்-1 இ என்ற

செயற்கைக்கோளை விண்ணுக்கு அனுப்பியது.

- இது தோல்வியில் முடிந்தது. அதன்பின் அனுப்பிய பி.எஸ்.எல்.வி., ராக்கெட்டுகள் அனைத்தும் வெற்றி பெற்றன. அதன்பின் 24 ஆண்டுகள் கழித்து இஸ்ரோ அனுப்பிய பிஎஸ்எல்வி சி-39 ராக்கெட்டில் ஐ.ஆர்.என்.எஸ்.எஸ். 1எச் செயற்கைக்கோளை அனுப்பும் முயற்சி தோல்வியில் முடிந்தது. இப்போது ஒட்டுமொத்தமாக 41 முறை ஏவப்பட்டு 39 இல் வெற்றி கண்டுள்ளது பிஎஸ்எல்வி வகை ராக்கெட்டுகள்.

## ஜெர்மனியின் சக்திவாய்ந்த X-கதிர்வீச்சு லேசர் கருவி

- ஐரோப்பிய X-கதிர்வீச்சு ஃபிரீ எலக்ட்ரான் லேசர் (European x-ray Free Electron Laser - XFEL) கருவி ஜெர்மனியில் உள்ள ஹம்பர்க் நகரத்தில் அமைக்கப்பட்டுள்ளது.
- இக்கருவியானது ஒரு நொடியில் 27,000 X-கதிர் கீற்றுகளை வெளிப்படுத்தும். இதன் மூலம், ஒரு அணுவில் உள்ள மிக நுண்ணிய பகுதியையும் ஒரு நொடியில் தெளிவாக படமெடுக்க முடியும்.
- தாவர ஒளிச்சேர்க்கையின் போது சூரிய ஆற்றலை கிரகிக்கும் மூலக்கூறுகளை ஆராய்ச்சி செய்ய இக்கருவியை விஞ்ஞானிகள் பயன்படுத்த உள்ளனர்.
- மேலும், சூரியனை ஆராய்ச்சி செய்யவும், வைரஸ்கள், செல்கள் போன்றவற்றினை ஆராயவும் இக்கருவியை விஞ்ஞானிகள் பயன்படுத்த உள்ளனர்.

## டெங்கு வைரஸ் பரவுவதை முன்கூட்டியே கண்டறிய புதிய தொழில்நுட்பம்

- இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் நிலவும் தட்பவெப்ப நிலையின் அடிப்படையில், டெங்கு காய்ச்சலுக்கான வைரஸ் பரவுவதைக் கண்டறிவதற்கு புதிய தொழில்நுட்ப முறையை பிரிட்டனில் உள்ள லிவர்பூல் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களும், ஹைதராபாதில் உள்ள இந்திய ரசாயன தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், குவாஹாட்டியில் உள்ள தேசிய மருந்தியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆய்வாளர்களும் இணைந்து உருவாக்கியுள்ளனர்.
- அவர்கள், பல்வேறு மாநிலங்களில் நிலவும் தட்பவெப்ப நிலையின் அடிப்படையில், டெங்கு வைரஸ் எப்படி பரவுகிறது என்பதை ஆய்வு செய்துள்ளனர்.
- கொசுவின் உடலில் டெங்கு வைரஸ் பல்கிப் பெருகுவதில், அந்தப் பகுதியின் தட்பவெப்ப நிலை முக்கியப் பங்கு வகிக்கிறது. ஒரு பிராந்தியத்தின் தட்பவெப்ப நிலை குறைவாக (17-18) டிகிரி செல்சியஸ்) இருந்தால், அந்தப் பிராந்தியத்தில் உள்ள கொசுக்களின் உடலில் டெங்கு வைரஸ் பல்கிப் பெருவதற்கு அதிக நாள்கள் ஆகும். இதனால், டெங்கு வைரஸ் பரவுவது குறைகிறது.
- அதேநேரம், ஒரு பிராந்தியத்தின் தட்பவெப்ப நிலை அதிகமாகும்போது (17 முதல் 30 டிகிரி செல்சியஸ்), அந்தப் பிராந்தியத்தில் உள்ள கொசுக்களின் உடலில் குறைந்த நாள்களில், டெங்கு வைரஸ் பல்கிப் பெருகுகிறது.
- இதனால், அதிக அளவில் டெங்கு வைரஸ் பரவுகிறது. இந்த நிலையில், இந்தியாவில் மழைப் பொழிவிற்கும், டெங்கு வைரஸ் பரவுவதற்கும் இடையே அதிக தொடர்புகள் இருப்பதை ஆராய்ச்சியாளர்கள் கவனித்திருக்கிறார்கள்.
- அதன்படி, பெரும்பாலான மாநிலங்களில் மழைக்காலத்தில், குறுகிய நாள்களிலேயே அதிக அளவில் டெங்கு வைரஸ் பரவுவதை அவர்கள் கண்டறிந்துள்ளனர்.

### சூரிய ஒளி மற்றும் நீரிலிருந்து ஹைட்ரஜன் எரிபொருளை உற்பத்தி செய்யும் செயற்கை இலை


- CSIR (Council of Scientific and Industrial Research) விஞ்ஞானிகள் நீரிலிருந்து ஹைட்ரஜன் எரிபொருளை உருவாக்குவதற்காக சூரிய ஒளியை கவர்ந்து கொள்ளும் ஒரு விதமான செயற்கை இலையை உருவாக்கியுள்ளனர். இந்த மேம்பாடு எதிர்காலத்தில் மகிழுந்துகளுக்கு சுற்றுச்சூழலுக்குத் தீங்கு தராத தூய்மையான எரிபொருளை உருவாக்கித் தரும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- இதில் உள்ள மிகச்சிறிய சன்னமான கம்பியிலாக் கருவி தாவர இலைகளைப் போன்று தோற்றமளித்து சூரிய ஒளியிலிருந்தும் தண்ணீரிலிருந்தும் ஆற்றலை உற்பத்தி செய்யும்.
- எப்பொழுது பார்க்கக்கூடிய ஒளி தாக்குகிறதோ அப்பொழுது செமிகண்டக்டர்ஸ் எனப்படும் குறைகடத்திகளும் எலக்ட்ரான்களும் மின்னாற்றலை உற்பத்தி செய்வதற்காக ஒற்றைத் திசையில் இயங்கும். இந்த மின்சக்தி கணப்பொழுதில் தண்ணீரை ஹைட்ரஜனாக பிரிக்கும்.
- தற்சமயம் ஹைட்ரஜன் ஆனது புகைபடிம எரிபொருள்களிலிருந்து நீராவியை சீரமைக்கும் முறையில் தயாரிக்கப்படுகிறது.
- இம்முறையில் உலக வெப்பமயமாதலை அதிகரிக்கும் பசுமைக் குடில் வாயுவான கார்பன்-டை-ஆக்ஸைடு அதிக அளவில் வெளியிடப்படுகிறது.

### “லாகி ரான்சம்வேர்” (Locky Ransomware) பற்றி CERT-In எச்சரிக்கை

- இந்திய கணினி அவசரகால மீட்பு நிறுவனம் (Indian Computer emergency Response Team - CERT - In) புதிதாக பரவிவரும் “லாகி” என்ற தீங்கிழைக்கும் மென்பொருள் பற்றி எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்த லாகி மென்பொருளானது ‘ஸ்பாம்’ (Spam) என்ற தேவையற்ற மின்னஞ்சல் செய்திகளோடு சேர்த்து பரப்பப்பட்டு வருகின்றது. இது கணினிகளை தாக்கி தரமிட்டு அதனை வாடிக்கையாளர் மீட்டும்போது பணம்கேட்டு மிரட்டும்.
- ரான்சம்வேர் என்பது அடிப்படையில் பணம் மிரட்டிக் கேட்டு பெறும்வரையில் கணினியின் உபயோகத்தைத் தடுக்கும் ஒரு தீங்கிழைக்கக் கூடிய மென்பொருளாகும்.
- வான்னா கிரை (WannaCry) மற்றும் பெட்யா (petya) போன்ற தாக்குதல்களுக்கு அடுத்து லாகி (locky) இந்த வருடத்தின் மூன்றாவது பெரிய மென்பொருள் தாக்குதல் ஆகும். இவை அனைத்தும் பன்னாட்டு நிறுவனங்களின் கணினிகள் உள்பட ஆயிரக்கணக்கான கணினிகளை முடமாக்கியது.

### WASP-12b எனும் கார்இருள் வெளிக்கோள்

- சமீபத்தில் விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் WASP-12b எனும் வெளிக்கோளானது (exoplanet) ஒளியே இல்லாத கார்இருள் (pitch black) போன்ற நிலையில் இருப்பதாகக் கண்டறிந்துள்ளனர். இதனை ஹப்பிள் தொலைநோக்கி வழியே விஞ்ஞானிகள் படம்பிடித்துள்ளனர்.



- இந்த புதிய கண்டுபிடிப்பு பூமியிலிருந்து 1400 ஒளி ஆண்டுகள் தொலைவிலுள்ள இந்த வெளிக்கோளின் வளிமண்டல (atmospheric Composition) அமைப்பை அறிய உதவும்.

## இந்தியாவின் அஸ்திரா ஏவுகணை

- முழுக்க உள்நாட்டு தொழில்நுட்பத்திலேயே தயாரிக்கப்பட்ட தொலைதூர இலக்குகளை துல்லியமாகத் தாக்கும் அதிநவீன "அஸ்திரா" ஏவுகணை வெற்றிகரமாக பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.
- பாதுகாப்புத்துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (DRDO / டி.ஆர்.டி.ஓ) மற்றும் இந்திய விமான படையின் (Indian Air Force- IAF) கூட்டு முயற்சியில் இந்த ஏவுகணை வடிவமைக்கப்பட்டது.
- இது காட்சி வரம்புக்கு அப்பாற்பட்ட வான் இலக்குகளை வானிலிருந்து ஏவப்பட்டு தாக்கி அளிக்கும் ஏவுகணை (Beyond Visual Range Air-to-Air Missile - BVRAAM) ரகம் ஆகும்
- இந்த ஏவுகணை 154 கிலோ எடையும், 20 கிலோ மீட்டரிலிருந்து 110 கிலோ மீட்டர் வரையுள்ள இலக்குகளை அழிக்க வல்லது.
- அடுத்த ஆண்டு "அஸ்திரா" ஏவுகணை இந்திய விமானப் படையில் இணைக்கப்பட உள்ளது.

## விஞ்ஞானிகள் முதல் முறையாக ஒளி ஒருமுகப்படுத்துதலைக் கண்டுள்ளனர்

- விஞ்ஞானிகள் முதன் முறையாக ஒளி (ஆப்டிக்கல்) ஒருமுகப்படுத்துதல் / துருவப்படுத்தலை கண்டுள்ளனர்.
- இந்திய வான் அறிவியலாளர் மற்றும் நோபல் பரிசு பெற்றவருமான சுப்பிரமணியன் சந்திரசேகர் 70 ஆண்டுகளுக்கு முன்னதாகவே கணித்த பிறகு விஞ்ஞானிகள் முதன்முறையாக ஒளியை ஒருமுகப்படுத்தும் நிகழ்வைக் கண்டுள்ளனர். (விரைவாக சுழலும் நட்சத்திரம் மூலம் உமிழப்படும் துருவ ஒளி).
- ஒளியை ஒருமுகப்படுத்தும் நிகழ்வு என்பது ஒளிக்கற்றையின் நோக்குநிலை ஊசலாட்டத்தை அதன் பயண திசையில் அளவிடுவது ஆகும்.
- இந்த நிகழ்வை உயர் துல்லிய துருவமுனைப்பு கருவி மூலம் கண்டுள்ளார்கள், இது உலகின் அதிக

உணர்திறன்கொண்ட வானியல் துருவமுனைப்பான் ஆகும். இது ரெகுலஸில் இருந்து துருவ ஒளியைக் கண்டறிய பயன்படுகிறது. ரெகுலஸ் என்பது இரவில் வானத்தில் இருக்கும் பிரகாசமான நட்சத்திரங்களில் ஒன்றாகும். இது சுமார் 79 ஒளி வருடங்கள் தொலைவில் உள்ளது.

## இந்தியாவும் குவாண்டம் கணினிகளும்

- குவாண்டம் கணினிகள் மேம்பாட்டிற்கான திட்டத்திற்கு நிதியளிக்க அறிவியல் தொழில்நுட்பத் துறை திட்டமிட்டுள்ளது.

### குவாண்டம் இயக்கவியல்

- இன்றளவிலும் கோட்பாட்டியல் வடிவில் மட்டுமே உள்ள குவாண்டம் கணினிகள் குவாண்டம் இயக்கவியல் கொள்கையினை அடிப்படையாகக் கொண்டு வழக்கமான 1 மற்றும் 0 எனும் இரட்டை இரும எண்களுக்குப் பதிலாக க்யூபிட்ஸ் எனும் குவாண்டம் இருமங்களில் தகவல்களை சேகரிக்க வல்லன.
- உகந்த மின்னணு சுற்றமைப்பு வடிவமைப்புகள் இருப்பதால் இவை கடினமான எண்ணியல் தீர்வைப் பணிகளை பிற அறிதிறன் கணினிகளோடு ஒப்பிடுகையில் இவை பலமடங்கு திறனோடு செயல்படக்கூடியவை.
- இக்கணினிகள் க்யூபிட்ஸ் (Qubits) எனும் குவாண்டம் இருமங்களில் தகவல்களை சேகரிக்க வல்லன.

## ஏரி தூய்மைப்படுத்துதலுக்கான புதிய வேதியியல் சுத்திகரிப்பு தொழிற்நுட்பம்

- CV தொழிற்நுட்பம் எனும் வேதியியல் சுத்திகரிப்பு தொழிற்நுட்பத்தை பயன்படுத்தி ஹைதராபாத்திலுள்ள உசைன்சாகர் ஏரியை விஞ்ஞானிகள் சுத்திகரித்துள்ளனர்.
- இதன்வழி சுத்திகரிக்கப்பட்ட நீர் உலக சுகாதார நிறுவன மற்றும் இந்திய தரச்சான்று நிலைகளை சந்திப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- இவ்வேதியியல் சுத்திகரிப்பு முறை உயிரியல் சுத்திகரிப்பு முறையை பயன்படுத்தும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை விட (Sewage treatment plant) வேகமாக சுத்திகரிக்க வல்லன.
- இந்த சுத்திகரிக்கப்பட்டுள்ள நீரில் BOD எனப்படும். உயிரியல் ஆக்ஸிஜன் தேவை அளவு குறைந்திருப்பதும், தண்ணீர் தரத்திற்கான 12 அளவுருக்கள் (Parameter) மேம்பட்டிருப்பதும், மொத்த திட கரைபொருள் (TDS) அளவு அதிகரித்திருப்பதும், உலோக அயனிகளின் அளவு கணிசமாக குறைந்திருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

BOD – உயிரியல் ஆக்ஸிஜன் தேவை (Biological Oxygen demand)

- ✓ நுண்ணுயிரிகள் நீரிலுள்ள கரிமப் பொருட்களை மக்கச்செய்ய கட்டாயமாக வேண்டிய கரைந்த ஆக்ஸிஜன் அளவே (Dissolved Oxygen) BOD எனப்படும்.
- ✓ இவை நீரின் தரத்தை அல்லது நீரின் மாசுபாட்டு அளவை கண்டறிய பயன்படும்.
- ✓ குறைந்தபட்ச BOD அளவானது ஆக்ஸிஜன் சார்ந்த உயிரிகளுக்கு நீர் பொருந்தக்கூடிய நிலையில் உள்ளது என்பதை குறிக்கும்.

## குறுங்கோள் துரத்தும் விண்கலம்

- நாசாவினுடைய குறுங்கோள் துரத்தும் விண்கலமான ஓசிரிஸ் – ரெக்ஸ் (OSIRIX – REX) விண்கலம் வெற்றிகரமாக புவியீர்ப்பு விசையினால் சுழன்றடிக்கப்பட்டு புவியின் அருகிலுள்ள பென்னு எனும் குறுங்கோளின் பயணப்பாதையில் நிலை நிறுத்தப்பட்டு உள்ளது.

- ஓசிரிஸ் – ரெக்ஸ் விண்கலமானது 101955 பென்னு எனும் கரிமம் நிறைந்த குறுங்கோளை (Carbonaceous asteroid) ஆராய 2016 – செப்டம்பரில் நாசாவால் அனுப்பப்பட்டது.
- இது நாசாவின் முதல் குறுங்கோள் மாதிரிகளை தேர்ந்தெடுக்கும் திட்டமாகும் (Asteroid Sampling Mission).

### இந்தியாவின் முதல் மின்சார பேருந்து சேவை

- இந்தியாவின் முதல் மின்சார பேருந்து சேவை இமாச்சலப் பிரதேசத்திலுள்ள சுற்றுலாத் தளமான ரோத்தாங் கணவாயில் தொடங்கப்பட்டுள்ளது.
- தேசிய பசுமைத் தீர்ப்பாயம் பலவீனமான சுற்றுச்சூழல் பகுதியில் (Fragile environment) பெட்ரோல், டீசல் வாகனங்களை கட்டுப்படுத்த உத்தரவிட்டதன் பேரில் இம்முயற்சி தொடங்கப்பட்டு உள்ளது.
- கார்பன் உமிழ்வால் இமயமலைப் பனிப்பாறைகள் உருகுவதை கட்டுப்படுத்த இம்முயற்சி ஏற்படுத்தப்பட்டு உள்ளது.

## சுற்றுப்புறச்சூழல்

### லேபியோ பிலிப்பெரஸ் – புதிய வகை சாப்பிடக்கூடிய மீன் இனம் கேரளாவின் பம்பா நதியில் கண்டுபிடிப்பு

- சாப்பிடக்கூடிய புதிய நன்னீர்வகை மீன் இனத்தை ஆராய்ச்சியாளர்கள் கேரளாவின் பத்தனம்திட்டா மாவட்டத்தில் பம்பா நதியில் கண்டுபிடித்துள்ளனர். இதற்கு லேபியோ பிலிப்பெரஸ் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இது லேபியோ இனத்தைச் சார்ந்ததாகும்.
- லேபியோ இனத்தைச் சார்ந்த மீன் வகைகள் இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், வங்கதேசம், இலங்கை, பர்மா, மலேசியா, சிரியா மற்றும் ஆப்பிரிக்காவின் வெப்பமண்டலப் பகுதி ஆகிய இடங்களில் உள்ள உள்நாட்டு நீர்நிலைகளில் பரவலாகக் காணப்படுகிறது.
- இந்தியாவில் மட்டும் 31 வகையான லேபியோ இனத்தைச் சார்ந்த மீன் வகைகள் இருப்பதாகத் தெரியவந்துள்ளது. இதில் 'ரோகு' என்றறியப்படும் லேபியா ரோஹிதா உள்பட அனைத்து வகைகளும் பெருவாரியாக மீன்வளர்ப்புத் தொழிலில் பயன்படுகின்றன.
- இந்த புதிய லேபியா இன வகை மீன்கள் கேரளாவில் மட்டும் கண்டறியப்பட்டுள்ள இரண்டாவது வகையாகும். ஏற்கெனவே கேரளாவில் இருந்து கண்டறியப்பட்டுள்ள மற்ற லேபியோ இன வகையானது "லேபியோ டசுமியரி" ஆகும்.

### ஸ்மார்ட் – இ போக்குவரத்து திட்டம் அறிமுகம்

- மின்சார கைவண்டிகள் (Electric Rickshaws) "Smart E" என்ற பெயரில் ஹரியானாவின் குருகிராமில் தரைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்தால் ஆரம்பிக்கப்பட்டது.
- இந்த ரிக்ஷாக்கள் "இந்தியாவில் தயாரிப்போம்" என்ற திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்டவை. மேலும் இவை GPS வசதியோடு கண்காணிப்பு முறையும் பொருத்தப்பட்டிருக்கும்.




- இத்திட்டம் ஹரியானா மாநில அரசோடும் டெல்லி மெட்ரோ இரயில் நிறுவனத்தோடும் ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது.
- இத்திட்டதின் முக்கிய நோக்கம் கடைநிலைப் பகுதி போக்குவரத்துத் தொடர்பை ஏற்படுத்தித் தருவதாகும். அத்தோடு கார்பன் வெளியீட்டைக் குறைப்பதும் அடுத்த 4-5 வருடங்களில் ஒதுக்கப்பட்ட இளைய சமுதாயத்திற்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவதும் இதன் மற்ற முக்கிய நோக்கங்களாகும்.

## இந்திய சுந்தரவனக் காடுகளில் உள்ள விலங்குகளின் தகவல்கள் தொகுப்பு

- இந்திய விலங்கியல் கணக்கெடுப்பு (ZSI) நிறுவனம் முதன் முறையாக "இந்திய துணைக்கண்டத்தின் சுந்தரவன உயிர்க்கோள இருப்பின் விலங்கினங்கள்" ('Fauna of Sundarbans Biosphere Reserve in Indian Sundarbans') எனும் தொகுப்பை வெளியிட்டுள்ளது.
- சுந்தரவனப் பகுதி யுனஸ்கோவின் (UNESCO) உலக பாரம்பரிய நினைவிடங்களில் ஒன்றாகும்.
- இது உலகின் மிகப்பெரிய உவர்ப்பான அலைமுகத்துவார மாங்குரோவ் காடுகளை உடையதாகும்.
- மேலும் இது 104 தீவுகளில், 9630 சதுர கி.மி க்கு பரந்துள்ள, கங்கை – பிரம்மபுத்திரா டெல்டாவின் ஒரு பகுதியாகும்.

**ZSI**

- 1916ல் உருவாக்கப்பட்ட விலங்கின வகைப்பாட்டினத்தை மேற்கொள்ளும் இந்தியாவின் உச்ச அமைப்பு.
- இந்திய துணைக்கண்டத்தில் விலங்கின வகைப்பாட்டினிலுள்ள கணக்கெடுப்பு, கள ஆய்வு (Exploration), ஆராய்ச்சி, ஆவணப்படுத்துதல் போன்ற பல அம்சங்களை மேம்படுத்துவதே இதன் முக்கிய நோக்கம் ஆகும்.

## மரம் நல்லது" - பிரச்சாரம்


- மத்திய வன, சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாறுபாட்டு அமைச்சகம் நில அறிவியல் பயன்பாட்டிற்கு கூட்டு முயற்சியின் கீழ் மரம் நல்லது (Wood is Good) என்ற பிரச்சாரத்தை தொடங்கியுள்ளது.

- நீடித்த நிலவமைப்பு மற்றும் வன சூழியலமைப்பு: நடைமுறைக் கோட்பாடு (Sustainable landscape and forest ecosystem: Theory of practice) என்ற இரண்டு நாள் மாநாட்டின் ஒரு பகுதியாக இப்பிரச்சாரம் தொடங்கப்பட்டுள்ளது.
- உற்பத்தியின் போது கார்பன் அடிச்சுவடுகளை (Carbon footprints) வெளியிடும் இரும்பு மற்றும் பிளாஸ்டிக் (நெகிழி) போன்றவற்றுக்கு மாற்றாக, கார்பன் நடுநிலையுடைய பருவநிலையோடு நட்பு போக்குடைய மூலவளமான மரங்களை ஊக்குவிப்பதே இதன் நோக்கமாகும்.

## நல்லமலை வனங்களில் சுட்டிமான்/எலிமான் மறு அறிமுகம்



- நாட்டிலே முதன் முறையாக, தெலுங்கானா வனத்துறை அம்ராபாத் புலிகள் காப்பகத்தில் உள்ள நல்லமலை வனங்களில் சுட்டிமான்/எலிமான்களை (Mouse Deer) மறு-அறிமுகம் செய்துள்ளது.
- இவ்வாறு அறிமுகப்படுத்தப்பட்ட எலிமான்கள் தங்களை வனசூழலுக்கு தகவமைத்து கொண்டன என அறிய வரும் வேளையில் நேரு விலங்கியல் பூங்காவில் பெருக்கப்பட்டு வரும் பிற சுட்டிமான்களும் இதே செயல்முறை பின்பற்றலின் வழி வனங்களில் விடப்பட்டு புலிகள் காப்பகத்தின் (Tiger Reserve) உயிரி பல்வகைத்தன்மை (Bio-diversity) கூட்டப்படும்.




| | |
|---|---|
| District | Mahaboobnagar and Nalgoda |
| Area | Core area - 2166.37 Sq. Kms., Buffer area - 445.02 Sq. Kms. |
| Notified on | Wildlife Sanctuary - 27-06-1978, Tiger Reserve in 1983 |
| Temperature | Max: 45°C; Min : 8°C |
| Rainfall | Average Rainfall : 900-1000mm |
| Forest Type | Southern dry mixed deciduous forest, southern tropical moist deciduous forest types intermingled with scrub, bamboo and grass. |
| Tribes | Most Primitive tribes, Chenchu and the Lambadas - the pastoral nomads live here |
| Indicator species | Tiger. |

- இந்த சுட்டிமான்/எலிமான்கள் புள்ளியுடைய செவ்ரோடைன் (Spotted Chevrotain) எனவும் அழைக்கப் படுகின்றது.
- வழக்கமாக நாட்டின் இலையுதிர் மற்றும் பசுமை மாறா காடுகளில் (deciduous & evergreen) காணப்படும் இவை அழியும் தருவாயிலுள்ள (endangered species) உயிரினமாகும்.
- மார்ச் 2010-ல் நேரு விலங்கியல் பூங்கா, LACONES மற்றும் மத்திய விலங்கியல் பூங்கா ஆணையத்தோடு சுட்டிமான்/எலிமான்களுக்கான பாதுகாக்கப்பட்ட இனப்பெருக்கத் திட்டத்தை மேற்கொண்டதன் விளைவாக 6 வருடங்களில் தற்போது அவற்றின் எண்ணிக்கை 172 ஆக உயர்ந்துள்ளது.

## ‘மறையத்தகு உயிரினங்கள்’ பட்டியலில் பனிச் சிறுத்தைகள்

- IUCN எனப்படும் பன்னாட்டு இயற்கை பாதுகாப்புச் சங்கம் பனிச்சிறுத்தைகளை ‘அழிவு நிலை இனங்கள்’ (Endangered Species – EN) எனும் வகைப்பாட்டில் இருந்து, ‘மறையத்தகு உயிரினங்கள்’ (Vulnerable – VU) எனும் வகைப்பாட்டிற்கு நிலை மாற்றப்பட்டுள்ளது.



- நிபுணர்கள் இத்தகைய புதிய வகைப்பாடு பனிச்சிறுத்தைகள் பாதுகாப்பாக உள்ளன என பொருளில்லை என்று எச்சரித்துள்ளனர்.

## சர்வதேச பனிச்சிறுத்தை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மன்றக் கூட்டமைப்பு – பிஷ்கெக், கிர்கிஸ்தான்

- சர்வதேச பனிச்சிறுத்தை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மன்றக் கூட்டமைப்பு கிர்கிஸ்தானில் உள்ள பிஷ்கெக் நகரில் நடைபெற்றது.
- இக்கூட்டமைப்பின் நோக்கமானது, 2020ஆம் ஆண்டிற்குள் 20 பனிச்சிறுத்தை வாழும் இடங்களை பாதுகாப்பதாகும்.
- பனிச்சிறுத்தையானது, IUCN சிவப்பு தரவு பட்டியலில் (Red Data List) ‘ஆபத்தான’ (Endangered) பிரிவில் வகைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், CITES முதலாம் தொகுப்பில் (Appendix-I) சேர்கப்பட்டுள்ளது. இதனால் பனிச்சிறுத்தையின் உடல் பாகங்கள் சர்வதேச சந்தையில் வியாபாரம் செய்ய தடைசெய்யப்பட்டுள்ளது.

- பனிச்சிறுத்தை, ஆப்கானிஸ்தான், பூடான், சீனா, இந்தியா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், மங்கோலியா, நேபாளம், பாகிஸ்தான், ரஷ்யா, தஜிகிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய 12 நாடுகளில் வாழிடம் கொண்டுள்ளது.
- தஜிகிஸ்தானை தவிர மற்ற நாடுகள் அனைத்தும் CITES (Convention on International Trade in Endangered Species of Wild Fauna and Flora) அமைப்பில் உறுப்பினர்களாக உள்ளன.

### இலட்சத்தீவுகளில் ஒன்றான பாராலி I – முழுமையாக மறைந்துவிட்டது

- கடலரிப்பின் காரணமாக இலட்சத்தீவுகளின் ஒரு பகுதியில் யாரும் குடியேறாத தீவுகளில் ஒன்றான பாராலி I என்ற தீவு முழுமையாக மறைந்துவிட்டது.
- பங்காராம் என்ற பவளத்தீவின் ஒரு பகுதியான பாராலி – I என்ற தீவு 1968ம் வருடம் 032 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டதாகும். இது லட்சத்தீவுகளில் உள்ள குடியேற்றமில்லாத தீவுகளில் ஒன்றாகும். இது, தற்சமயம் கடுமையான கடலரிப்பின் காரணமாக முற்றிலும் மறைந்து விட்டது.




- தற்பொழுது விஞ்ஞானிகள் வழக்கமான அடிப்படையிலான பாதுகாப்பு முறைகளோடு கூடுதலாக மாங்குரோவ் காடுகள் மூலம் உயிரியல் ரீதியான பாதுகாப்பிற்கான முயற்சிகள் வழியாகவும் இத்தீவுகளைப் பாதுகாப்பதற்கான சாத்தியக் கூறுகளைப் பரிந்துரைத்துள்ளனர்.

## மாநிலம்

### ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டம்

- அசாம் மாநிலத்தில் ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டம் (Armed Forces (Special Powers) Acts - AFSPA) மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.
- ஒட்டுமொத்த அசாம் மாநிலமும் கலவரத்தால் பாதிக்கப்பட்ட பகுதி ('Disturbed Area') என்று மத்திய அரசு அறிவித்து இருந்தது. இந்நிலையில் ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் இந்த உத்தரவு மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.
- அஸ்ஸாம் மாநிலத்தில் கடந்த 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டம் அமலில் உள்ளது. உல்பா புரட்சியாளர்களின் (United Liberation Front of Asom - ULFA) பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்த இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது .

- தற்சமயம் , ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டம் அமல்படுத்தப்பட்டு இருக்கும் மாநிலங்கள் :
    1. அருணாசலப் பிரதேசம்
    2. அஸ்ஸாம்
    3. மணிப்பூர்
    4. மேகாலயா
    5. மிசோரம்
    6. நாகலாந்து
    7. ஜம்மு காஷ்மீர்
- திரிபுரா மாநிலத்தில் மே மாதம் 2015 இல் ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டம் விலக்கப்பட்டது.

## இந்தியாவின் முதல் நவீன ஹோமியோபதி வைராலஜி ஆய்வகம் - கொல்கத்தா

- இந்தியாவின் முதல் நவீன வைராலஜி ஆய்வகம் கல்கத்தாவிலுள்ள டாக்டர். அஞ்சலி சட்டர்ஜி பிராந்திய ஹோமியோபதி நிறுவனத்தில் துவங்கப்பட்டுள்ளது.
- ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் இந்த ஆய்வகம் செயல்பட உள்ளது. பன்றிக்காய்ச்சல், சிக்கன் குனியா, டெங்கு, ஜப்பானிய மூளைக்காய்ச்சல் இன்புளூயன்சா போன்ற வைரஸ் நோய்களில் ஹோமிபதியின் வழி அடிப்படை ஆராய்ச்சிகளை (Basic & Fundamental Research) மேற்கொள்ள 8 கோடி ரூபாய் செலவில் இந்தியாவில் அமைக்கப்பட்டுள்ள ஒரே ஆய்வு நிறுவனம் இதுவாகும்.
- இந்த ஆய்வகம் மூலம் வைரஸ் நோய்களினால் பெருகிவரும் சவால்களை களையவும் புது மருந்துகள் மற்றும் தொழில்நுட்பங்களை மேம்படுத்தவும் முயற்சிகள் எடுக்கப்படும்.
- ஹோமியோபதியில் உயர்கல்வி (ம) பயிற்சி அளிக்கும் தேசிய ஹோமியோபதி நிறுவனம் மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் கொல்கத்தாவில் செயல்படுகின்றது.

## பொலிவுறு நகர திட்டத்தை செயல்படுத்த புதுச்சேரி ஸ்மார்ட் சிட்டி டெவலப்மெண்ட் நிறுவனம் தொடக்கம் (SPV)

- புதுவையில் பொலிவுறு நகரத் திட்டத்தை செயல்படுத்த புதுச்சேரி அரசு "ஸ்மார்ட் சிட்டி டெவலப்மெண்ட் லிட்" (SPV) என்ற நிறுவனத்தை அமைத்துள்ளது.
- நிறுவனச் சட்டம் 2013ன் கீழ் வரையறுக்கப்பட்ட நிறுவனங்கள் என்று பதியப்பட்டுள்ள நிலையில், புதுச்சேரி அரசும் நகராட்சியும் 50:50 பங்குதாரர்களாக இருந்து செயல்படுத்துவார்கள்.
- இது 16 உறுப்பினர்கள் கொண்ட இயக்குனர் குழுவாக செயல்படும். இதன் தலைவராக தலைமைச் செயலாளர் மனோஜ் பரிதா செயல்படுவார். இக்குழுவின் இயக்குனர்களில் நிதித்துறை செயலாளர்; உள்ளூர் நிர்வாகத் துறை, சுற்றுலாத்துறை, தகவல் தொழில் நுட்பத்துறை, மின்துறை செயலாளர்களும் அடக்கம். நிறுவனத்திற்கான தலைமைச் செயல் அதிகாரியும் நியமிக்கப்பட இருக்கிறார்.
- பொலிவுறு நகரத் திட்டத்தை, தயார்செய்து செயல்படுத்துவதற்கான தொழில்நுட்ப உதவி மற்றும் திறன் வளர்ச்சியை அளிப்பதற்காக AFD என்ற பிரஞ்சு இருதரப்பு வளர்ச்சி நிறுவனம் உதவவுள்ளது.

### ஆப்ரேஷன் ஜீபைடா (ZUBAIDA)

- ❖ போலி ஆயுத உரிமங்கள் மற்றும் சட்டவிரோதமாக வைத்திருக்கக் கூடிய ஆயுதங்களை பறிமுதல் செய்து, அவற்றில் ஈடுபடுபவர்களை கைதுசெய்தலுக்கான ஓர் நடவடிக்கையே ஆப்ரேஷன் ஜீபைடா ஆகும்.
- ❖ இது பயங்கரவாத எதிர்ப்பு படை (Anti – terrorism squad) ஆல் மேற்கொள்ளப்படுகிறது.
- ❖ ராஜஸ்தான் பயங்கரவாத எதிர்ப்பு படை அண்மையில் மிகப்பெரிய சட்டவிரோத ஆயுத கடத்தலை கண்டறிந்து அழித்துள்ளது.

### இந்தியாவின் முதல் ஹைபர்லூப் திட்டம் – ஆந்திரப்பிரதேசம்

- ❖ ஆந்திரப்பிரதேசத்தில் விஜயவாடாவையும் அமராவதியையும் இணைக்கும் இந்தியாவின் முதல் ஹைபர்லூப் திட்டம் வரவிருக்கிறது. இத்திட்டத்தை மேம்படுத்துவதற்காக ஆந்திரப்பிரதேச பொருளாதார மேம்பாட்டு குழுவும் ஹைபர்லூப் போக்குவரத்து தொழில்நுட்பங்கள் நிறுவனமும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கையெழுத்திட்டன.



#### ஹைபர்லூப்

- ❖ ஹைபர்லூப் என்பது மூடப்பட்ட குழாய்களை உள்ளடக்கியதாகும். இதனுள்ளே விதைப்பை போன்ற அமைப்பு அல்லது காயை மூடியுள்ள அமைப்பு சீரான வேகத்திலும் முடுக்கத்திலும் காற்றின் எதிர்ப்போ அல்லது உராய்வோ அற்ற ஒரு போக்குவரத்து முறையில் மக்களும் பொருட்களும் பயணிப்பதற்கு உதவும்.

## பிரபலமானவர்கள் , விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

### இந்தியாவின் புதிய தலைமைக் கணக்குத் தணிக்கையாளர்

- ❖ இந்திய அரசின் புதிய கணக்குத் தணிக்கைக் தலைவராக , மூத்த இந்திய ஆட்சிப்பணி அதிகாரி ராஜீவ் மேஹ்ரிஷி நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இந்தியாவின் 13 ஆவது கணக்குத் தணிக்கைக் தலைவர் ஆவார்.
- ❖ இதற்குமுன் இப்பதவியில் இருந்த சஷி கன்ட் ஷர்மா , செப்டம்பர் 25 (2017) அன்று பணி ஓய்வு பெற இருக்கிறார்.
- ❖ இந்திய அரசு, மாநில அரசுகள் மற்றும் அரசு நிதி உதவியை பெறும் அமைப்புகளின் வரவு செலவுக்

கணக்கைச் சரிபார்க்கும் அமைப்பாகும் . இது இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் பகுதி 5 இல், அத்தியாயம் 5 – சரத்து 7B மற்றும் சரத்து 148 இன் கீழ் நிறுவப்பட்ட ஓர் அதிகார மையம் ஆகும்.

- ❖ அரசுடமையாக்கப்பட்ட அனைத்து நிறுவனங்களுக்கும் வெளித் தணிக்கையாளராகவும் இவர் செயல்படுகிறார். அரசுடன் வருமானத்தைப் பகிர்ந்து கொள்ளும் திட்டங்களில் தனியார் நிறுவனங்கள் மற்றும் தனியார்-பொது பங்களிப்புத் திட்டத்தை(PPP) ஆய்வு செய்யும் அதிகாரம் தலைமைக் கணக்குத் தணிக்கையாளருக்கு உண்டு
- ❖ தலைமைக் கணக்குத் தணிக்கையாளரின் அறிக்கைகள் நாடாளுமன்ற/மாநிலச் சட்டப்பேரவைகளின் சிறப்புக் குழுக்களான பொது கணக்குக் குழுக்களால் ஆய்வு செய்யப்படுகின்றன.
- ❖ இந்திய அதிகார முன்னுரிமைப் பட்டியலில் ஒன்பதாவதாக உச்ச நீதிமன்ற நீதிபதிக்கு இணையாக வரிசைப்படுத்தப்பட்டுள்ளார்.

## இந்தியாவின் புதிய தலைமை தேர்தல் ஆணையர்

- ❖ இந்தியாவின் புதிய தலைமை தேர்தல் ஆணையராக முன்னாள் இந்திய ஆட்சிப்பணி அதிகாரி சுனில் அரோரா பதவியேற்க உள்ளார்.
- ❖ இதற்குமுன் தலைமை தேர்தல் ஆணையராக இருந்த நஜிம் ஜைதி கடந்த ஜூலை மாதம் பணி ஓய்வு பெற்றார். இதன்பின் அந்த பணியிடம் காலியாக இருந்து வந்தது.
- ❖ இந்திய தேர்தல் ஆணையமானது நாட்டின் நாடாளுமன்ற மற்றும் மாநில சட்டமன்ற தேர்தல்களை நேர்மையாகவும் , நியாயமான முறையிலும் நடத்துவதற்கு அரசியலமைப்பு ரீதியில் அதிகாரம் அளிக்கப்பட்ட அமைப்பு ஆகும்.
- ❖ இந்தியாவின் தலைமைத் தேர்தல் ஆணையர் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகிறார்.பதவியில் இருக்கும் தலைமை தேர்தல் ஆணையர் வழங்கும் பரிந்துரை அடிப்படையில் அடுத்த தலைமை தேர்தல் ஆணையர் நியமிக்கப்படுவார்.
- ❖ அரசின் மூத்த தேர்தல் ஆணையர் தலைமைத் தேர்தல் ஆணையராக பதவி வகிப்பது வழக்கமாகும்.
- ❖ பதவிக் காலம்: ஆறு வருடங்கள் அல்லது 65 வயது
- ❖ உச்சநீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கு கிடைக்கும் அதே அதிகாரப்பூர்வ நிலை, சம்பளம் மற்றும் சலுகைகள் இவருக்கு வழங்கப்படுகிறது.
- ❖ பாராளுமன்றத்தில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் மட்டுமே தலைமைத் தேர்தல் ஆணையரை பதவி நீக்கம் செய்ய முடியும் . இத்தகைய தீர்மானம் நிறைவேற மக்களவை மற்றும் மாநிலங்களவையில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவு தேவைப்படுகிறது.
- ❖ பொதுவாக, இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் தலைமை தேர்தல் ஆணையராக பதவி நியமனம் செய்யப்படுகின்றனர்.

## புகழ்பெற்ற கொங்கனி எழுத்தாளருக்கு சரஸ்வதி சம்மன் விருது

- ❖ 2016 ஆம் ஆண்டிற்கான சரஸ்வதி சம்மன் விருது, புகழ்பெற்ற கொங்கனி எழுத்தாளர் மகாபலேஷ்வர் செய்ல் (Mahabaleshwar Sail) எழுதிய ஹவ்தான் (Hawthan) என்ற புதினத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.
- ❖ செயில் மராத்தி மற்றும் கொங்கனி ஆகிய இரண்டு மொழிகளில் எழுதும் வல்லமை பெற்றவர் . இவர் நான்கு மராத்தி நாடகங்களையும் , ஏழு கொங்கனி புதினங்களையும் எழுதி உள்ளார்.

- ஹவ்தான் புதினமானது கோவா பகுதியைச் சார்ந்த குயவர் சமூகத்தின் கலாச்சாரத்தினை எடுத்துரைக்கிறது.
- சரஸ்வதி சம்மன் விருது ஆண்டுதோறும் சிறந்த கவிதைகள் அல்லது கவிதை இலக்கியப் படைப்புகளுக்கு வழங்கப்படுகிறது .
- இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் பட்டியல் எட்டில் (Schedule VIII) குறிப்பிடப்பட்டிருக்கும் இருபத்து இரண்டு மொழிகளில் எழுதப்படும் கவிதை இலக்கியப் படைப்புகளுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.
- கல்வியின் கடவுளான சரஸ்வதியின் பெயரால் வழங்கப்படும் இவ்விருது இலக்கிய உலகில் மிக உயரியதாக கருதப்படுகிறது.
- சரஸ்வதி சம்மன் விருது கே.கே.பிர்லா அமைப்பால் 1991 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது.

## ராஜஸ்வா கியான் சங்கம் – 2017

- ராஜஸ்வா கியான் சங்கம் என்பது நேரடி வரிகளின் மத்திய வாரியம் (The Central Board of Direct Taxes – CBDT) மற்றும் மத்திய கலால் மற்றும் சுங்க வாரியத்தின் (Central Board of Excise & Customs – CBEC) கூட்டு மாநாடு ஆகும்.
- மாநாடு நிகழ்ந்த தினம் : செப்டம்பர் 1
- மாநாடு நிகழ்ந்த இடம் : புது தில்லி
- ராஜஸ்வா கியான் சங்கம் 2016 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
- ராஜஸ்வா கியான் சங்கத்தின் மாநாட்டில் மூத்த அதிகாரிகள் கலந்து கொள்வது வழக்கம் . இம்முறை நிகழ்ந்த இரண்டு நாள் மாநாட்டில் முதல் முறையாக மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிதித் துறையின் மூத்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.
- இம்மாநாட்டின் முக்கிய நோக்கம் திட்டத்தை வகுப்பவர்களுக்கும் , நிர்வாகத் துறை அலுவலர்களுக்கும் இடையே இரண்டு வழித் தொடர்பினை ஏற்படுத்துவது ஆகும். பல்வேறு துறைகளில் சட்டம் மற்றும் திட்டங்களை திறம்பட செயல்படுத்த இம்மாநாடு வழிவகை செய்கிறது.

## இந்தியாவின் முதல் ‘உலக பாரம்பரிய நகரம்’

- குஜராத் மாநிலத்தின் அகமதாபாத் நகரை ‘உலக பாரம்பரிய நகரம்’ என யுனெஸ்கோ அமைப்பு அறிவித்துள்ளது.
- இந்தியாவில் இந்த பெயரைப் பெறும் முதல் நகரம் இதுவாகும்.
- ஆசிய அளவில் இந்த அங்கீகாரத்தைப் பெறும் மூன்றாவது நகரம் இதுவாகும்.
- யுனெஸ்கோ அமைப்பு இந்நகரத்தை ‘உலக பாரம்பரிய நகரம்’ என ஜூலை மாதம் 8-ஆம் தேதியன்று போலந்தில் நடைபெற்ற கூட்டத்தின் போது அறிவித்தது.
- உலக பாரம்பரியச் சின்னங்ககளின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை சீனாவுக்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.
- இந்தியாவில் மொத்தம் 36 கலாச்சார சின்னங்கள் உள்ளன – 28 கலாச்சார சின்னங்கள் , 7 இயற்கைச் சின்னங்கள் , 1 கலாச்சார மற்றும் இயற்கைச் சின்னம்.
- 15 ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட, அகமதாபாத் நகரம், சபர்மதி ஆற்றின் கிழக்கு கரையில் வளமான கட்டிடக்கலை மற்றும் பாரம்பரியத்தை எடுத்துரைக்கிறது.
- அகமதாபாத் நகரில் மொத்தம் 28 கலாசாரச் சின்னங்கள் இந்தியாவின் மத்தியத் தொல்லியல்

துறையால் (Archaeological Survey of India – ASI) பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

- யுனெஸ்கோ தலைமை இயக்குனர் : இரினா பொகோவா (2009- தற்போது வரை )

## இந்திய பத்திரிக்கை அறக்கட்டளை – புதிய தலைவராக விவேக் கோயங்கா

- எக்ஸ்பிரஸ் குழுவின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரான விவேக் கோயங்கா இந்திய பத்திரிக்கை அறக்கட்டளை தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இந்து பத்திரிக்கையின் முன்னாள் தலைமை ஆசிரியர் ரவி இதன் துணைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- இந்திய பத்திரிக்கை அறக்கட்டளை என்பது இந்தியாவின் மிகப்பெரிய செய்தி நிறுவனம் ஆகும். இது ஒரு லாபநோக்கற்ற கூட்டுறவு நிறுவனமாகும். இதன் தலைமையகம் புதுதில்லியில் உள்ளது.
- இது இந்தியாவில் உள்ள மாநிலங்களில் நிகழும் நிகழ்வுகளையும் தகவல்களையும் திரட்டி தருகின்றது.
- இன்சாட் என்ற தகவல்தொடர்பு செயற்கைக் கோளைக் கொண்டு தனக்கென்று ஒரு தகவல்தொடர்பு செயற்கைக்கோளுடன் தகவல்களையும் செய்திகளையும் ஒளிபரப்பும் ஒரு நிறுவனம் தெற்காசியாவிலேயே இந்திய பத்திரிக்கை அறக்கட்டளை மட்டுமே.

## திறன்மிகு விவசாயம் பற்றிய கூடுகை : புது தில்லி

- திறன்மிகு விவசாயம் பற்றிய கூடுகை ('Smart Agriculture Conclave') மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் உயிரி - தொழில்நுட்பவியல் துறையால் (Department of Bio-Technology -DBT) புதுதில்லியில் ஒருங்கிணைக்கப்பட்டது.
- கூடுகை நிகழ்ந்த நாள் : ஆகஸ்ட் 30 , 31
- இந்தக் கூடுகையினை இந்திய உயிரி - தொழில்நுட்பவியல் துறையுடன் இணைந்து இங்கிலாந்தின் உயிரி - தொழில்நுட்ப துறையும் (Biotechnology and Biological Sciences Research Council – BBSRC) , இங்கிலாந்து ஆராய்ச்சிக் குழுமமும் (Research Councils UK - RCUK) ஒருங்கிணைத்தன.
- இக்கூடுகையின் முடிவாக, இந்தியாவில் 'விவசாய மண்டலம்' (FarmerZone) அமைக்க மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் உறுதி ஏற்றுள்ளது.
- விவசாய மண்டலமானது, சிறு, குறு மற்றும் விளிம்பு நிலையில் உள்ள விவசாய மக்களுக்கு இலவச திறன்மிகு தொழில்நுட்ப உதவிகளை ஏற்படுத்தி தர உருவாக்கப்படவுள்ளது. மேலும், விவசாய பொருட்களை நேரடியாக விற்பதற்காக 'விற்பனை சந்தை மண்டலம்' அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

## தேசிய ஊட்டச்சத்து வாரம் : 1 - 7 செப்டம்பர்

- தேசிய ஊட்டச்சத்து வாரம் செப்டம்பர் 1 முதல் 7 ஆம் தேதி வரை கடைப்பிடிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகம் இந்நிகழ்வினை செயல்படுத்தவுள்ளது.
- இதனுடைய முக்கிய குறிக்கோள் ஆரோக்கியமான உடல் நலத்திற்கு ஊட்டச்சத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதாகும். ஊட்டச்சத்தானது மறைமுகமாக நாட்டின் வளர்ச்சியையும், உற்பத்தித் திறனையும், பொருளாதார வளர்ச்சியையும் பாதிக்கிறது.
- 2017 ஊட்டச்சத்து வாரத்தின் மையக்கரு: இளம் குழந்தைகளுக்கு உகந்த உணவு முறைகள் - சிறந்த குழந்தைகள் நலம் (Optimal Infant & Young child Feeding Practices: Better child Health.)

## யுனெஸ்கோ சர்வதேச எழுத்தறிவு பரிசுகள் 2017

- ❖ கல்வித் துறையில் புத்தாக்கம் செய்பவர்களுக்கும் , சிறப்பாக செயல்படுபவர்களுக்கும் 1967 ஆம் ஆண்டு முதலாக, யுனெஸ்கோ சர்வதேச எழுத்தறிவுக்கான பரிசுகள் வழங்கப்பட்டு வருகிறது.தற்போது இரண்டு யுனெஸ்கோ எழுத்தறிவு பரிசுகள் வழங்கபடுகின்றன,
    - ✓ யுனெஸ்கோ செஜோங் அரசர் எழுத்தறிவுப் பரிசு (The UNESCO King Sejong Literacy Prize)
    - ✓ யுனெஸ்கோ கன்பியூசியஸ் எழுத்தறிவுப் பரிசு (The UNESCO Confucius Prize for Literacy )

### 1. யுனெஸ்கோ செஜோங் அரசர் எழுத்தறிவுப் பரிசு (The UNESCO King Sejong Literacy Prize)

- ❖ கொரிய குடியரசின் ஆதரவுடன் 1989 ஆம் ஆண்டு இப்பரிசு நிறுவப்பட்டது. தாய்மொழிக் கல்விக்கு உதவுபவர்களுக்கு இவ்விருது முன்னுரிமை அளித்து அங்கீகரிக்கிறது .
- ❖ 2017 ஆம் ஆண்டின் விருதுக்கு தேர்வானவர்கள்:
    1. கற்றல் மற்றும் செயல்திறன் ஆய்வு மையம் – கனடா (Centre for the Study of Learning and Performance – Canada)
    2. நாங்கள் வாசிப்பை காதலிக்கிறோம் – ஜோர்டான் (We Love Reading – Jordan)

### 2. யுனெஸ்கோ கன்பியூசியஸ் எழுத்தறிவுப் பரிசு (The UNESCO Confucius Prize for Literacy )

- ❖ சீன மக்கள் குடியரசின் ஆதரவுடன் 2005 ஆம் ஆண்டில் எழுத்தறிவுக்கான யுனெஸ்கோ கன்ஃபூசியஸ் பரிசு நிறுவப்பட்டது. கிராமப்புறங்களில் உள்ள பெரியவர்கள் மற்றும் பள்ளிக்கு செல்லாத இளைஞர்கள் , குறிப்பாக பெண்களிடையே காணப்படும் பகுத்தறிவினை அங்கீகரித்து பாராட்டும் விதத்தில் இவ்விருது வழங்கப்படுகிறது.
- ❖ 2017 ஆம் ஆண்டின் விருதுக்கு தேர்வானவர்கள் / தேர்வான அமைப்புகள்:
    1. AdulTICo திட்டம் – கொலம்பியா
    2. குடிமக்கள் அறக்கட்டளை – பாகிஸ்தான்
    3. FunDza – தென் ஆப்ரிக்கா

## சூர்ய கிரண் – 2017 : இந்தியா – நேபாளம் கூட்டு இராணுவப் பயிற்சி

- ❖ இந்திய – நேபாளத்திற்கு இடையேயான 12வது இராணுவ கூட்டு பயிற்சியான சூர்யா கிரண் நேபாளத்தின் சல்ஜ்ஹண்டியில் (Saljhandi) உள்ள தேசிய இராணுவ யுத்தப்பள்ளியில் தொடங்கப்பட்டுள்ளது.
- ❖ இந்த 14 நாள் பயிற்சியானது, தீவிரவாத எதிர்ப்பு, வனப்பகுதியில் ஏற்படும் சண்டை மற்றும் இயற்கைப் பேரழிவு மேலாண்மை நடவடிக்கை ஆகியவற்றிற்கு தேவைப்படும் திறன்களின் மீது கவனம் செலுத்தும்.
- ❖ இந்த சூர்ய கிரண் பயிற்சியானது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நேபாளத்திலும் இந்தியாவிலும் மாறி மாறி நடத்தப்படும் இருதரப்பு தொடர்பயிற்சியாகும்.
- ❖ இது இந்தியா மற்ற நாடுகளுடன் நடத்தும் பயிற்சி வகைகளில் இராணுவம் பங்கேற்கும் அளவைப் பொறுத்தவரையில் மிகப்பெரிய பயிற்சியாகும்.
- ❖ இதன் 11வது பதிப்பு உத்தரகாண்டில் உள்ள பித்தோர்கார் என்ற இடத்தில் நடத்தப்பட்டது.

## 10வது உலகளாவிய விவசாய தலைமை மாநாடு – புதுதில்லி

- உலகளாவிய விவசாய தலைமை மாநாடு இந்திய உணவு மற்றும் விவசாய அமைப்பால் (Indian Council for food and Agriculture) ஆண்டுதோறும் நடத்தப்படும் நிகழ்வாகும்.
- இதன் 10வது பதிப்பு புதுதில்லியில் நடத்தப்பட்டது. இந்த பதிப்பு விவசாயத் துறை சந்திக்கும் சமீபத்திய விஷயங்கள் மீது கவனம் செலுத்தும்.
- இந்திய உணவு மற்றும் விவசாய அமைப்பு, சிந்தனையாளர் மன்றம், கொள்கை ஆராய்ச்சி, வர்த்தக நடைமுறையாக்கம், வளர்ச்சி மேம்பாடு, உணவு மற்றும் விவசாயத்தை கண்காணிக்கும் விஷயம் ஆகியவற்றில் ஒரு தலைமை அமைப்பாக ஆரம்பிக்கப்பட்டது. மேலும் இது கூட்டு ஒப்பந்தகளுக்கான உலகளாவிய அமைப்பாகவும் செயல்படுகிறது.

## சிறந்த நிர்வாகத்திற்கான பிராந்திய மாநாடு

- இந்திய அரசின் பணியாளர் நலன், பொதுமக்கள் குறைதீர்ப்பு மற்றும் ஓய்வூதிய அமைச்சகத்தின் நிர்வாக சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்கள் குறைதீர்ப்பு துறையும், கோவா அரசும் இணைந்து நல் ஆளுகை மற்றும் சிறந்த நடைமுறைகளின் பிரதிசெய்கை மீதான பிராந்திய மாநாட்டை ( Regional Conference on Good Governance & Replication of Best Practices) கோவாவில் ஏற்பாடு செய்துள்ளது.
- இம்மாநாட்டின் கருப்பொருள் : நல் ஆளுகை மற்றும் சிறந்த நடைமுறைகளின் பிரதிசெய்கை (Good Governance and Replication of Best Practices)
- மின்னாட்சி / மின் ஆளுகை, வெளிப்படைத்தன்மை, பொறுப்புடைமை (ம) குடிமக்களோடு நட்புபோக்குடைய திறன்மிகுந்த நிர்வாகம் போன்றவை மூலம் மேம்பட்ட பொதுச்சேவை வழங்குதல், குடிமக்கள் மையப்படுத்தப்பட்ட ஆளுகையை வகுத்தல் மற்றும் செயல்படுத்தல் போன்றவற்றிலுள்ள அனுபவங்களையும் பகிரும் ஓர் பொது மேடையை உருவாக்குதலே இம்மாநாட்டின் முயற்சியாகும்.

## தேசிய புலனாய்வு முகமையின் புதிய தலைவர்

- தேசிய புலனாய்வு முகமையின் தலைவராக, மூத்த ஐபிஎஸ் அதிகாரி ஒய்.சி.மோடி நியமிக்கப்பட்டுள்ளார்.

### தேசிய புலனாய்வு முகமை (National Investigation Agency)

- இது பயங்கர செயல்களை களைவதற்காக மத்திய அரசால் உருவாக்கப்பட்ட மத்திய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட அமலாக்க நிறுவனமாகும். (Central Counter Terrorism Law Enforcement Agency)
- இது மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் புதுதில்லியை தலைமையிடமாகக் கொண்டு செயல்படுகின்றது.

## ஐ.நா அமைதிப் பரிசு

- ஜன்னா முஸ்தபா எனும் நைஜீரிய வழக்கறிஞருக்கு நான்சென் (Nansen) விருது எனப்படும் வருடாந்திர ஐ.நா. அவையின் அமைதிக்கான விருது வழங்கப்பட்டுள்ளது.
- நைஜீரிய பயங்கரவாத குழுவான போகோ ஹராமால் கடத்தப்பட்ட நூறு பள்ளிச்சிறுமிகளை மீட்பதற்கு மேற்கொள்ளப்பட்ட சமரச பேச்சுவார்த்தையிலும், வடகிழக்கு நைஜிரியாவில் வறுமை, அரசு மற்றும் தீவிரவாத குழுக்களுக்கிடையேயான சண்டைகளால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் வாழ்க்கை மேம்பாட்டிலும் முக்கிய பங்காற்றியதால் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

### போகோஹராம் – ஒரு பார்வை

- ஆப்பிரிக்க கண்டத்திலுள்ள நைஜீரியாவில் 2002ல் நிறுவப்பட்ட ஓர் இஸ்லாமிய பயங்கரவாத குழு.
- மேற்கத்திய கல்வி மற்றும் கலாச்சார எதிர்ப்பு, கலிபா ஆட்சியின் கீழான ஒன்றிணைக்கப்பட்ட இஸ்லாமிய தேசத்தை உருவாக்குதல் இதன் நோக்கமாகும்.
- 2013ல் சர்வதேச தீவிரவாத குழுவாக பிரகடனப்படுத்தப்பட்டு தற்போது இவற்றின் ஆதிக்கப் பகுதிகள் இராணுவத்தால் மீட்கப்பட்டு வருகின்றன.

## வோன் ஹிப்பில் விருது 2017 – சி.என்.ஆர் ராவ்

- 2017- வோன் ஹிப்பில் விருது புகழ்பெற்ற அறிவியலாளர் மற்றும் பாரத ரத்னா விருது பெற்ற பேராசிரியர் C.N.R ராவிற்கு வழங்கப்பட்டு உள்ளது.
- இது அறிவியல் மூலப் பொருட்கள் (Scientific material) ஆராய்ச்சியில் சர்வதேச அளவில் வழங்கப்படும் உயரிய விருதாகும்.
- C.N.R ராவ் இவ்விருதைப் பெறும் முதல் இந்தியர் மற்றும் ஆசியர் ஆவார்.
- நானோ பொருட்களான கிராபின், மீள் கடத்தல் (Super Conductivity), 2D பொருட்கள், பெரும் மின்காந்த தடுப்பு (Magneto Resistance) ஆகிய விஷயங்கள் உட்பட பல புதுமையான பொருட்களின் செயல்பாட்டு மேம்பாட்டிற்கு அவர் அளித்த பல்திறன் திறமைகளின் பங்களிப்பின் பொருட்டு அவருக்கு இவ்விருது அமெரிக்காவின் போஸ்டன் நகரத்தில் இவ்வருடம் நவம்பர் மாதம் வழங்கப்பட இருக்கிறது.

## சாந்தி ஸ்வரூப் பட்நாகர் விருது

- CSIR எனும் மத்திய அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கவுன்சிலால் ஆண்டுதோறும் உயிரியல், வேதியியல், சுற்றுச்சூழல், அறிவியல், கணிதம், மருத்துவம், இயற்பியல் போன்றவற்றில் மேற்கொள்ளப்படும் பயன்பாட்டு அல்லது அடிப்படை ஆராய்ச்சியில் குறிப்பிடத்தக்க, சிறந்த பங்களிப்பினை அளிப்பவர்களுக்கு சாந்தி ஸ்வரூப் பட்நாகர் விருது வழங்கப்படும்.
- இந்தியாவில் அறிவியலின் பல்துறைகளில் வழங்கப்படும் மிக உயரிய விருதாகும்.
- மத்திய அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சிக் குழுவின் நிறுவனரான சாந்தி ஸ்வரூப் பட்நாகரின் பெயரில் இவ்விருது வழங்கப்படுகிறது.
- 1958-ல் இவ்விருது முதன்முதலில் வழங்கப்பட்டது.

### 2017 ஆம் ஆண்டின் விருது பெற்றவர்கள்

#### உயிரியல் துறை

- தீபக் நாயர், (மண்டல உயிர்த் தொழில்நுட்ப மையம்,பரிதாபாத்(
- சஞ்சீவ தாஸ் (டெல்லி -தேசிய நோய் எதிர்ப்பியல் மையம்)

#### வேதியியல் துறை

- நரேஷ் பட்வாரி ( மும்பை- இந்திய தொழில்நுட்பக் கழகம்)

#### புவி அறிவியல்

- சுரேஷ் பிரபு (விக்ரம் சாராபாய் விண்வெளி ஆராய்ச்சி மையம் திருவனந்தபுரம்)

#### பொறியியல் துறை

- அலோக் பால் இந்திய தொழில்நுட்பக் கழகம்),பெங்களூரு(

- நீலேஸ் மேத்தா இந்திய அறிவியல் ஆய்வுக் கழகம்), பெங்களூரு(

**மருத்துவத் துறை**

- அமித்பட் டாட்டா நினைவியல் மையம்), மும்பை(
- தீபக் கௌர் யூ.என்.ஜே), டெல்லி(

**இயற்பியல் துறை**

- நிசிம் கானோகர், (டாடா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனம் , புனே(
- வினய் குப்தா தேசிய இயற்பியல் ஆய்வகம்), டெல்லி(

## புளூட்டோவின் மலைகளுக்கு டென்சிங் நார்கே, எட்மண்ட் ஹிலாரி பெயர்கள் சூட்டல்

- சர்வதேச வானவியல் அமைப்பு, புளூட்டோ கிரகத்தில் உள்ள இரண்டு மலைத் தொடர்களுக்கு டென்சிங் நார்கே மற்றும் எட்மண்ட் ஹிலாரி ஆகியோரின் பெயர்களைச் சூட்டியுள்ளது.
- ஜீலை 2015ல் புளூட்டோவிற்கு மிக அருகில் நியூ ஹாரிஜான் என்ற விண்கலம் பறந்த பின் அக்கிரகத்தில் பெயரிடப்பட்ட முதல் நில அமைப்புகள் இவையே ஆகும்.



- புளூட்டோவில் உள்ள நில அமைப்புகளுக்கு அலுவல் ரீதியில் பெயரிடுவதற்கு சர்வதேச வானவியல் அமைப்பின் கோள்களுக்கு பெயரிடுதலின் செயற்குழு ஒப்புதலளிப்பது இதுவே முதல்முறையாகும். சர்வதேச வானவியல் நிறுவனம் விண்கோள்களுக்கும் அவற்றின் நில அமைப்புகளுக்கும் பெயரிடுவதற்குச் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பாகும்.
- முதன்முதலாக எவரெஸ்ட் சிகரத்தின் மீது ஏறி வெற்றிகரமாக திரும்பிய டென்சிங் நார்கே (1914 – 1986) என்ற இந்திய – நேபாளி ஷெர்பாவையும் எட்மண்ட் ஹிலாரி என்ற நியூலாந்து நாட்டவரையும் பெருமைப்படுத்தும் வகையில் இம்மலைகளுக்கு அவர்களது பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.

# விளையாட்டுச்செய்திகள்

## டென்னிஸ், அமெரிக்க ஓபன்-2017

### ஆடவர் ஒற்றையர் பிரிவு- ரஃபேல் நடால் சாம்பியன்



- அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவு பட்டத்துக்கான இறுதிச்சுற்றில், ஸ்பெயினின் ரஃபேல் நடால், தென் ஆப்பிரிக்காவின் கெவின் ஆன்டர்சனை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றார்.
- நடாலின் கிராண்ட்ஸ்லாம் வரலாற்றில் இது 16-வது பட்டமாகும். அதேவேளையில், இந்த ஆண்டில் இரண்டு கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார். இதற்கு முன்பு பிரெஞ்சு ஓபனை வென்றார். மேலும் இது அவருடைய மூன்றாவது அமெரிக்க ஓபன் பட்டமாகும்.

### மகளிர் ஒற்றையர் பிரிவு- ஸ்டீபன்ஸ் சாம்பியன்



- அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவில் அமெரிக்காவின் ஸ்லோன் ஸ்டீபன்ஸ், சகநாட்டவரான மேடிசன் கீஸை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றார். இது அவர் வெல்லும் முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.

### டென்னிஸ் US ஓபன் பற்றி

- அமெரிக்க ஓபன் டென்னிஸ் சாம்பியன்ஷிப் ஆனது செயற்கை இழையிலான கடின தரையில் நடத்தப்படும் போட்டியாகும். 1987ம் வருடத்திலிருந்து ஒரு வருடத்தில் நடத்தப்படும் கிராண்ட்ஸ்லாம் போட்டிகளின் காலவரிசையில் நான்காவதாக நடத்தப்படும் போட்டி அமெரிக்க ஓபன் போட்டியாகும். காலவரிசையில் நடத்தப்படும் மற்ற மூன்று போட்டிகளாவன: ஆஸ்திரேலியன் ஓபன், பிரஞ்சு ஓபன், விம்பிள்டன். அமெரிக்க ஓபன் ஒவ்வொரு வருடமும் ஆகஸ்டு மாதத்தின் கடைசி திங்கட்கிழமை தொடங்கி செப்டம்பர் வரையில் இரண்டு வார கால அளவிற்கு நடைபெறும்.

## பிரகாஷ் படுகோனுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது



- பாட்மிண்டன் ஜாம்பவான் பிரகாஷ் படுகோனுக்கு இந்திய பாட்மிண்டன் சங்கம் சார்பில் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- பாட்மிண்டன் விளையாட்டுக்காக பிரகாஷ் படுகோன் செய்த பங்களிப்பைப் பாராட்டி அவருக்கு இந்த வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்படுகிறது. இனிவரும் ஒவ்வொரு ஆண்டும் பாட்மிண்டன் விளையாட்டின் வளர்ச்சிக்காக பாடுபடுபவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்குவது என இந்திய பாட்மிண்டன் சங்க செயற்குழு முடிவு செய்துள்ளது.

## பாரிஸ் , லாஸ் ஏஞ்சல்ஸ் நகரங்களில் அடுத்த ஒலிம்பிக் விளையாட்டுகள்

- சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் கூட்டம் பெரு தலை நகர் லிமாவில் நடைபெற்றது. இதன் முடிவில், 2024-ம் ஆண்டில் பாரீஸ் நகரமும், 2028-ம் ஆண்டில் லாஸ் ஏஞ்சலீஸ் நகரமும் ஒலிம்பிக் போட்டிகளை நடத்த ஏகமனதாக முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச டென்னிஸ் கூட்டமைப்பு பட்டம்

- தாய்லாந்தில் நடைபெற்ற சர்வதேச டென்னிஸ் கூட்டமைப்புப் போட்டியின் (ITF Tennis Tournament) மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் ருத்துஜா போஸ்லே சீனாவின் ஹுவா-சென்-லீயை வீழ்த்தி பட்டம் வென்றார்.




## சிந்துவுக்கு சாம்பியன் பட்டம்

- தென் கொரிய தலைநகர் சியோலில் 'கொரியா சூப்பர் சீரீஸ் பாட்மிண்டன்' போட்டியின்

பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் பி.வி. சிந்து ஜப்பான் வீராங்கனை நசோமி ஹோகுஹராவை வீழ்த்தி சாம்பியன் பட்டம் பெற்றுள்ளார்.



- ❖ இதன் மூலம் கொரியா சூப்பர் சீரீஸ் பாட்மிண்டன் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற முதல் இந்திய வீராங்கனை என்ற சாதனை படைத்துள்ளார்.

## ஆசிய சாம்பியன் - சித்ரா மற்றும் லக்ஷ்மணன் தங்கம்

- ❖ ஆசிய சாம்பியன் ஜி.லக்ஷ்மணன் மற்றும் பி.யு.சித்ரா ஆசிய உள்ளரங்க மற்றும் தற்காப்பு விளையாட்டு போட்டிகளின் தடகளப் பிரிவில் தங்கம் வென்றார்கள்.
- ❖ ஆண்கள் 3000m பிரிவை 8:02.30 நொடியில் கடந்து லக்ஷ்மணன் தங்கம் வென்றுள்ளார்.
- ❖ சித்ரா பெண்கள் 1500m பிரிவை 4:27.77 நொடியில் கடந்து தங்கம் வென்றுள்ளார்.

## அஜய் குமார் சரோஜூக்கு தங்கம்

- ❖ துர்க்மெனிஸ்தானில் நடைபெற்று வரும் ஐந்தாவது உள்ளரங்கு மற்றும் தற்காப்புக் கலை விளையாட்டுப் போட்டியில் ஆசிய சாம்பியனான அஜய் குமார் சரோஜ் ஆண்களுக்கான 1500 மீட்டர் ஓட்டத்தில் தங்கம் வென்றுள்ளார்.

## ஆசிய புல்தரை பந்துவீச்சுப் போட்டி

- ❖ இந்தியா 10 வது ஆசிய 25 வயதுக்குட்பட்டோருக்கான புல்தரை பந்துவீச்சு சாம்பியன்ஷிப் போட்டியையும், ஆசிய புல்தரை பந்துவீச்சு சாம்பியன் ஷிப் போட்டியையும் முதன்முறையாக நடத்த உள்ளது.
- ❖ இந்தியா பந்துவீச்சு கூட்டமைப்பு (Bowling federation of india) இந்த போட்டியை புதுதில்லியில் நடத்த திட்டமிட்டுள்ளது.

## ஜப்பான் பாட்மிண்டன் சாம்பியன்

- ❖ ஜப்பான் ஓபன் பாட்மின்டன் போட்டியில் டென்மார்க்கை சேர்ந்த பாட்மின்டன் உலக சாம்பியனான விக்டர் அசெல்சன் மலேசியாவின் லீசாங்வெய்-யை தோற்கடித்து தன் முதல் ஜப்பான் பாட்மின்டன் சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

### 57வது தேசியத் தடகள சாம்பியன் ஷிப் போட்டி

சென்னையில் நடைபெற்று வரும் 57வது தேசிய தடகள போட்டியில்,

- தமிழகத்தை சேர்ந்த G. இலட்சுமணன் ஆண்களுக்கான 5000 மீட்டர் ஓட்டத்தில் தங்கம் வென்றுள்ளார்.
- மகளிருக்கான 5000 மீட்டர் ஓட்டத்தில் எல். சூர்யா தங்கம் வென்றுள்ளார்.
- ஆண்களுக்கான குண்டு எறிதல் போட்டியில் தேஜிந்தர் பால்சிங் தங்கம் வென்றுள்ளார்.
- பெண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் சரிதா பி.சிங் தங்கம் வென்றுள்ளார்.

### ஆசிய உள்ளரங்க விளையாட்டுப் போட்டி

- ஆசிய உள்ளரங்க விளையாட்டுப் போட்டியில் இந்தியாவின் சௌரவ் கோத்தாரி மேசைப் பந்தாட்டத்தில் (பில்லியர்ட்ஸ்) தங்கம் வென்றுள்ளார்.
- இவ்வருட கோற்பந்து (Cue Sports) விளையாட்டில் இது முதல் பதக்கமாகும்.

# இதரச் செய்திகள்

### உலக தேங்காய் தினம் – செப்டம்பர் 2

- செப்டம்பர் 2 ம் தேதி உலக தேங்காய் தினம் கொண்டாடப்படுகிறது. இந்தியாவில் இந்த நிகழ்வு தென்னை வளர்ச்சி வாரியத்தால் (Coconut Development Board) ஏற்பாடு செய்யப்பட்டது.
- இந்தோனேசியாவின் தலைநகர் ஜகர்த்தாவை தலைமை இடமாகக் கொண்டு இயங்கும் ஆசிய மற்றும் பசிபிக் தென்னை வளர்ப்புக் குழு (Asian and Pacific Coconut Community - APCC) நிறுவப்பட்ட தினத்தோடு ஒன்றி வரும் வகையில் , செப்டம்பர் 2 ஆம் தேதி உலக தேங்காய் தினமாக கடைபிடிக்கப்படுகிறது.
- ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் தென்னை வளர்ப்பை ஊக்குவிப்பதற்கும், ஒருங்கிணைப்பதற்கும் இந்த அமைப்பு நிறுவப்பட்டது.
- உறுப்பினர்கள் எண்ணிக்கை: 18
- இந்தியா உட்பட அனைத்து முக்கிய தென்னை வளர்ப்பு நாடுகளும் ஆசிய மற்றும் பசிபிக் தென்னை வளர்ப்புக் குழுவின் உறுப்பினர்கள் ஆவர் .
- 2017 ஆம் ஆண்டு உலக தேங்காய் தினத்திற்கான கருப்பொருள்: குடும்ப ஊட்டச்சத்து, உடல்நலம் மற்றும் ஆரோக்கியத்திற்காக தேங்காய் (Coconut for Family Nutrition, Health and Wellness)

### தேசிய ஆசிரியர் தினம் - செப்டம்பர் 5

- ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் மாதம் 5ம் தேதி ஆசிரியர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. 1888ம் ஆண்டு செப்டம்பர் 5ம் தேதி பிறந்த டாக்டர் சர்வப்பள்ளி ராதாகிருஷ்ணனின் பிறந்த நாளை நினைவு கோரும் வகையில் இது கொண்டாடப்பட்டு வருகிறது.
- டாக்டர் இராதாகிருஷ்ணன் இந்தியாவின் முதல் துணை ஜனாதிபதி மற்றும் இரண்டாவது ஜனாதிபதி ஆவார். இவர் மிகச் சிறந்த அறிஞர், தத்துவவியலாளர் மற்றும் பாரத ரத்னா விருது பெற்றவர். 1962ல் அவர் ஜனாதிபதியாக பொறுப்பேற்ற வருடத்திலிருந்து அவரது பிறந்த நாளை ஆசிரியர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் ஆசிரியர் தினமாக இந்தியா அந்நாளை கொண்டாடிவருகிறது.

## தெற்கு – தெற்கு ஒத்துழைப்பிற்கான ஐநா சர்வதேச நாள் – செப்டம்பர் – 12

United Nations
Office for South-South Cooperation



- தெற்கு – தெற்கு ஒத்துழைப்பு என்பது தென்கோளத்தில் உள்ள நாடுகள் மற்றும் மக்களிடையே தங்கள் தேசிய நலன், தங்கள் தேசிய மற்றும் சுயசார்பை அடைவதற்கான ஒத்துழைப்பின் வெளியிடாகும்.
- இது சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வளர்ச்சி இலக்குகள் மற்றும் 2030 வருடத்திற்கான நீடித்த மேம்பாட்டிற்கான இலக்கை அடைவதையும் முக்கிய இலக்காகக் கொண்டுள்ளது.
- தெற்கு – தெற்கு ஒத்துழைப்பு என்ற வார்த்தைப் பதமானது வளங்கள், தொழில்நுட்பம் மற்றும் அறிவு மூலங்களை வளரும் நாடுகளிடையே பகிர்ந்து கொள்கை வடிவமைப்பாளர்களாலும் உபயோகப்படுத்தப்படுகிறது.
- இந்த ஒத்துழைப்பை மேம்படுத்தும் வகையில், உலக தெற்கு – தெற்கு ஒத்துழைப்பு கண்காட்சி 2017 துருக்கியக் குடியரசால் நவம்பர் 27 முதல் 30 வரை அன்பில்யா என்ற இடத்தில் நடத்தப்பட இருக்கிறது.

## உலகின் மிக விலை உயர்ந்த காப்பி – இந்தியா உற்பத்தி

- இந்தியா காபி உற்பத்தி மற்றும் ஏற்றுமதி செய்யும் ஆசியாவின் 3வது பெரிய நாடு ஆகும்.
- தற்போது உலகின் மிகவும் விலையுயர்ந்த காபியான, புனுகுப் பூனையின் (Civet Cat) செரிமானக் கழிவில் இருந்து பெறப்படும் காபியை சிறிய அளவில் கர்நாடகத்தின் கூர்க் மாவட்டத்தில் இந்தியா உற்பத்தி செய்ய உள்ளது.
- சிவெட் காப்பி, லுவார்க் காப்பி எனவும் அழைக்கப்படும் இக்காப்பியானது பொது வழக்கத்தில் இல்லாத உற்பத்தி முறையில் பிரித்தெடுக்கப்படுவதால் (Extract) விலை உயர்ந்ததாகும்



- இந்தக் காப்பி கொட்டைகள் புனுகுப் பூனைகள் தின்று செரித்து வெளியிடும் மீதிகளை சேகரித்து, செயல்முறைப் படுத்தப்பட்டு (Processed) தயாரிக்கப்படுகின்றது.

### தேசிய இந்தி திவாஸ்: செப்டம்பர் 14

- தேசிய இந்தி திவாஸ் எனும் வருடாந்திர இலக்கிய தினம் ஆண்டுதோறும் செப்டம்பர் 14 ஆம் நாள் இந்தியாவின் இந்திமொழி பேசும் பகுதிகளிலும், இந்தி பேசும் மக்களுடைய பிற நாடுகளிலும் கொண்டாடப்படுகின்றது.
- இந்தி மொழி, அதன் பாரம்பரியம் மற்றும் அதன் மதிப்புகளை வளர்ப்பதே இத்தகு அனுசரித்தலின் நோக்கம்.

### இர்மா சூறாவளி – கரீபியன் தீவுகளைத் தாக்கியது

- அட்லாண்டிக் பெருங்கடலில் உருவான மிகவும் சக்தி வாய்ந்த இர்மா (Irma) என்ற சூறாவளி மணிக்கு 185 மைல்கள் என்ற காற்றின் வேகத்தில் கரீபியன் தீவுகள் முழுவதும் சுழன்று அடித்தது.

### சர்வதேச எழுத்தறிவு தினம் – செப்டம்பர் 8

- ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் 8ம் தேதி சர்வதேச எழுத்தறிவு தினமாக உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது. 1966ல் தன்னுடைய 14வது கூட்டத்தில் யுனெஸ்கோ செப்டம்பர் 8ம் தேதியை சர்வதேச எழுத்தறிவு தினமாக அறிவித்தது.
- இந்த தினத்தை அனுசரிப்பதன் முக்கிய அம்சமானது. எழுத்தறிவின்மைக்கு எதிரான போராட்டத்திற்கு ஆதரவாக மக்களின் கருத்துக்களை ஒருங்கிணைப்பதாகும்.
- சர்வதேச எழுத்தறிவு தினம் என்பது எழுத்தறிவைப் பற்றிய தகவல்களை பரப்புவதற்கும், பொதுமக்களிடம் எழுத்தறிவை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், தனிநபருக்கும் தேசிய வளர்ச்சிக்கும் எழுத்தறிவின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்கும் பயன்படும் ஒரு மேடையாகும்.
- 2017ம் ஆண்டுக்கான கருத்துரு: எண்ம (Digital) உலகில் எழுத்தறிவு.

### முதல் தேசிய வேட்டைநாய் (கேனைன் – Canine) கருத்தரங்கம் – மானேசர் (குருகிராம்), ஹரியானா

- இந்தியாவின் முதல் தேசிய வேட்டைநாய் கருத்தரங்கம் ஹரியானாவில் குருகிராம் எனப்படும்

மானேசரில் நடத்தப்பட்டது. கருப்பு பூனைகள் என்றறியப்படும் தேசிய பாதுகாப்பு படை (NSG) இதனை நடத்துகின்றது.


- இக்கருத்தரங்கானது நாய்களுக்கானப் பயிற்சிகள் மற்றும் தீவிரவாத எதிர்ப்புப் பயிற்சிகளில் வேட்டை நாய்களைப் பயன்படுத்தும் யுக்திகள் பற்றி விவாதிப்பதற்காகவும் அதற்கான நுட்பங்கள் பற்றி ஆராயவும் நடத்தப்படுகின்றது.
- இதற்கான கருத்துருவானது – "தீவிரவாத எதிர்ப்புச்சண்டையில் வேட்டைநாய் ஒரு தந்திரமான கருவி" என்பதாகும்.

## உலக ஓசோன் தினம்

- விசாகப்பட்டினத்தில் உள்ள இந்திரா காந்தி வன உயிரியல் பூங்காவில் உலக ஓசோன் தினம் கடைபிடிக்கப்பட்டது.
- உலக ஓசோன் தினம் – செப்டம்பர் 16.
- ஓசோன் படல சிதைவின் விளைவுகள் மற்றும் அதனைப் பாதுகாக்க வேண்டிய நடைமுறைகளைப் பற்றிய விரிவான விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த இத்தினம் அனுசரிக்கப்பட்டது.

## 3-ஆம் நூற்றாண்டிலேயே பூஜ்ஜியத்தை பயன்படுத்திய இந்தியர்கள் - ஆக்ஸ்ஃபோர்டு ஆய்வில் தகவல்

- பாகிஸ்தானில் உள்ள பக்சாலி பகுதியில் இருந்து ஓலைச்சுவடிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த ஓலைச்சுவடிகள் "கார்பன் டேட்டிங்' (கதிரியக்க கார்பன் மூலம் காலத்தைக் கணிப்பது) முறையில் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழக ஆய்வில் மறு ஆய்வு செய்யப்பட்டது. அப்போது, இந்த ஓலைச்சுவடிகள் 3-ஆம் நூற்றாண்டு அல்லது 4-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்பது உறுதி செய்யப்பட்டது.



- இதன்மூலம், மூன்றாம் நூற்றாண்டு காலகட்டத்திலேயே பூஜ்ஜியத்தை இந்தியர்கள் பயன்படுத்தியது தெரியவந்துள்ளது
- இதற்கு முன்பு 8-ஆம் நூற்றாண்டில்தான் இந்தியர்கள் பூஜ்ஜியத்தைப் பயன்படுத்தினார்கள் என்று பிற ஆய்வு முடிவுகள் தெரிவித்திருந்தன.

## ஆக்டோபஸ் நகரங்கள்

- ஆக்ட்லாண்டிஸ் எனும் ஆக்டோபஸ்களால் கட்டமைக்கப்பட்ட ஆழ்கடல் நகரத்தை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இந்த இடங்களில் நிற மாற்றம் மற்றும் துரத்துதல் மூலமாக ஆக்டோபஸ்கள் தங்களுக்குள் தகவல் பரிமாற்றங்களை மேற்கொள்கின்றன.
- இது ஆஸ்திரேலியாவின் கிழக்கு கடல் பகுதியில் அமைந்துள்ள இரண்டாவது இருண்ட நகரமாகும். ஆஸ்திரேலியாவின் ஜார்விஸ் விரிகுடாவில் இதே போன்ற ஆக்டோபஸ் நகரம் 2009 ஆம் ஆண்டு முதல் முறையாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

## வண்டலூர் உயிரியல் பூங்காவில் புதிய விலங்குகள்

- வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா வனவிலங்கியல் பூங்காவிற்கு ஒரிஸா தலைநகர் புவனேஸ்வரிலுள்ள நந்தன்கனன் வனவிலங்கியல் பூங்காவிலிருந்து 19 விலங்குகள் கொண்டு வரப்பட உள்ளன.
- நீர் உடும்புகளும் இமாலய கருப்பு கரடிகளும் சையாமிஸ் முதலைகளும் வண்டலூர் வனவிலங்கியல் பூங்காவிற்கு கொண்டுவரப்பட உள்ளன.

## சர்வதேச அமைதி தினம் – செப்டம்பர் 21

- உலகம் முழுவதும் செப்டம்பர் 21 அன்று சர்வதேச அமைதி தினம் அனுசரிக்கப்பட்டது. ஐ.நா பொதுச்சபை அமைதியின் நோக்கங்களை மக்களிடத்தும் நாடுகளிடத்தும் பலப்படுத்தும் பொருட்டு இத்தினத்தை அமைதி தினமாக அறிவித்தது.
- 2017 ஆம் ஆண்டிற்கான கருத்துரு – "அமைதிக்காக ஒற்றுமையுடன் இருத்தல்: அனைவருக்கும் மரியாதை, பாதுகாப்பு மற்றும் கண்ணியம்".
- இவ்வருடம் சர்வதேச அமைதி தினம் உலகம் முழுவதுமுள்ள மக்களை அகதிகளுக்கும் . வந்தேரிகளுக்கும் ஆதரவு தெரிவிக்கும் பொருட்டு ஈடுபடுத்தவும் ஒன்று திரட்டவும் கவனம் செலுத்துகிறது.

## உலக சுற்றுலா தினம் – September 27



- கத்தாரின் தோஹாவில் நடைபெற்ற இந்த வருட உலக சுற்றுலா தினக் கொண்டாட்டம் எப்படி நீடித்த சுற்றுலாவானது வளர்ச்சிக்குப் பங்களிக்க வல்லது என்பதை மையமாக கொண்டது.
- சர்வதேச சுற்றுலாவின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கும் வகையில் ஐ.நா சபையின் பொது அவை 2017 ஆம் ஆண்டை நீடித்த வளர்ச்சிக்கான சர்வதேச சுற்றுலா ஆண்டாக பிரகடனப்படுத்தி உள்ளது.

## ஸ்பீட்பே (Speedpay) – கைப்பேசி பணப்பை




- பஞ்சாப் நேஷனல் வங்கி மற்றும் BSNL நிறுவனம் இணைந்து ஸ்பீட்பே (Speedpay) எனும் கைப்பேசி பணப்பை (mobile wallet) சேவையை தொடங்கியுள்ளன.
- பிற கைப்பேசி பணப்பை வசதிகளைப் போல ஸ்பீடுபேயின் வழி கட்டணங்களை செலுத்துதல், மீள் நிரப்புதல் (Recharge) செய்தலோடு கூடுதலாக இதன் பயன்பாட்டாளர்கள் அங்கீகரிக்கப்பட்ட சில்லறை விற்பனை நிலையங்கள் மூலம் ஸ்பீடுபேயின் வழி பணம் எடுத்தல் மற்றும் பணம் செலுத்தலையும் மேற்கொள்ளலாம்.
- மேலும், இதன் பயன்பாட்டாளர்கள் இந்த செயலியின் வழியாக இணைய வழி வங்கியியல் சேவையையும் (Internet Banking) இயக்க முடியும்.
- இந்தியா தற்போது 120 கோடி கைப்பேசி பயன்பாட்டாளர்களை உடைய உலகின் இரண்டாவது மிகப்பெரிய சந்தை ஆகும்.

## உலக ஓசோன் தினம் – செப்டம்பர் 16

- செப்டம்பர் 16 ஆம் நாள் ஐ.நா. பொது அவையால் ஓசோன் படல பாதுகாப்பிற்கான சர்வதேச நாளாக அறிவிக்கப்பட்டு அனுசரிக்கப்படுகிறது.
- 2017 ஆம் ஆண்டு மான்ட்ரியல் உடன்படிக்கையின் முப்பதாவது வருட ஆண்டு தினமாக கடைபிடிக்கப் படுகிறது.
- இந்த ஆண்டு விழாக் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, ஓசோன் செயலகம் ஓசோன் ஹீரோக்கள் (Ozone Heroes) என்ற பரப்புரையை துவக்கவுள்ளது.

    1) ஓசோன் படலத்தையும் பருவநிலையையும் பாதுகாப்பதற்காக மாண்ட்ரியல் உடன்படிக்கையின் சாதனைகளை கொண்டாடுவதற்காகவும்,
    2) 2016 ஆம் ஆண்டு கிகாலி ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட புதிய விதிமுறையான உலக வெப்பமயமாதலுக்கு காரணமான ஹைட்ரோ புளோரோ கார்பன்களை பயன்பாட்டிலிருந்து குறைக்கும் முடிவை பரப்புவதற்காகவும்,

இந்த பரப்புரை பயன்படும்.

**பின்னணி**

- மாண்ட்ரியல் உடன்படிக்கை 1989 ஆம் ஆண்டு ஜனவரி 1-ம் தேதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒரு சர்வதேச உடன்படிக்கையாகும்.
- இது ஓசோன் படலத்தை சிதைக்கும் எண்ணிலடங்கா பொருட்களின் உற்பத்தியை குறைத்து ஓசோன் படலத்தை பாதுகாக்க ஏற்படுத்தப்பட்டது.
- 2009-ம் ஆண்டு செப்டம்பர் 16-ம் நாள் வியன்னா உடன்படிக்கையும், மாண்ட்ரியல் உடன்படிக்கையும் ஐ.நா. சபையின் வரலாற்றில் சர்வதேச நாடுகள் அனைத்தும் இசைவு தெரிவித்த முதல் ஒப்பந்தங்களாகும்.
- ஓசோனை சிதைக்கும் பொருட்களின் மீதான மாண்ட்ரியல் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட நாடுகள் 2016-ம் ஆண்டு அக்டோபர் 15-ஆம் நாளில் ருவாண்டாவின் தலைநகரான கிகாலியில் தங்களது 28-வது கூட்டத்தில் ஹைட்ரோ புளோரோ கார்பன்களின் பயன்பாட்டைக் குறைப்பதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

-------------